Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 01 வெள்ளிக்கிழமை (18.10.2013) பக்கங்கள் 20 ஓசை - 018

Tilko Jaffna City Hotel
❖ Banquet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E-Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
TP - 0212225969
Hotline: 0212229497
(C/3110)

## மாகாண முதலமைச்சர்களும் அமைச்சரவைக் கூட்டத்தில்

### புதிய நடைமுறை விரைவில்

அமைச்சரவை கூட்டத்திற்கு சகல மாகாணங்களின் முதலமைச்சர்களையும் அழைப்பதற்கு இப்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் இறுதி வாரத்தில் நடைபெறும் அமைச்சரவைக்கூட்டத்திலேயே ஒன்பது மாகாணங்களின் முதலமைச்சர்களும் பங்கேற்கவிருக்கின்றனர். அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கு முன்னர் முதலமைச்சர்கள் பங்கேற்ற போதிலும் சில காலங்களுக்கு முன்னர் அது நிறுத்தப்பட்டது.

இம்மாதத்திற்கான இறுதி அமைச்சரவைக்கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி வியாழக்

(19) ஆம் பக்கம் பார்க்க

## தேர்முட்டியில் பெண்ணின் சடலம்; கொலை என்று சந்தேகம்

(கொக்குவில்)

கோவிலின் தேர் முட்டி கட்டடத்திலிருந்து பெண்ணின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது. யாழ்.,கே.கே. எஸ்.வீதி நாச்சிமார் தேர் முட்டி கட்டடத்தின் மேல்பகுதியிலிருந்தே இந்தச் சடலம் நேற்று பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

தேர் முட்டி கட்டடத்தின் மேல்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாக யாழ்.பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்தே பொலிஸார் 35 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரின் சடலத்தை மீட்டுள்ளனர்.

தலையில் அடிகாயங்களுடனும் முகம் எரிந்த நிலையிலும் இச்சடலம் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த பெண்ணைச் சில நாட்களுக்கு முன்னர் கொலை செய்துவிட்டு சடலத்தை இங்கு கொண்டு வந்து போட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை யாழ்.பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மீண்டும் ஜனாதிபதி முன்பாக சத்தியப்பிரமாணம் செய்தார் விக்கி

## அமைச்சுக்கள் 13 முதலமைச்சர் வசம்



(கொழும்பு)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மாகாண அமைச்சுப் பொறுப்புக்கள் பலவற்றைக் கைவசம் வைத்துள்ளார். தனது அமைச்சுப் பதவிப் பொறுப்புக்களுக்காக நேற்று ஜனாதிபதி முன்னிலையில் அவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

வடமாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் 13 முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களுக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று முற்பகல் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

வட மாகாண சபையின் நிதி திட்டமிடல் சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி மற்றும் வீதி அபிவிருத்தி, மின்சாரம், வீடு மற்றும் கட்டுமாணம், நீர்ப்பாசனம், நுகர்வோர் அபிவிருத்தி, சமூக சேவை மற்றும் புனர்வாழ்வு, மகளிர் விவகாரம், தொழில் மற்றும் விவசாய அபிவிருத்தி, சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள், நிர்வாக மற்றும் உணவு விநியோக அமைச்சுப் பொறுப்புக்கள் வட மாகாணசபை முதலமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான நிமல் சிறிபாலடி சில்வா, சுசில் பிரேமஜயந்த, டளஸ் அழகப்பெரும, அநுர பிரியதர்ஷன யாப்பா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### வடமாகாண் சபையில் 17 இற்கு மேற்பட்ட அமைச்சுப் பிரிவுகள்

(கொழும்பு)

வடமாகாண நிர்வாகம் 17 இற்கு மேற்பட்ட அமைச்சுப் பிரிவுகளுடன் இயங்கவுள்ளது. முக்கியமான 13 அமைச்சுப் பிரிவுகள் முதலமைச்சர் வசம் இருக்கும் என்றும், இதனைவிட ஏனைய நான்கு அமைச்சர்களிடமும் ஒன்றுக்கு மேற்பட்ட அமைச்சு பிரிவுகளுக்கான பொறுப்புக்களும், அதிகாரங்களும் கையளிக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே இந்த பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்

### எதிர்க்கட்சித் தலைவராக கமலேந்திரன் பதவிப் பிரமாணம்



(கொழும்பு)

வடக்கு மாகாணசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த அனைவரும் நேற்று ஜனாதிபதி முன்னிலையில் தமது பதவிப் பிரமாணங்களை மேற்கொண்டனர்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்டு வெற்றியீட்டிய க.கமலேந்திரன் நேற்றைய தினம் வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

வடமாகாணசபைத் தேர்தலில் வெற்றிபெற்ற ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

(19) ஆம் பக்கம் பார்க்க

09

தரத்தை உயர்த்த

11

முடிவு

18

குடியுரிமை

## முல்லையில் தற்காலிக வீடுகள் ஆயிரத்து 300 நிர்மாணிப்பு

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மீள்குடியேறியுள்ள மக்களுக்கு சோஆ நிறுவனத்தினால் ஆயிரத்து 300 தற்காலிக வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக சோஆ நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் இராசநாயகம் றொணி தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் புதுக்குடியிருப்பில் மீள்குடியேறியுள்ள மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் உட்பட பல்வேறு வேலைத்திட்டங்களை சோஆ நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது.

இதுவரை 7 கிராம அலுவலர் பிரிவுகளில் ஆயிரத்து 300 வீடுகளும், 910 குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், இப்பிரதேசங்களில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## மின்னல் தாக்கி பெண் மரணம்

வவுனியாப் பிரதேசத்தில் மின்னல் தாக்கியதினால் பெண்ணொருவர் மரணமடைந்துள்ளார். வவுனியாவில் நேற்று மாலை பெய்த கடும் மழை மற்றும் இடி, மின்னல் தாக்கமும் ஏற்பட்டுள்ளது. இதனால் வவுனியா, தாண்டிக்குளம், அரச பண்ணையில் தொழில்புரிந்த பெண்ணொருவர் மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி மரணமடைந்துள்ளார்.

மெனிக்பாம், செட்டிக்குளத்தை வதிவிடமாகக் கொண்ட மகேந்திரன் பராசக்தி என்ற 40 வயதான பெண்ணே

(19) ஆம் பக்கம் பார்க்க

### இந்திய மீனவர்கள் 36 பேர் நேற்று கைது

திருகோணமலை கிழக்கு கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 36 இந்திய மீனவர்களை நேற்றுக் கைது செய்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## நாடு முழுவதும் மழை பொழிய வாய்ப்பு

நாடு முழுவதும் இடி, மின்னல் மற்றும் காற்றுடன் கூடிய மழை விட்டு விட்டுப் பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. பருவகாலங்களுக்கு இடையிலான காலத்துக்கு நாம் செல்வதனால் இந்த வளிமண்டலவியல் குழப்பங்கள் உண்டாகியுள்ளன.

நாட்டின் பல பகுதிகளிலும் குறிப்பாக கரையோரப் பகுதிகளான தெற்கு மற்றும் மேற்கு கரையோரப் பகுதிகளில் மாலை வேளைகளில் மழை விட்டு விட்டுப் பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ்.காரியவசம் தெரிவித்துள்ளார்.

அடுத்த சில நாட்களுக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

# பாடசாலையின் கூரையைப் பிரித்து கணனி உபகரணங்கள் திருட்டு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மாமுனை அ.மி.த.க. பாடசாலையில் நேற்று முன்தினம் இரவு பாடசாலையின் கூரையை பிரித்து உள்நுளைந்த திருடர்கள் கணனி உபகரணங்களை களவாடிச் சென்றுள்ளனர்.

பாடசாலைக் கூரையைப் பிரித்து லெவர் சீற்றை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 2 கணனிகள், ஒரு பிறிண்டர், ஒரு சி.பி.யு, ஒரு கீபோட், 3 மௌஸஸ், போன்ற ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான, உபகரணங்களை களவாடிச் சென்றுள்ளனர்.

இச்சம்வம் பாடசாலை அதிபர் வழமைபோல் நேற்று பாடசாயை திறந்தபோது திருட்டுச்சம்பவம் இடம்பெற்றமை தெரியவந்தது.

அதிபர் திருட்டுச் சம்பவம் குறித்து முறைப்பாட்டை வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உபபொலிஸ் நிலையத்தில் பதிவு செய்ய சென்றபோது திருட்டுச்சம்பவத்தை பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டனர்.

இந்நிலையில் குறித்த அதிபர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாட்டை செய்ய சென்றபோது குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் இல்லாமையால் முறைப்பாட்டை செய்யாது வீடு திரும்பியதாக தெரிவிக்கப்படுகிறது. (116)

# கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்திப்பணிகள் மீளாய்வு.



கிளிநொச்சி மாவட்டத்தில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்திப் பணிகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிர்தித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தலைமையில் நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மீளாய்வு கூட்டம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியின் நான்கு பிரதேச செயலகங்களான கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப் பள்ளி, பூநகரி பிரதேச செயலகப் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம் பற்றியும் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப்பணிகள் பற்றியும் ஆராயப்பட்டது.

இதன் போது கல்வி, வீட்டுத் திட்டம், குடிநீர், உட்கட்டுமானங்கள், வீதி அபிவிருத்தி, வாழ்வின் எழுச்சித்திட்டம், சமுர்த்தி, பன்முகப்படுத்தப்பட்டவரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டிற்கான பணிகளின் விபரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் பிரதேச செயலகங்களின் ஆளணி வளம் தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினரினால் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த மீளாய்வுக் கூட்டத்தில் மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், மாவட்ட செயலக திட்டப்பணிப்பாளர் மோகனபவன், உதவித்திட்டப் பணிப்பாளர்களான கேதீஸ்வரன், கௌரிதாசன், பிரதேச செயலர்களான நாகேஸ்வரன், முகுந்தன், சத்தியசீலன், வசந்தகுமார், மற்றும் பிரதேச செயலகங்களின் உதவிதிட்டப் பணிப்பாளர்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பட்டதாரி பயிலுநர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# இறுவட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மழலைகளுக்கான கல்வயல் குமாரசாமியின் 'பாப்பா பாட்டு' இறுவட்டு வெளியீட்டு விழா இன்று இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் காலை 9 மணிக்கு ஆறுதல் நிறுவனப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறை தலைவர் எஸ். சிவலிங்கராஜா, கலாநிதி செ.திருநாவுக்கரசு, கலைஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் இந்நிகழ்வில் சிறப்புரை நிகழ்த்தவுள்ளனார்.

இவ்விறுவட்டின் முதற்பிரதியை மாகாணக் கல்வி அமைச்சின் ஆரம்பப்பகுதி அபிவிருத்திப் பிரிவு பணியாளர் செல்வி ஜெயாதம்பையா பெற்று சிறப்பிக்கவுள்ளார். (இ)

# சமையல் அறை விபத்தில் குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

வென்நீர் ஆவி முகத்தில் பட்டு வெந்து காயமடைந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பருத்தித்துறையில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மூர்த்தி (வயது - 40) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சமலயலறையில் குக்கரில் கடவை அவித்துக்கொண்டிருக்கையில் பானையில் மூடியைத் திறந்து கடலை அவிந்துவட்டது என்று பார்ப்பதற்கு இவர் முற்பட்ட சமயம் பானையில் இருந்து வெளியேறிய சுடுநீ ஆவி இவரது முகத்தைப் பதம் பார்த்ததன் காரணமாகவே இவரின் முகம் அவிந்து காயங்களுக்குள்ளாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் கண்களுக்குப் பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. ஒரு கண்ணில் சிறிய காயம் ஏற்பட்டுள்ளது. (பா)

# பௌர்ணமி உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வயல் பூரணா, புட்கலா சமேத ஹரிகர புத்திர ஐயனார் ஆலய மாதாந்த பௌர்ணமி உற்சவம் இன்று இடம்பெறவுள்ளது.

காலை 10 மணிக்கு நவகும்ப பூசையுடன் உற்சவம் ஆரம்பமாகி விசேட திரவிய அபிசேகம் இடம்பெற்று விசேட வசந்தமண்டப பூசையுடன் சுவாமி உள்வீதி உலா இடம்பெறும்.

தொடர்ந்து மகேஸ்வர பூசை இடம்பெற்று அன்னதான நிகழ்வும் இடம்பெறும். ஆலய தர்மகத்தா சு.சிவானந்தன் ஐயா தலைமையில் இப்பெர்ணமி உற்சவம் இடம்பெறவுள்ளது. (இ)

# ஆசிரிய ஆலோசகர் சங்கம் அவசரப்பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர் சங்கத்தின் அவசரப்பொதுக்கூட்டம் நாளை மறுதினம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக சங்க பொதுச்செயலாளர் என்.பி. ஸ்ரீந்திரன் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களை வலயப்பணிமனையிலிருந்து கோட்டப்பணிமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை தொடர்பிலும், அவர்களது தற்போதைய கடமைப் பட்டியல் தொடர்பிலும் கலந்துரையாடவேண்டியிருப்பதால் அங்கத்தவர்கள், தற்போதைய கடமைப்பட்டியல் தொடர்பிலும் கலந்துரையாடவேண்டியிருப்பதால் அங்கத்தவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில்தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயத்தில் வடமாகாணத்திலுள்ள 12 கல்வி வலயப் பிரதிநிதிகளும் கூடிய கவனம் செலுத்தி அங்கத்தவர்களை கூட்டத்திற்கு அழைத்துவரும்படி கேட்கப்பட்டுள்ளனர். (06)

# சாவகச்சேரி பிரதேசத்தில் மானிய உர விநியோகம்

சாவகச்சேரி பிரதேச விவசாய சம்மேளனங்களுக்கான மானிய உர விநியோகம் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இடம்பெறுமென சாவகச்சேரி கமநல சேவை நிலைய பெரும்போக உத்தியோகத்தர் எஸ். சத்தியேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது பதிவின்படி 42 விவசாய சம்மேளனங்கள் உண்டு. இவற்றில் 38 சங்கங்களே மானிய உரத்திற்கு விண்ணப்பித்துள்ளன. இவற்றில் ஏறக்குறைய 27 சம்மேளனங்களுக்கு முதற் கட்டமாக உரங்கள் விநியோகிக்கப்படவுள்ளன. மிகுதி சங்கங்களுக்கு எதிர்வரும் 28 ஆம் திகதிக்குள் விநியோகிக்கப்படும்.

இதில் கால அட்டவணையின் படி மானிய உரம் பெறாத பயனாளிகளுக்கு 29 ஆம் திகதியிலிருந்து வழங்கப்படும் எனவும் தவறாது மானிய உரத்தை பயனாளிகள் பெறவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# விளையாட்டுப் போட்டி

(அரியாலை)

அரியாலை நாவலடியில் உள்ள உதய நிலா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று நடைபெறவுள்ளது.



ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாலயத்தில் விஜயதசமி அன்று அதிபர் திருமதி பிரதா மாணவர்களுக்கு ஏடு தொடக்கி வைப்பதனைக் காணலாம்.
படம்: சாதனா


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2470 திகதி 18-10-2013

ஆங்கில எழுத்து: N

வெற்றி எண்கள்: 05 14 41 60

போனஸ் இல: 36

ஜக்பொட் பரிசு ரூ.34,404,600/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 251874 | 20/- | 5,037,480/- |
| 2 இல | 17975 | 100/- | 1,797,500/- |
| 3 இல | 377 | 1,000/- | 377,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10071 | 40/- | 402,840/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 707 | 1,000/- | 707,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 20 | 10,000/- | 200,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 34,404,600/- | - |
| 1 இல + போனஸ் இல | 11987 | 100/- | 1,198,700/- |
| 2 இல + போனஸ் இல | 568 | 500/- | 284,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 488 | 200/- | 97,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 23 | 1,500/- | 34,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 294098 | | 12,736,620/- |

இந்த சனிக்கிழமை வரும் ஜக்பொட் பரிசு ரூ. 35,091,475/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3105)

# டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தில் 8940 இடங்கள் பரிசோதனை

யாழ்.மாநகர சபையின் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவினால் தேசிய நுளம்பு வாரத்தில் (7 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதிவரை) மொத்தமாக 8940 இடங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.ஆ.ஜீவநாதன் தெரிவித்துள்ளார்.

இதன்படி யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் மொத்தமாக பரீட்சிக்கப்பட்ட 29 பாலர் பாடசாலைகள் மற்றும் பாடசாலைகளில் நுளம்பு பெருகும் இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் வீடுகள், பொது இடங்கள் ஏனைய நிலையங்கள் என மொத்தமாக 8940 இடங்கள் பரீட்சைக்குட்படுத்தப்பட்டு இனங்காணப்பட்டு நுளம்பு பெருகும் இடங்கள் 64 நுளம்புக் குடம்பிகள் காணப்பட்ட இடங்கள் அழிக்கப்பட்டதுடன் 36 பேருக்கு எதிராக அறிவித்தல்களும் வழங்கப்பட்டன. மேலும் 4 இடங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தொடர இருக்கும் பருவகால மழையைத் தொடர்ந்து டெங்கின் தாக்கம் அதிகமாக இருக்கலாம் என நம்பப்படுவதால் நுளம்பு பெருகும் இடங்களை தத்தமது பகுதிகளில் இல்லாதொழிப்பதில் பொதுமக்களின் ஆதரவு முழுமையாக தேவைப்படுகிறது.

ஒருவாரச் செயற்பாட்டின் போது சகல பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் விசேட கழிவகற்றல் செயற்பாடு வடிகால் சுத்திகரிப்பு செயற்பாடு, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றை சீராக்கி நடைமுறைப் படுத்த பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் பொதுமக்கள் வடிகாலினுள் குப்பை கழிவுகளை கொட்டுவதால் வீட்டுக்கு வெளியால் வீட்டினுள் சுகாதாரத்திற்கு பாதகமான முறையில் கழிவுகளை கொட்டுதல் சேகரித்தலை தளர்த்துமாறும் கழிவுகளை பிளாஸ்ரிக் பொலிதீன் உக்கும் கழிவுகள் உக்காத கழிவுகள் வேறாகவும் தரம்பிரித்து மாநகர சபையின் கழிவகற்றும் இயந்திரம் அல்லது வண்டில்களிடம் கையளிக்குமாறு அறிவித்துள்ளார்.

## மண்டப திறப்பு விழா

வல்வெட்டித்துறை வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கல்யாண மண்டப திறப்பு விழாவும் கலை நிகழ்வுகளும் இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிமுதல் 7.32 வரையான சுபவேளையில் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் கா.தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ தண்டாயுதபாணி தேசிகர் வல்லை வலாம்பிகை சமேத வைத்தீஸ்வர கோவில் பிரதம குரு பிரமஸ்ரீ பா.மனோகரக் குருக்கள் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவார்கள்.(116)

## கிளிநொச்சி பிரதேச செயலகங்களில் கணக்காளர் சேவைக்கு புதிய நியமனம்

கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கை கணக்காளர் சேவைக்கு 3 பேர் புதிதாக நியமனம் பெற்றுள்ளனர்.

பூநகரி பிரதேச செயலகப் பிரிவிற்கு எஸ்.பிறேமச்சந்திரன், கண்டாவளை பிரதேசசெயலகப் பிரிவிற்கு கே.குகதாசன், பளை பிரதேசத்திற்கு செல்வி எஸ்.ராதை ஆகியோரே இவ்விதம் பொதுநிர்வாக அமைச்சால் கடமைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இம் மாவட்டத்திலுள்ள 4 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் சென்ற வருட ஆரம்பத்தில் பிரதேச செயலர் பிரிவாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் இக் கணக்காளர் நியமணங்கள் போருக்குப் பின்னரான புனர்வாழ்வு நடவடிக்கையில் புதிய உத்வேகத்தைக் கொடுக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (90)

## சுன்னாகம் றோட்டரிக்கழகத்தின் 19 ஆவது பதவியேற்பு நிகழ்வு

சுன்னாகம் றோட்டரக் கழகத்தின் 19ஆவது பதவியேற்பு வைபவம் நாளை சனிக்கிழமை மாலை 3 மணி முதல் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

2013/2014 ஆம் ஆண்டிற்காகான புதிய தலைவர் ஸ்ரீரங்க நாயகி உள்ளிட்ட கழக புதிய நிர்வாகிகள் இவ் நிகழ்வின் போது பதவியேற்கவுள்ளனர்.

19 ஆவது பதவியேற்பு வைபவத்தின் போது கழக வரலாற்றில் இரண்டாவது முறையாக பெண்ணொருவர் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவுள்ளார்.

11 வருடங்களுக்கு முற்பாடு பெண் ஒருவர் தலைவியாக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த பதவியேற்பு தினத்தன்றும் சில உதவிச் செயற்திட்டங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளதாக கழக நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

றோட்டரிக் கழகமானது சமூக மட்டத்தில் கல்வி,வாழ்வாதாரம் உள்ளிட்ட துறைகளில பயன்கருதாத பல சேவைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.


அனைத்து றோட்டரிக் கழக உறுப்பினர்களும் சுன்னாகம் றோட்டரிக் கழகத்தின் 19 ஆவது பதவியேற்பு வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (48)

## 30 பேருக்கு வீடமைப்புக் கடன்

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் இந்த வருடம் 30 பேருக்கு வீடமைப்புக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் 18 அரச அலுவலர்களுக்கு தலா 9 இலட்சம் ரூபா வீதமும், 12 பேருக்கு தலா 2 இலட்சம் ரூபா வீதமும் வீடமைப்புக் கடன்களைப் பெற்றுள்ளனர். பொதுமக்கள் அரச உதவியுடனான வீடமைப்புத் திட்டத்தை நிறைவு செய்யும் நோககுடன் இந்தக் கடன் தொகைகளைப் பெற்றுள்ளனர். போரினால பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறைந்த வட்டியிலான வீடமைப்புக் கடன் ஓரளவு ஆறுதல் தருகின்றது.

அதேவேளை மேலும் 19 பொதுமக்களுக்கு மிக விரைவில் தலா 2 இலட்சம் ரூபா வீடமைப்புக் கடன் கிடைக்க உள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரி ஒருவர் கூறினார். (90)




இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் சண்டிலிப்பாய் பிரிவு தொண்டர்களால் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். போதனாவைத்திய சாலையின் இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்யப்பட்டது.

இந்த இரத்ததான நிகழ்வில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள் இரத்ததானம் செய்வதனைக் காணலாம்.

(படங்கள்-பார்த்தீபன், 48)

## முதலுதவியை தொடருமா மாகாணசபை?




முதலுதவி (First Aid) என்பது ஒரு வகையில் அவசர உதவியே. அவசர உதவியே ஆபத்திலிருந்து, அபாய நிலையிலிருந்து ஒருவரைக் காப்பாற்றுகிறது.

போர் முடிந்து அமைதி நிலை வந்தாலும் இன்னும் போரின் பாதிப்புகள் முழுதாகக் குறையவில்லை. முதலுதவிக்கான அவசியம் இன்னும் உண்டு.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான முதலுதவிப் பணிகளே தற்போது நடந்து வருகின்றன. இந்த அவசரகாலப் பணிகள் இன்னும் சில ஆண்டுகளுக்கு தொடரவேணும்.

அந்தளவுக்கு நம் சமூகங்களின் சிதைவு பெரிது.

சமூக ரீதியாக உட்கட்டுமானங்களை முழுமையான அளவில் நிர்மாணிக்கும் பணிகளும் ஒருங்கிணைந்த திட்டத்தின் அடிப்படையில் துரிதமாக நடக்கின்றன.

இதன்மூலம் போர் முடிந்து நான்கு ஆண்டுகளுக்குள் பல படிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால், இன்னும் தேவைகள் அதிகமாக உண்டு. இது தேவைகள் அதிகமுள்ள சமூகமல்லவா! இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வது மிக அவசியம்.

அதாவது, இதுவே முதலுதவியும் அதற்கு அடுத்த கட்டப் பணியுமாகும்.

இதை அரசாங்கம் அபிவிருத்தி என்கிறது. சர்வதேச சமூகம் மீள்கட்டுமானமும் புனரைமப்பும் அபிருத்தியும் என்கிறது.

புத்திஜீவிகளின் பார்வையில் இது அடிப்படைத்தேவைகளுக்கான அத்தியாவசியப் பணி.

எப்படியோ இவை மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் முதற்கட்டப்பணிகள்.

இந்த முதற்கட்டப்பணிகள் செய்யப்பட்டாலே மக்கள் தங்கள் சொந்த மண்ணில் வாழ்வதற்கான ஒரு சூழல் உருவாகும். சொந்த மண்ணில் வாழும் ஒரு நிலையே தேசியத்தின் முதலாவது தளமாகும்.

மக்கள் தங்கள் ஊர்களில் வாழ்வதற்கு இரண்டு விசயங்கள் முக்கியமானது. ஒன்று, பாதுகாப்பு. பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றால் மக்கள் பாதுகாப்பான சூழலை நோக்கிப் பெயர்வர்.

இரண்டாவது, வாழ்க்கைக்கான அடிப்படைத்தேவைகள். அடிப்படைத்தேவைகள் கிட்டவில்லை என்றாலும் மக்கள் தங்கள் சொந்த இடங்களிலிருந்து பிற இடங்களை நோக்கிப் பெயர்ந்து விடுவர்.

ஆகவே, முதலில் மக்கள் நெருக்கடியும் அச்சமும் அற்று வாழும் நிலை அவசியம். அந்த நிலை இன்று மெல்ல மெல்ல வலுப்பெற்று வருகிறது. ஆனாலும் ஜனநாயக அடிப்படைகளில் இன்னும் முன்னேற்றம் ஏற்பட வேண்டியுள்ளது.

இரண்டாவது, வீடு, குடிநீர், மின்சாரம், போக்குவரத்து, வீதி, தொடர்பாடல் வசதிகள், கல்வி, மருத்துவம், தொழில் வாய்ப்பு, வருமானம் போன்றவை மேம்படுத்தப்பட்டு வருகிறது. எனவேதான் மக்கள் மீண்டும் திரும்பித் தங்கள் ஊர்களுக்கு வருகிறார்கள்.

இது முதல் உதவிப் பணிகளை மேற்கொண்ட அரசியலுக்கும் அந்த அரசியலாளர்களுக்கும் கிடைத்த வெற்றியாகும்.

இன்று இத்தகைய ஒரு போக்கு இதுவரை எதிர்ப்பு அரசியலை முன்னெடுத்து வந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சிந்தனையிலும் உருவாகியுள்ளது.

இது வரவேற்கப்பட வேண்டியதே. காலந்தாழ்த்தி அவர்கள் இந்த முடிவுக்கு வந்தாலும் தற்போதாவது பொருத்தமான இடத்துக்கு வந்துள்ளனர்.

25 ஆண்டுகள் தாமதித்து மாகாணசபை முறைமைக்கு வந்துள்ளதைப்போல, இவ்வளவு தாமதத்திற்குப் பிறகு இந்த முதலுதவி அரசியற் பணிக்கு வந்திருக்கிறது கூட்டமைப்பு. ஒரு வகையில் இது இணக்க அரசியல்தான்.

ஆனால், இதில் அவர்கள் தெளிவாகவும் நம்பகத்தன்மையோடும் அர்ப்பணிப்போடும் ஈடுபடுவார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஆளாளுக்கு அடிபடுவது மட்டுமல்ல, முள்ளிவாய்க்காலில் ஒருவரும் கொழும்பில் ஒருவருமாக நிற்பதும் நல்ல சகுனங்களல்ல.

அப்படியென்றால், வாக்களித்த மக்கள் தொடர்ந்தும் நடுத்தெருவில்தானா?

எனில், முதலுதவிப் பணிக்கும் ஆப்புத்தானா?

ஒருவன் சிரிக்கும் போதெல்லாம் மரணம் தள்ளிப் போடப்படுகிறது.
- சுவாமி விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## ஆவேசம் விலக்கி அறிக!

"பிறருக்கு உகக்காததைச் சொன்னவருக்கென்று ஒரு தனி நரகம் உண்டானால் அங்குதான் நான் போவேன். அங்குள்ளவருக்கும் உகக்காததைச் சொல்ல எனக்குத் தெரியும். அங்கிருந்து எங்கு போவேனோ தெரியாது. கடைவிரித்து கேட்பார் இல்லாது போனவர் எத்தனையோ பேர். ஊருக்கு உவக்காததைச் சொன்ன பரம்பரை-அது பெரிது காண்."

மயன் என்ற பெயரில் கவிதைகளும் எழுதிய, பிரபல தமிழ் இலக்கிய விமர்சகராக அறியப்பட்ட க.நா.சுப்பிரமணியத்தின் கவிதை அது. இதே போன்றதொரு பிரகடனத்தை எழுத்தாளர் சுந்தர ராமசாமியும் தனது கட்டுரையொன்றில் சொல்லியிருக்கிறார்.

"வெகுஜனத்தின் பொது நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்ட விதிவிலக்கான உண்மைகளைச் சொல்லி, அந்தச் சந்தர்ப்பங்களில் அவர்களது விரோதியாகவும், காலத்தின் நண்பனாகவும் இருப்பதே என் வேலை என்று எண்ணுகிறேன்" என்று சொல்லியிருப்பார் அவர்.

இந்தப் பத்தியை எழுதும்போதெல்லாம் அந்த இரண்டு கருத்துக்களும் நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடிவதில்லை. வெகுமக்கள் இதையெல்லாம் விரும்பப் போவதில்லை; இந்தக் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவையாகவே அவர்கள் காட்டிக்கொண்டதில்லை என்பதைத் தெரிந்துகொண்டேதான் சிலவற்றை இங்கு திரும்பத் திரும்பச் சொல்லவேண்டியிருக்கிறது.

இதற்கு முந்திய ஒரு காலத்தில் இதையெல்லாம் சொல்வதற்குக் கூட முடியாத-அனுமதிக்காத ஒரு சூழல் இருந்து இப்போது அது மாறியிருக்கிறது என்பதுதான் ஒரேயொரு மாற்றம். மற்றபடி பகை வளர்ந்து கெட்டிதட்டிப் போக விடப்பட்ட மனங்களில், "பகையைக் கொஞ்சம் விட்டால் நல்லது" என்று மெல்லச் சொன்னாலும், "என்னது சரணாகதியாவதா?" என்றே பொங்கியெழ வைக்கிறது.

பகை மறந்து, நல்லிணக்கம் மூலம் இந்த நாட்டின் அனைத்து மக்களும் சம உரிமைகளோடும் சமமான அபிவிருத்திகளோடும் வாழக்கூடிய நிலை ஏற்பட வேண்டும்; அதற்கான இணக்க முயற்சிகள்தான் தீர்வை அடைவதற்கான சாத்தியவழியும் யதார்த்தமும் கூட என்ற உண்மையை உணர்த்த முற்பட்டால், அதைப் போய் வென்றவர்களிடம் சொல் என்று கொந்தளிப்பதே இங்கு வீரத்தமிழுணர்வாகப் பார்க்கப்படுகிறது.

பகையுணர்வை மறத்தலையும் நல்லிணக்கத்தையும் வலியுறுத்தும்போது, இனங்களுக்கிடையில் உணர்ச்சிகரமாகப் பேசி ஆவேச அரசியல் செய்ய முனைவோர் இதை அடிபணிதலாகவோ கீழ்ப்படிவதாகவோ சித்தரிக்க முற்படுகிறார்கள். ஏதோ நமது ரோசத்திற்கு இழுக்கு உண்டாவது போல பள்ளத்தில் கிடந்துகொண்டு மேட்டிமைத்தனம் பேசி, சமூகத்தை மேலும் அதலபாதாளத்திற்குத் தள்ளிச் செல்கிறார்கள்.

நல்லிணக்கம் என்பது இங்குள்ள ஒவ்வொரு மனிதரதும் நன்மைக்காக, நமது நன்மைக்காக, நமது மக்களின் வாழ்வுக்காக என்பதைப் புரிந்துகொள்ளாவிட்டால், நாம் தொடர்ந்தும் உணர்ச்சிகர மடையர்களாகவே தேய்ந்து சிதைந்துகொண்டிருக்கப்போகிறோம் என்றே அர்த்தம்.

இணக்கப்பாட்டு அரசியலின் மூலம் எமது மக்களைக் காப்பாற்றுவதும் வளப்படுத்துவதுமே இன்று உகந்த வழி என்று சொல்பவர்களை நாம் துரோகிகள் என்றே வசைபாடுவோம் என்றால் நாம் இப்போதும் மற்றவர்களைப் பகைநிலைக்குத் தள்ளிச் செய்யும் அரசியலையே செய்துகொண்டிருக்கிறோம்; மாறவே மறுக்கிறோம் என்றுதான் அர்த்தம்.

இணக்க அரசியல் என்பது மக்களைக் காப்பாற்றும் ஒரு வழிமுறை; மக்களை முன்னேற்றும் ஒரு ராஜரீகச் செயற்பாடு. சர்வதேசமும் இதைத்தான் சொல்லிவருகிறது என்பதை நாங்கள் எங்கள் உணர்ச்சியாவேசங்களை விலக்கி உணர்ந்துகொள்ள வேண்டும்.

- ஆசிரியர்

# கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து வடக்கு, கிழக்கை இணைக்க சதித்திட்டம்

## -என்கிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து வடக்கையும், கிழக்கையும் மீள இணைக்கும் சதித்திட்டத்தை ஆரம்பித்துள்ளன.

அதன் வெளிப்பாடே வடக்கு, கிழக்கை அரசு இணைக்க வேண்டுமென்ற விக்னேஸ்வரனின் கருத்தாகும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்தார்.

அரசாங்கம் இதற்கு உடன்படாவிட்டால் சர்வதேசத்தின் உதவியுடன் இது நிறைவேற்றப்படுவது நிச்சயம் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பாக டாக்டர் வசந்த பண்டார மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு இணைக்கப்பட வேண்டுமென்பது கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸும் சேர்ந்து ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாடாகும் .

இதற்கமைய வடக்கிலும், கிழக்கிலும் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் அதிகளவில் வாழ்வதாகவும், எனவே இரு தரப்பும் ஒருமொழி பேசும் சமூகப் பிரிவுகளாகும்.

எனவே, இரண்டு மாகாணமும் இணைக்கப்பட வேண்டியது அவசியமாகும் என வலியுறுத்தி மிக விரைவில் கூட்டமைப்பு வடமாகாணசபையில் பிரேரணையொன்றை கொண்டு வந்து நிறைவேற்றிக் கொள்ளும்.

அதன் பின்னர் நிறைவேற்றப்பட்ட பிரேரணை நாடாளுமன்றத்தின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்படும். ஆனால், வடக்கு, கிழக்கு இணைப்புக்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்காது அதனை எதிர்க்கும்.

இதன் பின்னர் கிழக்கு மாகாண சபையிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இதே போன்று பிரேரணையொன்றை நிறைவேற்றும். அதற்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்காது.

இவ்வாறானதொரு நிலையில் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து வடக்கு, கிழக்கு தமிழ்ப்பேசும் மக்களின் ஆணையை இலங்கை நாடாளுமன்றம் மதிக்கவில்லை. அதனை நிராகரித்து விட்டது என்ற பிரசாரத்தை சர்வதேச ரீதியில் முன்னெடுக்கும். இதன் போது சர்வதேசம் எமது பிரச்சினையில் நேரடியாக தலையிடும். வடக்கையும், கிழக்கையும் மீள இணைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்.

இது தான் எதிர்காலத்தில் நடக்கப் போகின்றது என்றார் வசந்த பண்டார.

# தொழில் திணைக்கள கட்டட அடிக்கல் நாட்டும் நிகழ்வு

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் தொழில் திணைக்களத்திற்கான புதிய கட்டடங்க்ளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இதுவரை காலமும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான தொழில் திணைக்களத்தின் பணிகள். தற்காலிகக் கட்டடத்தில் இயங்கி வந்தன.

இந்நிலையில் இலங்கை தொழில் திணைக்களத்தினால் சுமார் 50 மில்லியன் ரூபா நிதி புதிய கட்டடங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியிலிருந்து முதற்கட்டப் பணிக்காக தலா 22 மில்லியன் ரூபா செலவில் இரண்டு மாடித் தொகுதி கொண்ட கட்டடங்கள் இரு மாவட்டங்களிலும் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும், இக் கட்டடங்களுக்கான பணிகள் 2014 யூலை மாதத்திற்குள் பூர்த்தியாகும் எனவும் அவர் கூறினார்.

தொழில் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான கட்டடத்தொகுதி 55 ஆம் கட்டை பகுதியிலும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கான கட்டடத் தொகுதி சித்திராபுரம் பகுதியிலும் அமைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# வெலிக்கடை சிறை மோதல்; விசாரணை அறிக்கையில் சிக்கல்

(கொழும்பு)

வெலிக்கடை சிறை மோதல் குறித்து விசாரணை நடத்த அமைக்கப்பட்ட குழுவின் விசாரணை அறிக்கையில் சிக்கல் காணப்படுவதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. விசாரணைக் குழுவில் உள்ளடங்கிய ஒருவரின் பரிந்துரைகள் ஏனையவர்களை விட முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுவதாக அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் சோதனை நடவடிக்கைக்குச் சென்ற பாதுகாப்பு பிரிவினருக்கும், சிறைக் கைதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் 27 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்த ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி பந்துல அத்த பத்து தலைமையில் மூவர் அடங்கிய விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. விசாரணைக் குழு தமது விசாரணை அறிக்கையை புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரிடம் கையளித்துள்ளது.

எனினும விசாரணை குழுவின் பரிந்துரைகளுக்கு குழுவில் அடங்கிய ஒருவர் இணக்கம் தெரிவித்திருக்கவில்லை. அதனால் அவருடைய பரிந்துரைகளை வேறாக வழங்குமாறு அமைச்சு அறிவித்திருந்தது.

அவரது பரிந்துரைகளும் கிடைத்தவுடன் விசாரணை அறிக்கை வெளியிடப்படும் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# அதிகரித்துச் செல்லும் எயிட்ஸ் நோயாளர்கள்

இலங்கையில் 1989ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை எச்.ஐ.வி. தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆயிரத்து 808 பேர் கண்டுபிடிக்கப்பட்டதோடு இவர்களில் 307 பேர் உயிரிழந்துள்ளதாக தேசிய எயிட்ஸ் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

கடந்த மூன்று மாதகால எல்லைக்குள் எச்.ஐ.வி. தொற்று நோயாளர்கள் 69 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தேசிய எயிட்ஸ் தடுப்புப் பணிப்பாளர் டாக்டர் சிசிர லியனகே மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் எச்.ஐ.வி. தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இவ்வருடத்திற்குள் தாயிடமிருந்து எச்.ஐ.வி. தொற்றுக்கு இலக்கான 12 பிள்ளைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

அது மட்டுமல்லாது, நாட்டின் பல்வேறு பகுதிகளில் 482 எயிட்ஸ் நோயாளர்கள் காணப்படுகின்றனர்.

இவ் வருடத்தின் யூலை, ஆகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் (3 மாதங்களுக்குள்) 69 எச்.ஐ.வி. தொற்று நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.


எயிட்ஸ் நோய் பரவுவதைத் தடுக்க நாடு தழுவிய விஷேட செயற்றிட்டங்களை சுகாதார அமைச்சு முன்னெடுக்கவுள்ளது.

உலகின் எச்.ஐ.வி. தொற்று வீதத்தை பார்க்கையில் இலங்கையில் இதன் பரவல் குறைந்த அளவில் காணப்பட்ட போதும் எதிர்காலத்தில் எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஆபத்து இருப்பதாகவும் டாக்டர் சிசிர லியனகே தெரிவித்தார்.

# மீட்பரிடம் தம்மை ஒப்புக்கொடுக்கும் ஆடுகள்



**நுகர்வுக் கலாசாரம் பெருகியுள்ள, சகிப்புத்தன்மை மிகவும் குறைந்து வருகிற இன்றைய சூழலில் ஸோண்டர்ஸின் எழுத்துக்கள் கண்டிப்பாக அதிகம் படிக்கப்பட்டு, அது குறித்து உரையாடல்கள் நடத்தப்பட வேண்டியிருக்கிறது. ஸோண்டர்ஸ் உருவாக்குகிற உலகிற்கும், நம் உலகிற்கும் தூரம் அதிகம் இல்லை. அவர் உலகின் பல அம்சங்கள் ஏற்கனவே நம் உலகில் உள்ளதைச் சார்ந்தே. அதை இன்னும் சற்றே அதீதமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. அந்த அதீதமும் இன்னும் சில காலத்தில் நம் உலகின் இயல்பாகலாம். நாம் விரைவாக அதை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கிறோம்.**




■ ஆர்.அஜய்

**ஜோர்ஜ்** ஸோண்டர்ஸ் தன் குறு நாவலான 'The Brief and frightening reign of Phil' இல் உருவாக்கியுள்ள நாடுகளான இன்னர் ஹோணர் (Inner Horner) மற்றும் அவுட்டர் ஹோணர் (Outer Horner) நாடுகளுக்கு உங்களை வரவேற்கிறேன். இந்த நாடுகளில் அப்படி என்ன விசேஷம்? பல உண்டு, உதாரணமாக அவுட்டர் ஹோணர் நாட்டின் ஜனாதிபதிக்கு ஏழு வயிறுகள், ஐந்து மீசைகள், இன்னர் ஹோணர் நாடோ ஒரே ஒரு ஆள் மட்டும் நிற்கக்கூடிய அளவிற்கு சிறிய நாடு. என்னய்யா இது என்று நீங்கள் திடுக்கிட்டால், நீங்கள் ஸாண்டர்ஸின் உலகிற்குப் புதியவர் என்பது தெளிவாகும். தயக்கமில்லாமல் இந்த உலகில் நீங்கள் நுழையலாம், நாம் கற்பனை கூடச் செய்ய முடியாத உருவகங்களாகவும், குறியீடுகளாகவும் விரியும் ஒரு அபத்தமான, ஆனால் அலாதியான உலகு அவர் விரிப்பது. அதே நேரம் நம் உலகிற்கும் நெருக்கமான, அதனாலேயே பீதியளிக்கும் உலகை அதில் நீங்கள் காண்பீர்கள்.

இன்னர் ஹோணர் நாட்டில் மொத்தம் ஏழு பேர் மட்டுமே பிரஜைகள்,. இருந்தாலும் மீதி ஆறு பேர் எங்கே வசிப்பார்கள்? தங்கள் அண்டை நாடான அவுட்டர் ஹோணரில் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள குறுகிய கால வசிப்பிடத்தில் அவர்கள் வாழ்கிறார்கள். சுழற்சி முறையில் ஒருவர் மாறி ஒருவர் தங்கள் தாய் நாட்டில் சில காலம் இருப்பார்கள். இவர்கள் இப்படித் தங்குவது அவுட்டர் ஹோணர் பிரஜைகள் சிலர் கண்ணை உறுத்துகிறது,இன்னர் ஹோணர் மக்களோ இன்னும்சற்றே பெரிய இடத்தைத் தங்களுக்குக் கொடுக்கக்கூடாதா என்ற எண்ணம் உடையவர்கள். இப்படிச் சில பூசல்கள் இரண்டு நாட்டிற்குள்ளும் புகைந்து கொண்டிருந்தாலும், பெரிய பிரச்சினைகள் எதுவும் இல்லை. இந்நிலையில் ஒரு நாள் இன்னர் ஹோணர் இன்னும் சிறியதாகி விடுகிறது. எனவே அப்போது அந்நாட்டில் வசிக்கும் எல்மரின் ஒரு பகுதி அவுட்டர் ஹோணர் நாட்டிற்குள் இப்பேர்து வந்து விடுகிறது. ஆரம்பிக்கிறது பிரச்சினை.

இரு நாட்டு மக்களும் இந்த நிகழ்வை எப்படி எதிர்கொள்வது எனக் குழம்ப, ஃபில் (phil) என்ற நடுவயதான ஆண், தன் கருத்துக்களால் மக்கள் கவனத்தை ஈர்க்கிறான். இவன் அதுவரை உருப்படியாக எதுவும் செய்ததில்லை, மற்ற அவுட்டர் ஹோணர் மக்கள் அவனை ஒரு பொருட்டாக மதித்ததில்லை, சுருக்கமாகச் சொன்னால் அவர்கள் பார்வையில் அவன் ஒரு உதவாக்கரை (loser, nobody). இப்போதோ அவன் கருத்துக்களால் அவர்கள் ஈர்க்கப்படுகின்றனர். என்ன சொல்கிறான் அவன்? இன்னர் ஹோணர் மக்களுக்கு வரி விதிக்க வேண்டும் என்கிறான், அவர்களை எப்போதும் கண்காணிப்பில் வைத்திருக்க வேண்டும் என்கிறான்.

இப்படிப் பல பேரை நாம் வரலாற்றில் பார்த்திருக்கிறோம். ஒரு அசாதாரணச் சூழ்நிலையில் தைரியமாக முடிவெடுக்க முன்வருபவர்கள் இவர்கள். அறிவுள்ளவர்களும், நன்கு சிந்திப்பவர்களும் சொல்லவும் தயங்கும் பல அபத்தமானதும், அற்பத்தனமானதுமான மானுட சமூக விரோதக் கருத்துக்களை உணர்ச்சி வசப்பட்டும், வலுவாகவும், திரும்பத் திரும்பவும் சொல்வதன் மூலமே அவை சரியானவை, நியாயமானவை, தவிர்க்க முடியாதவை என்றெல்லாம் மக்களை நம்ப வைக்கும் திறமை கொண்டவர்கள் இவர்கள். அந்தச் சூழ்நிலையைச் சில நேரம் தங்கள் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்காகவும் பயன்படுத்திக் கொள்வர்.

இவர்கள் அனைவருக்கும் உள்ள ஒற்றுமை அல்லது கண்டிப்பாக இருக்கவேண்டிய ஒரு குணம், எந்த குப்பையையும் கோமேதகமாக நம்பவைக்குமாறு பேசி மக்களை மயக்கி தங்கள் பக்கம் ஈர்ப்பது. இதற்கு ஃபில்லும் விதிவிலக்கல்ல. மறை கழன்ற நிலையில்தான் இத்தகைய ஆசாமிகள் இருக்கிறார்கள் என்று ஸோண்டர்ஸ் பகடி செய்கிறார். ஃபில் சாதாரணமாகப் பேசுவதே உளறல் தான், இருந்தும் அவன் மூளை சில நேரம் கழண்டு விழுந்து விடுவது போல் கதையை அமைத்துள்ளார். மூளை மீண்டும் அவன் தலையில் பொருத்தப்படும் வரை அந்நேரங்களில் ஃபில் குரலே மாறுகிறது, அவன் உளறல் இன்னும் மோசமாகிறது ஆனால் என்ன ஆச்சரியம், இப்படிப் பேசுவதை அந்நாட்டு மக்கள் இன்னும் அதிகமாக விரும்புகிறார்கள், அதை அப்படியே ஏற்றும் கொள்கிறார்கள். தங்கள் மீது விதிக்கப்படும் பல அடக்குமுறைகளை எதிர்க்கும் கால்(Cal) என்ற இன்ன்ர் ஹோணர் பிரஜையைக் கொல்வதை 'disassemble' என்று குறிப்பிடுகிறான் ஃபில். இந்த இடக்கரடக்கல் (euphemism) முக்கியமான ஒன்று, தாங்கள் செய்வதை நியாயப்படுத்த வல்லரசுகள் பயன்படுத்தும் ஆயுதம் மொழியில் இப்படிப்பட்ட இடக்கரடக்கல் அல்லவா.

ஃபில்லின் வெறியாட்டத்திற்குத் துணையாக, ஜிம்மி, வான்ஸ் என்ற இருவர் உள்ளார்கள். இவர்கள் 'special friends' என்று குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் மற்றவர்களால் அதிகம் மதிக்கப்படுவதில்லை, ஃபில் தங்களைப் புகழ்ந்தால் அவனுக்குச் சேவை செய்யத் தயாராக இருப்பவர்கள்.

உங்களுக்கு ஸோண்டர்ஸ் ஒரு அமெரிக்க எழுத்தாளர் என்பது நினைவிருக்கும். அதை வைத்து நோக்கினால், இந்நேரம் "அவுட்டர் ஹோணர்" அமெரிக்காவையும்,.ஃபில் புஷ்ஷையும் குறிக்கின்றன என்று தெரிந்திருக்கும். அப்போது 'special friends'? வேறு யார், உலகில் தங்கள் முதன்மை நிலையை இழந்து அமெரிக்காவின் தோழனாக இருப்பதையே கௌரவமாக நினைக்கும் இங்கிலாந்து தான். அவர்கள் தானே இராக்கில் WMD ஆயுதங்கள் உண்மையில் உள்ளதா இல்லையா என்றெல்லாம் கவலைப் படாமல் போருக்கழைத்த அமெரிக்காவின் பின் சென்றவர்கள்.

ஃபில்லின் இந்தச் செயல்களுக்கு அந்த நாட்டின் ஜனாதிபதியின் ஒப்புதல் கிடைக்கிறது. இந்த ஜனாதிபதி தான் நான் முன்பு சொன்ன ஏழு வயிறும், ஐந்து மீசையும் கொண்ட ஆசாமி. கிட்டத்தட்ட சுயஅறிவை முழுதுமாக இழந்த senile ஆசாமி. இவருக்கு ஆலோசனை கூறுபவர்கள் எப்படி? ஒருவர் முகமே கண்ணாடி தான், அதாவது ஜனாதிபதியை பிரதிபலிப்பதே, அவர் நினைப்பதை, எண்ணுவதை அப்படியே ஒப்புக்கொள்வதே அவர் வேலை. இன்னொருவருக்கு முகமே வாய் தான், வெறும் பேச்சு தான் அவர் வேலை. இப்படிப்பட்ட ஆலோசகர்கள் உலகில் இருப்பதால் தானே பல பேராபத்துகள் நிகழ்கின்றன? போகப் போக ஃபில் ஒரு சர்வாதிகாரி போல் நடந்து கொள்கிறான், அவனைப் பின்பற்றுபவர்களிடமிருந்து எந்த வித எதிர்க் கருத்தையும் அவன் சகிப்பதில்லை. அவன் உத்தரவிடும் ஆணைகளில், கண்ணை மூடிக்கொண்டு அனைவரும் கையெழுத்திட வேண்டுமென்று எதிர்பார்க்கிறான். அப்படிச் செய்யாதவர்களை, சந்தேகப் படுகிறான். ஒரு கட்டத்தில் ஜனாதிபதியைப் பதவியில் இருந்து நீக்கித் தானே ஜனாதிபதி ஆகிறான். ஆலோசகர்கள்? அவர்களுக்கென்ன, அவர்களுக்குத் தேவை ஒத்து ஊதுவதற்கேற்றபடி ஜனாதிபதி பதவியில் ஒரு ஆசாமி, எனவே அவர்களும் ஃபில் பக்கம் சாய்கிறார்கள். இந்த நிகழ்வுகள் அனைத்தும், நாம் வரலாற்றில் படித்ததும், இப்போதும் பார்த்துக் கொண்டிருப்பதும் தான். பல கட்டங்களில், பல நாடுகளில், பல விதமாக நடப்பவை தான்.

இன்று ஊடகங்கள் பற்றிப் பேசாமல், பொது மக்களின் மத்தியில் ஒரு கருத்து எப்படி பரப்பபடுகிறது என்று புரிந்து கொள்ள முடியுமா? ஸோண்டர்ஸ் ஊடகங்களையும் விட்டு வைக்கவில்லை. முதலில் அவை கொடுக்கும் தலைப்பு செய்திகள் இவ்வாறு உள்ளன

"BUG CARRIES BREADCRUMB", "OTHER BUGS LOOK ON IN AWED SILENCE"

"WATER RUNS DOWNHILL TOWARDS SEWER"

"SKY REMAINS DARK AS NIGHT PROCEEDS"

செய்திகள் வெறும் காட்டுக்கத்தல் என்பதால் தூன் அவை 'Upper Case' இலேயே இந்த நூலில் அச்சடிக்கப் பட்டுள்ளன. page 3, breaking news என ஆரம்பித்து infotaintment, paid news என்று ஊடகங்கள் வந்தடைந்திருக்கும் இடமே "இரவில் வானம் இருளாக உள்ளது" என்பது போன்ற தலைப்பு செய்திகள்தாமே? ஊடகவியலாளர்கள் எப்படிச் சித்தரிக்கப்படுகிறார்கள்? அவர்களுடைய கழுத்துப் பட்டையில் (clavicle) ஒலிபெருக்கி பொருத்தப்பட்டுள்ளது (தொண்டை கிழியக் கத்த வேண்டாமா), அது மட்டுமல்ல அவர்களின் பின்புறத்திலும் இயல்பாகப் பேச வழி உள்ளது. ஒரு ஊடக ஆசாமி சொல்வது (கத்துவது?) என்னவென்றால் "MAN ASKS QUESTION, EXPECTS ANSWER".

இந்த ஊடகங்களும் ஃபில் பின்னால் அணி திரள்கின்றன. அவர்களும் எத்தனை நாள் தான் பூச்சிகள் பற்றியும், சாக்கடைகள் பற்றியும் பேசுவார்கள். யுத்தம் இவற்றை விடச் சுவாரஸ்யமானது தானே.

இறுதியில் ஃபில்லின் கொடுங்கோல் ஆட்சி ஒரு முடிவுக்கு வருகிறது, அதுவும் ஒரு பகடியாகத்தான் தான் முடிகிறது. அவன் மூளை காணமல் போய் விட, அதைக் கொஞ்ச நேரம் அவன் சாதகமாக ஆக்கினாலும்,நேரம் ஆக ஆக, மூளையில்லாமல் அவன் உளறல் ஒரு உச்சத்தை அடைந்து, மூளை இல்லாததை அவனே தாங்க முடியாமல் நினைவற்று வீழ்கிறான். எல்லாச் சர்வாதிகாரிகளும் இதே நிலையை தான் அடைய வேண்டும், முற்றிலும் மூளையை இழக்கும் போது தான் முற்றிலும் தறி கேட்டு, அவர்கள் வீழ்ச்சி நேர்கிறது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# இரண்டு இலட்சம் வாக்குகளுக்காக மாநாட்டை புறக்கணிக்கிறது கனடா

## கூட்டமைப்பின் முடிவால் ஆச்சரியப்படவில்லை-அரசு

(கொழும்பு)

இலங்கையில் அடுத்தமாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என்றும் அதனை எதிர்ப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளமை தொடர்பில் அரசாங்கம் ஆச்சரியமடையவில்லை.

அதேவேளை கட்சியின் உட்பூசலை காரணமாகக்கொண்டு பொதுநலவாய மாநாடு குறித்து தீர்மானம் ஒன்றை எடுப்பதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளமை குறித்து கவலையடைகின்றோம் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெறும் மாநாட்டை புறக்கணிக்கும் கனடாவின் நிலைப்பாட்டுடன் ஏனைய நாடுகளையும் இணைப்பதற்கான அந்த நாட்டின் முயற்சி தோல்வி கண்டுள்ளது.

அந்த வகையில் இலங்கை வெற்றியடைந்துள்ளது என்றே குறிப்பிடலாம் எனவும் அமைச்சர் கூறினார்.

பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்கவேண்டும் என்றும் அதனை எதிர்ப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளமை மற்றும் பொதுநலவாய மாநாடு குறித்து தீர்மானம் ஒன்றை எடுக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளமை குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் கெஹலிய ரம்புகவெல இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்

பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெறுவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பதில் எவ்விதமான ஆச்சரியத்தையும் அரசாங்கம் காணவில்லை.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது ஆரம்பம் முதலே புலிகளின் பிரதி நிதிகளாகவே செயற்பட்டு வந்துள்ளது. இந்நிலையில் தற்போது இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை கூட்டமைப்பு எதிர்ப்பதென்பது புதுமையான விடயமல்ல.

சர்வதேச மட்டத்தில் புலிகளுக்கு சார்பான புலம்பெயர் மக்கள் இலங்கையை அபகீர்த்திக்கு உட்படுத்தவேண்டும் என்பதில் உறுதியாக இருந்து வருகின்றனர். அந்த வகையிலேயே கனடாவும் சுமார் இரண்டு இலட்சம் வாக்குகளுக்காக இம்முறை பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்று தெரிவித்துள்ளது.

ஆனால் இலங்கையில் நடைபெறும் மாநாட்டை புறக்கணிக்கும் கனடாவின் நிலைப்பாட்டுடன் ஏனைய நாடுகளையும் இணைப்பதற்கான அந்த நாட்டின் முயற்சி தோல்வி கண்டுள்ளது. அந்த வகையில் இலங்கை வெற்றியடைந்துள்ளது என்றே கூறவேண்டும். காரணம் கனடாவின் தீர்மானத்தில் கனடாவே தனிமையடைந்து காணப்படுகின்றது.


எந்தவொரு நாடும் கனடாவை பின்பற்றவில்லை. பல நாடுகள் தமது பங்குபற்றுதலை உறுதிப்படுத்தியுள்ளன. அதனால் தான் கனடா தனது முயற்சியில் தோல்வியடைந்து விட்டது என்று கூறுகின்றோம்.

இது இவ்வாறு இருக்க தமது கட்சியின் உட்பூசலை காரணமாகக் கொண்டு பொதுநலவாய மாநாடு குறித்து தீர்மானம் ஒன்றை எடுப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளமை குறித்து கவலையடைகின்றோம். நாட்டின் பிரதான எதிர்க்கட்சியானது இன்று நாட்டுக்கு நகைச்சுவையை வழங்கும் கட்சியாக மாறியுள்ளது.

கட்சி உட்பூசலினால் ஏற்பட்டுள்ள நிலைமையை காரணம் காட்டி மிகப் பிரதான சர்வதேச மாநாடு ஒன்றை பகிஷ்கரிப்பதானது கவலைக்குரிய விடயமாகும் என்றார்.



## புலிகளுக்கு ஏவுகணை கொள்வனவு ஒப்புக்கொண்டார் கனேடிய தமிழர்



(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு விமான எதிர்ப்பு ஏவுகணைகள் மற்றும் ஏனைய பொருட்களை வாங்குவதற்கு முயன்றதாக அமெரிக்க நீதிமன்றத்தில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை கனேடிய தமிழரான பிரதீபன் நடராஜா ஒப்புக்கொண்டுள்ளார்.

ஒன்ராரியோ பிராம்டனை சேர்ந்த அவர் கடந்த வாரம் இந்தக் குற்றச்சாட்டுகளை ஒப்புக் கொண்டதாக, நீதிமன்றப் பதிவுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவருக்கு, அடுத்த ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி தண்டனை அறிவிக்கப்படவுள்ளது. விடுதலைப் புலிகளுக்காக, 1 மில்லியன் டொலர் பெறுமதியான உயர் சக்திவாய்ந்த ஆயுதங்களை வாங்கி அனுப்ப, பிரதீபன் நடராஜாவும் ஏனையவர்களும் முயன்றதாக, எவ்பிஐ குற்றச்சாட்டைப் பதிவு செய்துள்ளது.

இவருடன் குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட இன்னொரு கனேடியத் தமிழரான சுரேஸ் சிறீஸ்கந்தராஜா கடந்த யூலை மாதம் தன் மீதான குற்றசாட்டுகளை ஒப்புக்கொண்டிருந்தார். அதிகபட்சமாக 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், இவருக்கான தண்டனை வரும் 28 ஆம் திகதி அறிவிக்கப்படவுளது.

## இந்திய தேவைக்கு வட,கிழக்கு இணைப்பு கூட்டமைப்பின் எண்ணம் ஈடேறாது

### என்கிறார் ரில்வின் சில்வா



(கொழும்பு)

இலங்கையில் மாகாணங்களை இணைப்பதற்கான சட்டங்களோ, அதிகாரங்களோ மாகாண சபைக்கு கிடையாது.

எனவே, இந்தியாவின் தேவைக்காக வடக்கையும், கிழக்கையும் இணைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எண்ணம் ஒரு போதும் ஈடேறப் போவதில்லை என்று ஜே.வி.பி. யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் அரசோடு இணக்கப்பாட்டுடன் செயற்பட்டுக்கொண்டு, மறுபுறம் எதிர்ப்பதுபோல் தமிழ் மக்களை ஏமாற்றுகிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக ரில்வின் சில்வா மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும், வடக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கப்போவதில்லை.

மாறாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை அதிகரித்து, அதன் மூலம் அரசியல் குளிர்காயும் நடவடிக்கைகளையே முன்னெடுக்கின்றனர்.

மக்களுக்கு வாழ்வதற்கு வீடுகள், அடிப்படை வசதிகள், தொழிலில்லாப் பிரச்சினை, கல்விப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினையென மக்கள் பாரிய நெருக்கடிக்குள் சிக்கியுள்ளனர்.

இந்தியாவின் தேவையை பூர்த்தி செய்வதற்காக வடக்கையும் கிழக்கையும் இணைக்க முயற்சிக்கின்றனர். மீண்டும் பிரிவினைவாதத்திற்கு தூபமிடுகின்றனர்.

இலங்கையில் எந்தவொரு மாகாணங்களையும் இணைக்கும் சட்டங்களோ, அல்லது அதிகாரங்களோ மாகாண சபைகளுக்கு கிடையாது.

வடக்கு, கிழக்கு வளங்களை இந்தியாவிற்கு தாரை வார்ப்பதற்காகவே கூட்டமைப்பு செயற்படுகிறதே தவிர, தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக எதனையும் அவர்கள் மேற்கொள்வதில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்று அமைச்சுப் பதவிகளுக்காக குடுமிப்பிடிச் சண்டை பிடிக்கின்றது. இவ்வாறானவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கப் போகின்றார்கள் என்றும் ரில்வின் சில்வா கேள்வி எழுப்பினார்.

## புகலிடதாரியின் குடும்பத்தை நாடு கடத்துகிறது சுவிஸ்

(கொழும்பு)

புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட இலங்கையர் ஒருவரின் குடும்பத்தையும் நாடு கடத்த சுவிட்சர்லாந்து அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

இவ்வாறு நாடு கடத்துவதற்கு இலங்கை அதிகாரிகளிடம் ஒப்புதல் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக சுவிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட இலங்கையர் ஒருவர் அண்மையில் நாடு கடத்தப்பட்டிருந்தார்.

அவரது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் சுவிட்சர்லாந்தில் தங்கியுள்ளனர்.

இவர்களை நாடு கடத்துவது தொடர்பில் ஏதேனும் சிக்கல்கள் காணப்படுகின்றனவா என்பது குறித்து சுவிட்சர்லாந்து அதிகாரிகள் இலங்கைக்கு நேரில் விஜயம் செய்து ஆராய்நதுள்ளனர். இதன் போது, இலங்கை அதிகாரிகள் குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் வழங்கிய தகவல்களின் அடிப்படையில், புகலிடக் கோரிகையாளரின் குடும்பம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படஉள்ளது.

நாடு கடத்தப்பட்ட நபர் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த நபரின் உடல் நிலைமை உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் திரட்டப்பட்டதன் பின்னர், நாடு கடத்தும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## பேனா வடிவில் பிஸ்டல் மீட்பு



(கொழும்பு)

பேனா வடிவிலான பிஸ்டல் ரக துப்பாக்கியை சிலாபம் பொலிஸார் மீட்டுள்ளனர். இந்த துப்பாக்கி வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டதென்று ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். முந்தல் பிரதேசத்தில் இடம்பெற்ற கொள்ளைச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தல் பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட இருவரை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்தனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போதே பேனா வடிவிலான பிஸ்டல் ரக துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது. இவர்கள், புத்தளம், சிலாபம், வென்னப்புவ, மாரவில மற்றும் தங்கொட்டுவ போன்ற பிரதேசங்களில் இடம்பெற்ற கொள்ளைச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.


## ரணிலின் செயலாளரை தேடிவரும் பொலிஸார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்கவின் செயலாளர் சுகத் சந்திரசிறி மற்றும் மேல் மாகாண சபையின் முன்னாள் தலைவர் கித்சிறி கஹட்டபிட்டிய ஆகியோரை பொலிஸார் தேடிவருகின்றனர்.

மாத்தறையில் ஒக்ரோபர் 5 ஆம் திகதி இடம்பெற்ற பேரணி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பிலேயே இவ்விருவரும் தேடப்படுவதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

மாத்தறை பேரணியின் மீதான தாக்குதல் தொடர்பில் சுகத் சந்திரசிறி மற்றும் கித்சிறி கஹட்டபிட்டிய உள்ளிட்ட ஐவரைப் பிடிக்க தேடி ஐந்து விசேட பொலிஸ் குழுக்கள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.



தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியின் முன்னாள் அதிபர் நவ மகாஜன சிற்பி அமரர் தெ.து ஜயரெத்தினத்தின் நூறாவது பிறந்த நாள் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை கல்லூரியில் இடம்பெற்றபோது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், வடமாகாணமேலதிக மாகாண கல்விச்செயலாளர் ப.விக்னேஸ்வரன் மாணவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (93)

# பெரியோர்களின் வழிகாட்டலில் சிறுவர்கள் வளர்க்கப்படவேண்டும்

-யாழ்.வலய முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர்-

(திருநெல்வேலி)

பெரியோர்களின் வழிகாட்டலில் சிறுவர்கள் வளர்க்கப்பட வேண்டும் என யாழ்.வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் கே.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

உயரப்புலம் மெதடிஸ்த தமிழ்க்கலவன் வித்தியாலயத்தில் நடைபெற்ற சிறுவர் கலை விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவுப் பகுதித்தலைவர் எஸ்.ஜெயகாந்தன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து உரையாற்றிய அவர்,

பிள்ளைகளிடம் நாம் வலுக்கட்டாயமாக எதையும் திணிக்கக்கூடாது. பெரியோர்களின் வழிகாட்டலில் சிறுவர்கள் நடாத்திச் செல்லப்பட வேண்டும்.பயம் ஏதுமின்றிப் பிள்ளைகள் பாடசாலைக்கு வருவதற்குரிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். பிள்ளையின் திறனை வளர்ப்பதற்கு கல்வி உதவும். விளையாட்டிலும் அவர்கள் ஈடுபடுவது அவசியமாகும். பட்டினப் பகுதிப் பாடசாலைகளிலும் பார்க்க கிராமப்புறப் பாடசாலையில் திறமையான மாணவர்களைப் பார்க்கக் கூடியதாக உள்ளது. கிளிநொச்சியில் சிறந்த புலமைப்பரிசில் பெறுபேறுகள் காணப்பட்டன யாழ் .மாவட்டத்தில் முதலாவது மாணவனாக ஏழாலை வித்தியாலயத்தை சேர்ந்த மாணவன் ஐந்தாம் வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றான். சில பெற்றோர்கள் முன்பள்ளிகளுக்கு தமது பிள்ளைகளை வாகனங்களின் மூலம் தூர இடங்களுக்கு அனுப்பி படிக்க வைக்கின்றார்கள். எனினும் தனது ஊர் சூழலில் , ஊரிலுள்ள பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் ஆளுமை, உறவு என்பன விருத்தி அடைகின்றன. எனக் கூறினார். (137)

## சிட்டிசன் வங்கியின் வாணிவிழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சிட்டிசன் டெவலப் மென்ட் வங்கியின் வாணி விழா நிகழ்வு கடந்த சனிக்கிழமை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்றது.

சிடிபியின் யாழ்ப்பாண கிளை முகாமையாளர் ரி. சுகந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்விற்கு நல்லை ஆதின முதல்வர் சோமசுந்தர ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு அருளாசி உரை நிகழ்த்தினார்.

சிறப்பு விருந்தினர்களாக சிடிபியின் வலயம் நான்கின் விற்பனை மேம்படுத்தல் அதிகாரி சுபாஸ்குமார் , அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் அரசகேசரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் கலை நிகழ்வுகளில் ,இன்றைய காலத்தில் பண்பாட்டை தழுவிச் செல்கிறோமா நழுவிச் செல்கிறோமா எனும் தலைப்பிலான பட்டிமன்றம் வில்லிசை போன்ற பல நிகழ்வுகள் இடம்பெற்றன. (54)

## ஆசிரியையை தாக்கிய மாணவனின் தாய் கைது

பாடசாலை நேரத்தில் ஆசிரியையை தாக்கிய குற்றச்சாட்டில் மாணவனின் தாயொருவர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மல்லாகம் பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்கும் மாணவன் ஒருவர் கடந்த திங்கட்கிழமை நாய்க்குட்டியொன்றை துரத்தியபோது அந்நாய்க்குட்டி பாடசாலை கிணற்றுக்குள் வீழ்ந்து மரணமானது.

தொடர்ந்து செவ்வாய்க்கிழமை பாடசாலையில் நீர்த்தொட்டிக்கு நீர் இறைக்கும் போது கிணற்றில் நாய்க்குட்டியொன்று இறந்து கிடந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக குறித்த மாணவன் ஆசிரியர் ஒருவரினால் அழைத்து விசாரிக்கப்பட்டதுடன், தாயாரை அழைத்து வரும்படியும் அறிவுறுத்தப்பட்டார்.

இந்நிலையில், பாடசாலைக்கு வந்த மாணவனின் தாயார் இவ்விடயம் தொடர்பாக ஆசிரியருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதுடன், குறித்த ஆசிரியையை தாக்கியும் உள்ளார்.சம்பவம் தொடர்பாக ஆசிரியை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததனையடுத்து சுன்னாகம் பொலிஸார் மாணவனின் தாயாரைக் கைதுசெய்து விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். மாணவனின் பெற்றோருக்கும் ஆசிரியைக்கும் தனிப்பட்ட ர்தியில் ஏற்கனவே பகைமையொன்று இருந்துள்ளதாக பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். (66)

## கருத்துரையும் கலந்துரையாடலும்

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் கருத்துரையும் கலந்துரையாடலும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு திருநெல்வேலி செயல்திறன் அரங்க இயக்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"உலகமயப்பொருளாதாரமும் அமெரிக்க பட்ஜட் நெருக்கடியும்"என்ற தலைப்பில் தொடக்கவுரையினை வே.சிவபாலன் கருத்துரையினை யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி வி.பி. சிவநாதன் ஆகியோர், ஆற்றவுள்ளனர்.

## யாழ் .விக்ரோறிய பகுதி வீதிகள் புனரமைப்பு எப்போது?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரப்பகுதியில் விக்ரோறிய வீதி, மின்சார நிலைய வீதி, மின்சார நிலைய வீதியையும் ஸ்ரான்லி வீதியையும் இணைக்கும் குறுக்குவீதி என்பன புனரமைக்கப்படாமையால் இவ்வீதியூடாக பயணம் செய்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

தற்போது அதிகளவு மக்கள் பயன்படுத்தும் பிரதான வீதியாக உள்ள இந்தவீதி குண்டும் குழியுமாக சேதமடைந்து காணப்படுகிறது. இனிவரும் மழைகாலங்களின் இவ்வீதி மேலும் சேதமடைவதுடன் வாகனங்கள் செல்வது பெரும் இடையூறாக அமைவதாக சுட்டிக்காட்டும் மக்கள் யாழ். நகரப்பகுதியில் பல வீதிகள் காபெற் போடப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ள நிலையில் பிரதான வீதிகளாக இருக்கும் இவ்வீதிகள் புனரமைக்கப்படாமல் இருப்பது கவலையளிப்பதாக தெரிவிக்கின்றனர். அரச மற்றும் தனியார் பேருந்து சேவைகள் மற்றும் இதர வாகனங்கள் போக்குவரத்தை மேற்கொள்ளும் இவ் வீதியை புனரமைக்க யாழ். மாநகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வி)

## ஆண்டுநிறைவு விழா

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை கணபதி படிப்பகத்தின் 46ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பாலர்தின விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நெடியகாட்டுப் பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெறவுள்ளது.

படிப்பகத்தின் தலைவர் ச. ஜெயகணேஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். தில்லைநாதன் ,சிறப்பு விருந்தினராக வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற தவிசாளர் ந.அனந்தராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (116)

## முரசின் இன்றைய பலன்



(18.10.2013 வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் ஐப்பாசி மாதம் 01 ஆம் திகதி.பூரணை விரதம்
ரேவதி நட்சத்திரம் பி.இ 03.12 வரை,
பின் அஸ்வினி அமிர்த சித்தநாமயோகம் சதர்த்தசி திதி
இராகுகாலம 10.32- 12.02 வரை. சுபநேரம 06.02 - 07.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | விவாகப் பிரச்சினை தொடர்ந்து இழுபடல், பண முயற்சியைக் கைவிட்டு தொழில் செய்ய முனைதல், சகோதரவழியில் நிலவிய பிணக்கு சமரசமாதல். |
| ரிஷபம் | குழந்தைப் பாக்கியம் கிட்டுதல், வெளியூரில் இருந்து உறவினர் வருகை, பிரயாணத்தின்போது ஏற்படும் நட்பு பின்னர் காதலாக பரிணமித்தல். |
| மிதுனம் | கவலையீனத்தால் ஆவணங்கள் கைவிடல், புதிய வாகனம் கொள்வனவு செய்ய பிதா பண உதவி செய்தல், மக்களின் பண்பற்ற செயல் பெற்றோரை பீதியில் ஆழ்த்துதல். |
| கடகம் | தொழில் நிமித்தம் தற்காலிக பிரிவு ஏற்படல், சத்திரசிகிச்சை மேற்கொள்ள அயல்நாடு செல்லத்திட்டமிடல், அனுமதி பெற அலைந்து திரிதல். |
| சிம்மம் | நிரந்தரமாக வெளிநாட்டில் தங்கிவிட அனுமதி கிடைத்தல், பதவி நிரந்தரமாகும் சுப செய்தி கிடைத்தல், உயர்கல்வியின் பொருட்டு திருமணத்தைக்கைவிடல். |
| கன்னி | இடப்பக்க உறுப்புக்கள் விபத்தினால் பாதிக்கப்படல், பங்குத் தொழிலைக் கைவிட்டு தனித்தியங்க ஆவல் கொள்ளுதல், நோய் குணமடையும் நிலை கண்டு சந்தோஷமடைதல். |
| துலாம் | பயணம் இடைத்தங்கல் நாட்டில் சேர்ந்து விடல், எதிரியின் அடாவடித்தனத்தை அடக்க காவல்துறை சென்று முறையிடல். |
| விருச்சிகம் | அட்டத்துக் குருவினால் தொட்டகாரியம் துலங்காமை, நிறம்,உடல்வாகு காரணமாக முற்றாகும் நிலையில் இருந்த விவாகம் முறிவடைதல். |
| தனுசு | பரீட்சைப்பெறுபேற்றினால் விவாகத்திற்கு இருந்த தடை விலகிவிடல், போட்டோப்பிரதி எடுத்த இடத்தில் ஆவணத்தின் மூலப்பிரதி தவறிவிடல். |
| மகரம் | வாக்குவாதம் எதிரியை உண்டாக்கிவிடல், சத்திர சிகிச்சையினால் நோய் குணமடைதல், மிதிபலகைப் பிரயாணம் விபத்தினைக் கொண்டு வருதல். |
| கும்பம் | நோய் குணமடையும் அறிகுறி தென்படல், கலை விளையாட்டுத்துறையில் கௌரவிக்கப்படல், பிரயாணச் சுணக்கத்தினால் நேர்முகப்பரீட்சையை கோட்டை விடுதல். |
| மீனம் | ஒருதலைக் காதலால் மனம் வருந்துதல், வியாபாரம் எதிர்பார்த்த இலாபம் தராமை, நம்பியிருந்த பணவரவு காலை வாரிவிடல். |

## வேம்படியில் இன்று வலைப்பந்து

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபர் வெற்றிக் கிண்ண வலைப் பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் காலை 8.30 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தினால் பிரதேச செயலக ஊழியர்களுக்கிடையில் நடாத்தப்பட்டு வரும் விளையாட்டுகளில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் இன்று இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## சாய்னா முன்னேற்றம்

(ஓடென்சி)

டென்மார்க் ஓப்பன் சூப்பர்சீரிஸ் பிரிமியர் பட்மின்ரன் போட்டி ஓடென்சி நகரில் நடந்து வருகிறது. இதில் நடந்த பெண்கள் ஒற்றையர் முதலாவது சுற்றில் நடப்பு சம்பியன் இந்தியாவின் சாய்னா நேவால் 21-16, 21-12 என்ற நேர் செட்டில் பல்கேரியாவின் ஸ்டெபானி ஸ்டோவாவை தோற்கடித்து 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

## கைதிற்கு உத்தரவு

தம்து நாட்டு கால்பந்து அணியின் வீரர்கள் மூவரை கைது செய்யுமாறு ஸாம்பிய அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சீனாவில் நடைபெற்ற பிரேஸிலுக்கு எதிரான போட்டியில் ஸாம்பிய கால்பந்து அணி 2-0 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது. இந்த போட்டியில் குறித்த மூன்று வீரர்களும் பங்கு பற்றவில்லை, அதனையடுத்தே அவர்களை கைது செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பீஜிங்கிலுள்ள குறித்த மூவரையும் உடனடியாக நாடு திரும்புமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

## பி.சி.பி. கலைப்பு



பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அந்நாட்டின் பிரதமரால் கலைக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட் சபையின் காப்பாளர் என்ற வகையில் பிரதமர் நவாஸ் ஷெரிப் அந்நாட்டுக் கிரிக்கெட் சபையைக் கலைத்துள்ளார். கலைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்குப் பதிலாக 5 பேர் கொண்ட இடைக்கால முகாமைத்துவக் குழுவொன்றும் பிரதமரால் நியமிக்கப் பட்டுள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் இடைக்காலத் தலைவராகப் பதவி வகித்த நஜம் சேதி, முன்னாள் கிரிக்கெட் சபைத் தலைவர் கூஷகாரியார் கான், முன்னாள் வீரர்கள் ஸகீர் அப்பாஸ், ஹரூன் ரீகூஷத் ஆகியோரோடு, பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் முகாமையாளரான நவீட் சீ-மாவும் இக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வெளியிட்ட அறிக்கையில், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் காப்பாளரான பாகிஸ்தானின் பிரதமர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் யாப்பின் 41ஆவது பகுதியின்படி கிரிக்கெட் சபையைக் கலைத்துள்ளதாக அறிவித்துள்ளது.எனினும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் நாளுக்குநாள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உள்ளூர், சர்வதேச தொடர்புகளைத் தொடர்ந்தும் பேணுவதற்குமாக 5 பேர் கொண்ட இடைக்கால முகாமைத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கண்காணிப்பு

WORLD ANTI-DOPING AGENCY

ஜமேக்காவின் மெய்வல்லுநர்களுக்கான ஊக்கமருந்து சோதனைச் செயற்பாடுகளை சர்வதேச ஊக்கமருந்திற்கு எதிரான நிறுவனம் கண்காணிக்கவுள்ளது.

ஊக்கமருந்து பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதில் இடைவெளி காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

2012 ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஊக்கமருந்துச் சோதனைகள் போதுமானதாக இருக்கவில்லையென ஜமேக்காவின் ஊக்கமருந்திற்கு எதிரான ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் ஒருவர் கூறியிருந்தார்.

அசாபா பவல் உள்ளிட்ட முன்னணி மெய்வல்லுநர்கள் ஊக்கமருந்து சோதனையில் தோல்வியடைந்து, தடைகளை எதிர்நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தமது நாட்டின் ஊக்கமருந்திற்கு எதிரான ஆணைக்குழுவினை கண்காணிக்குமாறு ஜமேக்கா பிரதமர் விடுத்த அழைப்பினை சர்வதேச ஊக்கமருந்திற்கு எதிரான நிறுவ-னம் ஏற்றுக்கொண்டுள்ளது.

# வரலாறு படைத்த போஸ்னியா



(பாரிஸ்)

பிரேசிலில் நடக்கவுள்ள உலககோப்பைப் கால்பந்துத் தொடருக்கு நடப்புச் சம்பியன் ஸ்பெயின், போஸ்னியா உள்ளிட்ட அணிகள் முன்னேறின.

பிரேசிலில் அடுத்த ஆண்டு (யூன் 12- யூலை 13) உலககோப்பைக் கால்பந்துத் தொடர் இடம்பெறவுள்ளது. இதில் மொத்தம் 32 அணிகள் பங்கேற்கும். பிரேசில், ஜப்பான், அவுஸ்ரேலியா உள்ளிட்ட 14 நாடுகள் இத்தொடரில் பங்கேற்க ஏற்கனவே தகுதி பெற்றன.

எஞ்சியுள்ள இடங்களுக்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் பல்வேறு பகுதிகளில் நடக்கிறது. ஐரோப்பிய கால்பந்து கூட்டமைப்பு சார்பில் (யு.இ.எப்.ஏ.,) நேற்று முன்தினம் நடந்த ஐ பிரிவு போட்டியில் ஸ்பெயின் அணி, ஜோர்ஜியாவை எதிர்கொண்டது.

இதில் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ஸ்பெயின் அணிக்கு முதல் பாதியில் நெக்ரிடோ (26ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு ஜோர்ஜிய அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

பின் இரண்டாவது பாதியிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய ஸ்பெயின் அணிக்கு, மாடா (61ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு கடைசிவரை போராடிய ஜோர்ஜிய அணி வீரர்களால் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை.

முடிவில், ஸ்பெயின் அணி, ஜோர்ஜியாவை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி 14ஆவது முறையாக தகுதிபெற்றது. ஜீ பிரிவில் நடந்த மற்றொரு போட்டியில் போஸ்னியா அணி, லிதுவா-னியா அணியை எதிர்கொண்டது. போட்டியின் முதல் பாதியில் இரு அணி வீரர்களும் கோல் எதுவும் அடிக்கவில்லை. பின் இரண்டாவது பாதியில் எழுச்சிகண்ட போஸ்னியா அணிக்கு விடாட் (68ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு லிதுவானியா அணி வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை.

முடிவில், 1-0 என வெற்றி பெற்ற போஸ்னியா அணி, உலககோப்பை தொடருக்கு முதல் முறையாக தகுதி பெற்று வரலாறு படைத்தது.

## சிறந்த ஆட்டங்களில் ஒன்று

இந்திய அணியின் சிறந்த ஆட்டங்களில் ஜெய்ப்பூரில் இடம்பெற்ற அவுஸ்ரேலிய அணிக்கெதிரான இந்தப் போட்டியும் அடங்கும் என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார். அவுஸ்ரேலிய அணியுடனான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் வெற்றிபெற்றமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே டோனி மேற்கண்ட்வாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த இலக்கை எங்களால் துரத்திப்பிடிக்க முடியும் என்பதை அறிவேன். 2009ஆம் ஆண்டு ராஜ்கோட்டில் நடந்த ஆட்டத்தில் இந்தியாவுக்கு (418 ஓட்டங்கள்) எதிராக இலங்கை அணி 2ஆவதாக ஆடியபோது 411 ஓட்டங்கள் வரை நெருங்கி வந்ததை வீரர்களுக்கு சுட்டிக்காட்டினேன். எனவே இலக்கைப் பற்றி கவலைப்படாமல், உங்களது இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்துங்கள், சாதிக்கலாம் என்று வீரர்களிடம் கூறினேன். தவானின் துடுப்பாட்டம் அருமையாக இருந்தது. ஹோலியின் ஆட்டம் வியப்புக்குரியது.


ரோகித் சர்மாவும் மிகப்பெரிய இனிங்ஸை விளையாடி உள்ளார். என்றாலும் எங்களது பந்து வீச்சில் இன்னும் முன்னேற்றம் தேவைப்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரைச் சதத்தில் சாதனை

• ஒரு நாள் போட்டியில், அவுஸ்ரேலியாவின் முதல் 5 வீரர்கள் அரைசதத்துக்கு மேல் எடுத்து சாதனை படைத்துள்ளனர். ஜெய்ப்பூரில் இடம் பெற்ற இந்திய அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில், அவுஸ்ரேலியாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பின்ச் 50, ஹூக்ஸ் 83, வட்சன் 59, பெய்லி 92 மைக்ஸ்வெல் 53 எடுத்தனர்.

இதற்கு முன்பு 2008ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி, கராச்சியில் சிம்பாப்வேக்கு எதிராக நடந்த ஒரு நாள் போட்டியில், பாகிஸ்தான் அணியின் முதல் 5 வீரர்களான நசீர் ஜம்ஷெத் 61, யூனிஸ் கான் 79, மொகமட் யூசுப் 72, மலிக் 63, மிஸ்பா உல் ஹக் 55 ஓட்டங்கள் எடுத்து முதல் முறையாக உலக சாதனை படைத்தனர். தற்போது அவுஸ்ரேலிய வீரர்கள் 2ஆவது முறையாக சாதனை படைத்துள்ளனர்.

## இளம் வீரர்களுக்காக ஓய்வு



(மும்பை)


இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அகர்கர் முதல்தர ஆட்டம் உட்பட எல்லா வகையான கிரிக்கெட் போட்டியிலும் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

35 வயதான அகர்கர் 26 டெஸ்ட் போட்டியில் விளையாடி ஒரு சதம் உட்பட 571 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அத்துடன் 58 விக்கெட்டும் சாய்த்துள்ளார். 191 ஒருநாள் போட்டியில் ஆடி 1269 ஓட்டங்கள் எடுத்ததுடன் 288 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருக்கிறார். ருவென்ரி-20 போட்டியில் 4 ஆட்டத்தில் விளையாடி 15 ஓட்டங்கள் எடுத்ததுடன் 3 விக்கெட்டுக்களும் கைப்பற்றியுள்ளார். 110 முதல் தர போட்டியில் விளையாடி 3336 ஓட்டங்கள் எடுத்து இருப்பதுடன் 299 விக்கெட்டுகள் வீழ்த்தியிருக்கிறார். 2007ஆம் ஆண்டுக்குப் பின்னர் அகர்கருக்கு சர்வதேச போட்டிகளில் இந்திய அணிக்காக விளையாடும் வாய்ப்புக்கிடைக்கவில்லை.ஓய்வு குறித்து கருத்துத் தெரிவித்த அகர்கர், தொடர்ந்து விளையாட விருப்பம் இருந்தாலும், இளம் வீரர்களின் வாய்ப்பைத் தடுக்கக்கூடாது என்பதால் ஓய்வு முடிவை எடுத்தேன் எனத் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவின் சாதனை வீரர்

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஜெய்ப்பூர் ஒரு நாள் போட்டியில் இந்திய இளம் நாயகன் ஹோலி 52 பந்துகளில் சதம் அடித்து பட்டையைக் கிளப்பினார். இதன் மூலம் ஒரு நாள் போட்டியில் குறைந்த பந்துகளில் சதம் அடித்த இந்தியர் என்ற சாதனைக்கு ஹோலி சொந்தக்காரர் ஆனார். இதற்கு முன்பு சேவாக், 2009ஆம் ஆண்டு நியூசிலாந்துக்கு எதிராக 60 பந்துகளில் சதம் விளாசியதே இந்திய வீரர் ஒருவரின் மின்னல்வேக சதமாக இருந்தது. அத்துடன் உலக அரங்கில் துரிதமாக சதம் அடித்தவர்களின் வரிசையில் ஹோலி 7ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். இதில் முதலிடத்தில் பாகிஸ்தான் வீரர் அப்ரிடி 37 பந்துகளில் சதமடித்தமையே உலக சாதனையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதல் டெஸ்ட்; வென்றது பாகிஸ்தான்



(அபுதாபி)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

பாகிஸ்தான் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி அபுதாபியில் நேற்று நிறைவடைந்தது.

முதல் இனிங்ஸிற்காக ஆடிய தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய பாகிஸ்தான் அணி கே. மன்சூர், கப்டன் மிஸ்பா உல் ஹக் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 442 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மன்சூர் 146, மிஸ்பா உல் ஹக் 100 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரைன் மூன்று, டுமினி இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

193 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய தென்னாபிரிக்க அணி அஜ்மல், யுனைட்கான் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ஒரு முனையில் சளைக்காது டி வில்லியர்ஸ் போராடினார். இறுதியில் தென்னாபிரிக்க அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 232 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டிவில்லியர்ஸ் 90, ரொபின் பீற்றர்சன் 47, ஸ்மித் 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சயிட் அஜ்மல் நான்கு, யுனைட்கான் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 40 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய பாகிஸ்தான் அணி நான்காம் நாள் ஆட்டத்தின் நிறைவு வேளை மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கப்டன் மிஸ்பா உல் ஹக் ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களைப் பெற்றார். இதன் மூலம் பாகிஸ்தான் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# அர்ப்பணிப்பு மிக்க கூட்டு முயற்சியே வீரர்களின் தரத்தை உயர்த்த வழி

## வடமாகாண உடற்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன்


(யாழ்ப்பாணம்)

வீர,வீராங்கனைகளின் தன்னார்வமே வடமாகாணம் அதிக பதக்கங்களை வெல்ல முக்கிய காரணம். இருப்பினும் அவர்களின் அகப்புறச் சூழல் இன்னும் சிறப்புடன் இருக்குமாயின் அதிக பதக்கங்களை, ஏன் சர்வதேச தரத்தில் மிளிரக்கூடிய வீரர்களை எங்கள் பிரதேசங்களில் உருவாக்க முடியும் என வடமாகாண உடற்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டு விழா கடந்த 2ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் வடமாகாணம் 24 பதக்கங்களை வென்றதுடன் 198 புள்ளிகளைப் பெற்று ஆறாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. கடந்த ஆண்டு 18 பதக்கங்களை வென்ற வடமாகாணம் 178 புள்ளிகளைப் பெற்று ஆறாமிடத்தைப் பெற்றிருந்தது.

இப்போட்டி குறித்து கருத்துக் கேட்ட போதே கே. சத்தியபாலன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஆண்டுடன் பார்க்கையில் இந்த ஆண்டில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்பதில் சந்தேகமில்லை.

குறிப்பாக, யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னரான. கடந்த நான்காண்டுகளில் விளையாட்டுத்துறையில் வடமாகாண வீர,வீராங்கனைகள் நல்ல முன்னேற்றத்தை அடைந்துள்ளனர். இது படிமுறை வளர்ச்சியாக மெல்ல மெல்ல வீச்சுப் பெற்று வருகின்றது. இதனை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு வாய்ந்தவர்களாக நாம் உள்ளோம் என்பதை ஏற்றுக் கொள்கின்றேன்.



இந்த ஆண்டும் தேசியப் போட்டிகளில் பங்கு கொண்ட வீரர்களுக்கான பல பயிற்சி முகாம்களை நாம் நடாத்திருயிக்கின்றோம். எங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்துச் செயற்பாடுகளையும் நாம் முன்னெடுத்து வருகின்றோம். இது வீர, வீராங்கனைகளிடமிருந்து கிடைக்கின்ற ஒத்துழைப்பின் மூலமே சாத்தியமாகின்றது. அவர்களிடத்தில் அதிக தன்னார்வம் இருப்பதே தேசிய போட்டிகளில் வடமாகாணம் சாதிப்பதற்கு முக்கிய காரணம். இருப்பினும் பெற்றோர்கள்மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள், வர்த்தக சமூகம் ஆகிய தரப்புகளிடமிருந்து முழுமையான ஊக்குவிப்புகள், அனுசரணைகள் கிடைக்கப்பெறவேண்டும். இதுவரை கிடைக்கப்பெறவில்லைஎன்று நான் குறிப்பிடவில்லை. ஆனாலது தத்தெடுப்பாக மாற்றம் பெறவேண்டும்.

அதாவது, தேசிய மட்டப் போட்டிகளில் சாதிக்கும், சாதிக்கக்கூடிய வீரர்களை விளையாட்டில் ஆர்வமுள்ள வர்த்தக நிறுவனங்கள் தத்தெடுத்து, அவர்களுக்கான வசதி வாய்ப்புக்களை செய்து கொடுக்க வேண்டும் அல்லது வேலை வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்து, அதற்கூடாக சிறந்த பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இன்றைய உலகில் விளையாட்டில் சாதிக்கக் கூடிய வீரர்கள் மிக விரைவாக வெளிக்கொணரப்படுகின்றனர். அதன் மூலம் அவர்களுக்கு புகழ், பணம் என்பன விரைவாகக் கிடைக்கப்பெறுகின்றது. இந்த நிலைக்கு இன்னும் நாம் செல்லவில்லை. ஆனால், வர்த்தக நிறுவனங்கள் விளையாட்டுக்கு முழுமையான ஊக்குவிப்பை, ஒத்துழைப்பை வழங்குமாயின் நாம் விரைவான முன்னேற்றத்தை விளையாட்டில் எட்ட முடியும் என்று நம்புகின்றேன். அத்துடன் ஒவ்வொரு விளையாட்டிலும் வீர, வீராங்கனைகளை இனங்காண்பதும், அவர்களை அதில் ஊக்குவிப்பதும் ஒவ்வொரு பாடசாலைகளுடைய கட்டாய பணியாகும்.

பாடசாலைகளிலிருந்துதான் அது தொடங்கப்படவேண்டும். அப்படித் தொடங்கப்பட்டதால்தான் அதன்வளர்ச்சி உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால், வடமாகாணத்தைப் பொறுத்த வரையில் சில வலயங்களும், பாடசாலைகளுமே கூடியளவு பங்களிப்புச் செய்து வருகின்றன.

அந்த வகையில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிகள் தொடர்ச்சியாக கோலூன்றிப் பாய்தல் வீர,வீராங்கனைகளை உருவாக்கி வருகின்றன.

இது எதிர்கால விளையாட்டுச் செயற்பாடுகளுக்கு ஆரோக்கியமானதாக அமையாது. ஒரு சில பாடசாலைகளில் மட்டும் தங்கியிராது சகல வலயப் பாடசாலை வீர,வீராங்கனைகளும்விளையாட்டில் சாதிக்க வேண்டும் என்பதே எமது நோக்கம் அல்லது இலக்கு. அதனையே நாம் எதிர்பார்க்கின்றோம். இதில் பாடசாலை அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள், ஏனைய ஆசிரியர்களின் பங்களிப்பு அதிகம் உண்டு. இதே போன்று இன்றைய காலத்தில் விளையாட்டுத்துறையின் வளர்ச்சியில் ஊடகங்களின் பங்கும் அதிகரித்து காணப்படுகின்றது. இது இன்னும் வீச்சுப் பெற வேண்டும். எனவே, கூட்டு முயற்சியுடன் கூடிய முன்னெடுப்புகள் தொடரப்படும் இடத்து, தேசிய, சர்வதேச தரம் மிக்க வீர,வீராங்கனைகளை எங்களால் விரைவாக உருவாக்கிக் கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(எஸ்.பி.)

## விளையாட்டு செய்திகள்

### விபுலானந்தன் நினைவு கூடைபந்து

# யாழ். இந்து அமர்க்களம்

(மானிப்பாய்)

பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டத் தொடரின் முதல் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

யாழ். மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபையினால் நடாத்தப்படுகின்ற பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல பாடசாலை அணிகள் பங்குபற்றி வருகின்றன.

19 வயதுப்பிரிவு ஆண்கள் பிரிவில் இடம்பெற்ற முதல் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரியும் சென் பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன. இப்போட்டி முதலே விறுவிறுப்பாக அமைந்திருந்தது. குறிப்பாக, யாழ். இந்துக் கல்லூரியின் ஆதிக்கமே அதிகம் காணப்பட்டது. இறுதியில் 40:30 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்ற யாழ்.இந்துக் கல்லூரி அணி அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

போட்டிகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாகவும், இப்போட்டியில் கிண்ணத்தை வெல்லும் அணிக்கு பெறுதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)

# மன்னார் மைந்தனுக்கு உற்சாக வரவேற்பு



(மன்னார்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் பதக்கம் வென்று மன்னார் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த எஸ். அன்று டிலைக்ஷனுக்கு பாடசாலைகள் சமூகத்தினால் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டி அண்மையில் கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதில் மன்னார் மாவட்டம் சார்பாக அதிகளவிலான வீர,வீராங்கனைகள் பங்குகொண்டனர். இருப்பினும் இப்போட்டியில் மன்னார் நானாட்டான் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ். அன்று டிலைக்ஷன் மட்டுமே பதக்கத்தை வென்றார். இவர் ஆண்களுக்கான 21 வயதுப் பிரிவு உயரம் பாய்தலில் 1.98 மீற்றர் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார். இதேவேளை, இதே பாடசாலையைச் சேர்ந்த கொ. நெவில்ராஜ் 19 வயதுப் பிரிவில் ஏழாமிடத்தைப் பிடித்துக் கொண்டார்.

இந்த வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலைச் சமூகம் மற்றும் வலயக் கல்விப் பணிமனையினால் மிகவும் சிறப்பான முறையில் நடாத்தப்பட்டது.

வெற்றிக்கு காரணமாகவிருந்த பாடசாலை அதிபர் அருட்சகோதரர் ச.இ. றெஜினோல்ட், உடற்கல்வி ஆசிரியரும், பயிற்றுவிப்பாளருமான எஸ். சிறிதேவகரன், உடற்கல்வி ஆசிரியர் திருமதி ஜெ. தேவராசா உட்பட்டோர் கௌரவிக்கப்பட்டனர்.

# நூதன சாலை அமைக்கத் திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் விளையாட்டு நூதனசாலை ஒன்றை அமைப்பதற்கு விளையாட்டுத்துறை அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

அதன்படி நூதனசாலை அமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

உலகின் பல நாடுகளிலும் பொது நூதனசாலை மற்றும் அந்நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தி வெற்றி பெறும் வீரர்களுக்காக நூதனசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறான விளையாட்டு நூதனசாலையை இலங்கையிலும் அமைப்பதற்கு தீர்மானம் எடுத்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார்.

# டில்சானின் அறிவுரை

இளம் டெஸ்ட் வீரர்களை இனங்காணும் திட்டங்களை செயன்முறைப் படுத்தும் நடவடிக்கைகளை கிரிக்கெட் சபை மேற்கொள்ள வேண்டும் என இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டில்சான் தெரிவித்துள்ளார்.

இளம் வீரர்கள் ருவென்ரி-20 போட்டிகளிலேயே அதிக நாட்டம் கொண்டுள்ளனர். இது கிரிக்கெட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும். இதனைத் தடுக்கும் வகையில் புதிய செயற்றிட்டம் ஒன்றை கிரிக்கெட் சபை விரைவில் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மகிந்த முன்னிலையில் பதவிப்பிரமாணம் தமிழர்களுக்கு சாதகமான ஒரு விடயமே!

- யதீந்திரா கட்டுரையிலிருந்து.


வடக்கு முதல்வரின் பதவியேற்பு இலங்கையின் தமிழ்ச் சூழலில் மட்டுமல்லாது, புலம்பெயர் சூழலிலும் கடும் வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இது தொடர்பில் முல்லைத்தீவில் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் என்போரால் விக்னேஸ்வரன், சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரது உருவ பொம்மைகளை எரித்து, தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். மேலும், கூட்டமைப்பில் அங்கத்துவம் வகித்துவரும் கட்சிகளான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் ரெலோ ஆகியவை பதவிப் பிரமாணத்தில் பங்குகொள்ளவில்லை. வெளித்தோற்றத்தில் அவர்கள் இதனை பகிஸ்கரித்திருப்பதாகவே செய்திகள் பதிவாகியுள்ளன. இவ்வாறானதொரு நிகழ்வை பகிஸ்கரிப்பதற்கான தார்மீக தகுதி அவர்களுக்கு இருக்கிறதா என்பதை பார்ப்பதற்கு முன்னர், இலங்கை ஜனாதிபதியின் முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்தமையானது, இன்றைய சூழலில் சரியான ஒன்றுதான் என்று வாதிடுவோரின் கருத்துக்களை செவிமடுப்போம்.

வடக்கு மாகாணசபை என்பது தற்போதுதான் பிறந்த குழந்தை, எனவே ஆரம்பத்திலேயே ஒரு முரண்பாட்டுடன் அதனை நாம் ஆரம்பிக்கக் கூடாது. எனவே ஒரு சுமூக நிலையை பேணிக்கொள்ளும் நோக்கிலேயே மேற்படி தீர்மானத்திற்கு நாம் வர நேர்ந்தது.

எதிர்ப்பவர்கள் சொல்லுவது போன்று, சட்டத்தின் பிரகாரம், சமாதான நீதவான், சட்டத்தரணி அல்லது கட்சியின் தலைவரான சம்பந்தன் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டால் தமிழ் மக்களுக்கு கிடைக்கக்கூடிய அந்த அபூர்வ நன்மை என்ன? ஜனாதிபதியின் முன்னிலையில் இடம்பெற்ற பதவிப் பிரமாண நிகழ்வால் உணர்ச்சி வசப்படுபவர்கள் மேற்படி இரண்டு கேள்விகளையும் கருத்தில் கொள்வது அவசியம்.

இவ்வாறானதொரு முடிவை இந்திய மற்றும் அமெரிக்க மட்டத்தினரும், அத்தகையதொரு அணுகுமுறையைத்தான் எங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றனர். மகிந்தவின் முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுப்பதாக தீர்மானித்த பின்னர் சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார். ஆனால் இதனை எதிர்ப்பவர்களோ வேறு காரணங்களை சொல்லுகின்றனர். ஜனாதிபதியின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்ததன் மூலம் அதிகரித்துவரும் சர்வதேச அழுத்தங்களிலிருந்து ஆளும் மகிந்த அரசாங்கத்தை காப்பாற்றுவதற்கே துணைபுரிந்திருக்கின்றனர். இதன் மூலம், தேர்தல் காலத்தில் தாம் வடக்கு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு துரோகம் இழைத்துவிட்டனர். வடக்கு மக்களின் விருப்பத்திற்கு மாறாகவே இந்த நிகழ்வு இடம்பெற்றிருக்கிறது. இதனை எந்த வகையிலும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

மேற்படி அபிப்பிராயங்களை அடியொற்றி இரண்டு கேள்விகளை இப்பத்தி முன்கொண்டுவருகிறது. வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன், மகிந்த ராஜபக்சவின் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்தமையால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதகங்கள் என்ன? இரண்டு, மேற்படி நிகழ்வை இந்தியா அல்லது அமெரிக்கா வலியுறுத்தியதா அல்லது இல்லையா என்பதற்கு அப்பால், வடக்கு மாகாண-சபையை நிர்வகிப்பதற்கு ஒரு சுமூக நிலைமை அவசியமா இல்லையா என்பதே இங்கு கருத்தில்கொள்ளப்பட வேண்டியது. அந்த வகையில் நோக்கினால், இதனை தவறான அல்லது தமிழ் மக்களுக்கு பாதகமானதொரு விடயமாக நோக்க முடியாது. இலங்கையில் இருதரப்பும் இணக்கமான ஒரு தீர்வை காணவேண்டுமாயின், ஆளும் மகிந்த அரசாங்கத்துடன் ஒரு சுமூக நிலையை ஏற்படுத்தாமல் அதனை சாத்தியப்படுத்த முடியாது. ஆகக்குறைந்தது அதனை நோக்கி நகரவும் முடியாது. இந்த நகர்வை, அவசரப்பட்டு மகிந்தவின் நிகழ்ச்சிநிரலுக்குள் சரணாகதி அடைந்துவிட்டதாகப் பொருள்கொள்ள வேண்டியதில்லை. எனவே மகிந்தவின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்தமையானது தமிழர்களுக்கு சாதகமான ஒரு விடயமே!



உணர்ச்சிவசப்பட மட்டுமே தெரிந்திருக்கும் கட்சியின் ஆதரவாளர்கள் என்போர் ஆதங்கப்படுகின்றனர் என்பதற்காக சிந்திக்கும் தரப்பினரும் அவர்களுடன் சேர்ந்து நடனமாடக் கூடாது. சாதாரண மக்களுக்கு நிலைமைகளை தெளிவுபடுத்த வேண்டியதுதான் சிந்திக்கும் தரப்பினரின் பணி. இன்று, மேற்படி பதவிப்பிரமாணம் இந்தளவிற்கு சர்ச்சைகளை ஏற்படுத்தியதற்கு, கூட்டமைப்பினர் தேர்தல் பிரச்சாரங்களின்போது வெளிப்படுத்திய கருத்துக்களும் ஒரு காரணம் ஆகும். வாக்குகளை சேகரிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் உண்மைக்கு புறம்பான பிரச்சாரங்களே பின்னர் யதார்த்தபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது ஒரு பூமறாங் போன்று திரும்பித் தாக்குகிறது. இதற்கு புதிதாக அரசியலில் இணைந்துகொண்ட விக்னேஸ்வரனும் விதிவிலக்கல்ல.

இந்த விடயத்தில் ஒரு சிலர் மிகுந்த நிதானத்தை கடைப்பிடித்தாலும், கூட்டமைப்பில் உள்ள பலரிடம் அவ்வாறானதொரு நிதானம் இல்லை. ஆனால், இதே நபர்கள் இலங்கையின் அரசியலமைப்புக்கு விசுவாசமாக ஏற்கனவே சத்தியப் பிரமாணம் செய்து நாடாளுமன்ற உறுப்பினர்களாக வலம் வந்து கொண்டிருக்கின்றனர். அந்த பதவியை எப்பாடுபட்டேனும் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். உண்மையில் இவர்கள் விடுதலைப் புலிகளை ஆதரிக்க விரும்பின் அது தவறான ஒன்றல்ல என்றே இப்பத்தி கருதுகிறது. அதன் ஆரம்பமாக, இலங்கை அரசியல் அமைப்பை நிராகரிக்கும் வகையில், தங்களது பாராளுமன்ற உறுப்புரிமையை இவ்வாறானவர்கள் இராஜினாமா செய்ய முன்வரவேண்டும். இதற்கு எத்தனை பேர் தயாராக இருக்கின்றனர்? எனது எழுத்துலக நண்பர் ஒரு சொல்லுவார், ஒவ்வொரு தேர்தல்களிலும் தலைவர்கள் வெல்லுகின்றனர், ஆனால் மக்கள் தோற்றுக் கொண்டிருக்கின்றனர். அந்த நண்பரின் கணிப்பு முற்றிலும் சரியானது. எனவே தற்போது மக்களை வெற்றியாளராக்கும் அரசியலை நோக்கி முன்னகர வேண்டியதுதான் கட்டாயமானது. அவ்வாறானதொரு நோக்கில் சம்பந்தன் தரப்பினர் அணிசேர்ந்திருப்பர் எனின், அவர்களது முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது மக்களது நலனை முன்னிறுத்தி சிந்திப்போரின் கடமையாகும். அதற்காக கண்மூடித்தனமாக அவர்களை ஆதரிக்க வேண்டும் என்று இப்பத்தி வாதிடவில்லை.

## பரிபாஷை!



பரிபாஷை என்றால் ஒரு பொருளை-யோ கருத்தையோ குறிப்பிடுவதற்கு வழக்கத்தில் உள்ள சொல்லையோ சொல் தொடரையோ உபயோகிக்காமல் வேறு சொல்லையோ, சொல்தொடரையோ உபயோகித்து மறைமுகமாகக் குறிப்பிடுவது என்று பொருள். பரிபாஷை எல்லாத்துறையிலும் உண்டு. இரசாயனம், வியாபாரம், தரகு எல்லாவற்றிலும் உண்டு. "ஆக்வா" என்றால் நமக்குப் புரியாது. விஞ்ஞானி நீர் என்று அறிவான். சமையல்காரர்கள் பேசிக் கொள்ளும்போது சூலம், பஞ்சா என்ற வார்த்தைகள் அடிபடும். சம்பளம் மூன்று ரூபாய், ஐந்து ரூபாய் என்று பொருள்!

தங்கள் தங்கள் சாமானுக்கு வியாபாரிகள் விலாசம் போட்டிருப்பார்கள். விலாசம் என்றால் விலை. 11091 என்று போட்டிருந்தால் சில எண்களை ஒதுக்கிவிட்டால் அதுவே அந்தச் சாமானின் விலையாகும். எந்த எண்ணை ஒதுக்க வேண்டும் என்பது அந்தக் கடையின் பரிபாஷை இரகசியத்தைச் சேர்ந்தது. சில சமயம் எண்களுக்குப் பதிலாக எழுத்துகளை விலாசமாக உபயோகிப்பதுண்டு. மாட்டு வியாபாரி, நகை வியாபாரி முதலியவர்கள் கம்பளிக்குள் விரலைத் தொட்டு விலை பேசுவதை நாம் பார்த்திருக்கலாம். இங்கே விரல்கள் பரிபாஷை.

கோயில்களில், குறிப்பாக பரிபாஷை மிகுந்தது வைணவ ஆலயங்களே. அதிலும் ஸ்ரீரங்கம் கோயிலில் உள்ள அளவுக்கு வேறு எந்தக் கோயிலிலும் பரிபாஷைகள் இல்லை.


இங்கு அரவணை என்ற ஒரு சொல் ஒரு வகைப் பிரசாதத்தைக் குறிப்பிடும். இராக்காலத்தில் அரங்கர் சந்நிதியில் நைவேத்யம் ஆகும். இது ஆதி சேஷனுக்காக ஏற்பட்டது. அதனால் அரவணை என்ற பெயர் போலும். ஆராதனைக் காலங்களில் உபயோகிக்கப்படும் பொருள்களுக்கும் பரிபாஷைப் பெயர்கள் உண்டு. "ராமானுஜனை எடு" என்றால் தீபக்கால் எடுக்க வேண்டும். "கரைசல் கொடு" என்றால் சந்தனம் கொடுக்க வேண்டும். "மிலாக்கா வாங்கி வா" என்றால் கொட்டாரத்திலிருந்து சந்தனக்கட்டை வாங்கி வர வேண்டும். "பவழக் காப்பு" என்றால் புளி கொண்டு வர வேண்டும். "வகைச்சல்" என்றால் மாலை! "ஈரங்கொல்லி" என்றால் கோவில் சலவைக்காரனுக்குப் பரிபாஷைப் பெயர்!

கோவிலில் உள்ள திருப்படிகத்திற்குச் சுந்தரபாண்டியன் என்று பெயர். பாண்டிய நாட்டரசன் சுந்தரபாண்டியன் அரங்கனிடம் அளவுக்கு மிஞ்சி ஈடுபட்டவன். கோவிலை ஆதியில் தங்கமயமாக்கினான் என்று சரித்திரம் சொல்லுகிறது. தினசரி பூஜைக்கு இன்றியமையாத படிகம் சுந்தரபாண்டியன் என்ற பெயரால் வழங்குகிறது.

அரங்கர் கோயில் உற்சவமூர்த்திக்கு நம்பெருமாள் என்று பெயர்! கர்ப்பகிரஹத்தில் - நம்பெருமாள் பூபாலராயன் மீது வீற்றிருக்கிறார். சிம்மாசனத்துக்குப் பரிபாஷை பூபால ராயன்!

("ந.பிச்சமூர்த்தி கட்டுரைகள்" நூலில்)

## வேறு வழியில்லாமல்...



வங்காளத்தின் பிரபல நாவலாசிரியர் சரத் சந்திரரிடம், நண்பர் ஒருவர் "நீங்கள் எப்படி எழுத்தாளர் ஆனீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு சரத்சந்திரர், "நான் ரங்கூனில் வேலை செய்து கொண்டிருந்தேன். சம்பளம் போதவில்லை. எனவே வேலையும் செய்து கொண்டு, ஒரு பலசரக்குக் கடையும் வைத்து நடத்தலாம் என்று முடிவு செய்தேன். என்னால் பலசரக்குக் கடை வைத்து நடத்த முடியுமா? என்று என் மனைவி சந்தேகப்பட்டு, சில மளிகைச் சாமான்களின் அளவு, அவற்றின் விலைகளைச் சொல்லிவிட்டு, எல்லாவற்றையும் மனக்கணக்காகக் கூட்டிப் போடச் சொன்னாள். என்னால் முடியவில்லை. "உங்களால் பலசரக்குக் கடையெல்லாம் நடத்த முடியாது" என்று அவள் தீர்ப்புச் சொல்லிவிட்டாள். அப்புறம் என்ன பண்ணுவது? வேறு வழியில்லாமல் கதை எழுத ஆரம்பித்துவிட்டேன்"

(கதைச் சிற்பி சரத் சந்திரர் - என்ற நூலிலிருந்து)

# சினிமா சினிமா

◗ 18ஆம் நூற்றாண்டின் போராளி மொஹமத் யூசுப் கான் வரலாற்றை மையமாக வைத்து மருத நாயகம் படத்தை தானே தயாரித்து இயக்கத் திட்டமிட்டிருந் தார் கமல்ஹாசன். பெரும் எதிர்பார்ப்புடன் 1997ஆம் ஆண்டு இங்கிலாந்து ராணி சென்னைக்கு வந்து படப்பிடிப்பைத் தொடங்கி வைத்தார். ஆனால், தொடங்கிய வேகத்திலேயே படம் திடீரென்று நின்று போனது. அந்தக் காலத்திலேயே ரூபா 50 கோடிக்கு மேல் செலவாகும் எனக் கூறப்பட்டது. இதற்கு நிதி உதவி செய்வதாக கூறிய வெளிநாட்டினர் சிலர், திடீரென்று பின்வாங்கியதால் படம் தடைப்பட்டது. விஸ்வரூபம் படத்தின் வெற்றிக்குப் பிறகு, அவர்கள் மருதநாயகம் படத்தை தொடங்கும் படியும் அதற்கு உதவத் தயாராக இருப்பதாகவும் கமலுக்கு நம்பிக்கை ஊட்டியுள்ளனர். இந்தத் திடீர் திருப்பத்தை எதிர்பார்க்காத கமல், படப்பிடிப்பை தொடங்கும் திட்டத்தில் இருக்கிறார்.






◗ அவுஸ்ரேலியா வாழ் இலங்கைத் தமிழரான எம்.எஸ்.ஆனந்த் கோலிவுட்டில் இயக்குநராக அறி முகமாகிறார். தனது படத்திற்கு "யாழ்" என்று பெயரிட்டிருக்கிறார். வினோத், சசி, டானியல் பாலாஜி, நீலிமா, மிஷா மற்றும் "சிறுத்தை" படத்தில் குழந்தை நட்சத்திரமாக கவனத்தை ஈர்த்த ரக்ஷனா முக்கிய பாத்திரமேற்று நடிக்கின்றனர். "ஈழப் போரின் பின்னணியில் முழுக்க முழுக்க ஈழத் தமிழர்களின் வாழ்வை ஒட்டிய கதையாக இது உருவாக்கப்பட்டுள்ளது" என்கிறார் இயக்குநர் எம்.எஸ்.ஆனந்த்.

◗ பவர் ஸ்டார் சீனிவாசன். பண மோசடி வழக்கில் கைதாகி, இப்போது ஜாமீனில் வெளியே வந்துள்ளார். மீண்டும், புதிய படங்களில் நடிப்பதில், ஆர்வம் காட்டி வரும் அவர் பேச்சில் லொள்ளு குறையவில்லை. "முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராயுடன், ஒரு படத்திலேனும், டூயட் பாடி விட வேண்டும் என்பது தான், என் சினிமா இலட்சியம்..." என்று கூறியுள்ளார். "இதெல்லாம், நடைமுறைக்கு ஒத்து வராது..." என்று சொல்பவர்களிடம், "மத்தவங்க முடியாது என்று சொல்றதை, முடித்துக் காட்டுறது தான், இந்த பவரோட ஸ்டைல். இந்த கோலிவுட்டே, மூக்கில் விரலை வைக்கிற மாதிரி, ஐஸ்வர்யா ரா-யோட நடிச்சுக் காட்டுறேன் பாருங்கள்..." என்று, சொடக்குப் போட்டுச் சொல்லியிருக்கிறார்.

◗ லண்டனைச்சேர்ந்த எமி ஜாக்சன் தமிழ்ச்சினிமா















வில் மதராசப்பட்டினம் மூலம் அறிமுகமான மூன்று வருடங்களில் ஒரு ஹிந்திப் படம் உட்பட மூன்று படங்களில் மட்டுமே நடித்துள்ளார்.தற்போது ஷங் கரின் "ஐ" படத்தில் நடித்து வரும் எமி ஜாக்சனுக்கு, தமிழில் வேறு பட வாய்ப்புகள் இல்லை. அதனால் லண்டனைச் சேர்ந்த ஜேம்ஸ் ருட்லன்ட் என்ற புகைப்படக் கலைஞரை அமர்த்தி வித விதமான கவர்ச்சி போஸ் கொடுத்து புகைப்படம் எடுத்து தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டு இருக்கிறார். தென்னிந்திய இயக்குநர்களை கவருவதுதான் எமியின் திட்டமாம்.

◗ "பாஹுபலி", "ராணி ருத்ரம்மாதேவி" என சரித்திரப் பின்னணியில் உருவாகும் 2 தெலுங்கு படங்களில் நடித்து வருகிறார் அனுஷ்கா. 3 டியில் உருவாகும் "ராணி ருத்ரம்மாதேவி" படத்தில் ஏராளமான நகைகள் அணிந்து ராணி கெட்டப்பில் அனுஷ்கா ஆடும் நடனம் படமாகிறது. இளையராஜா இசையமைத்திருக்கிறார். இரு படங்களும் முடிய இரண்டு வருடங்களுக்கு மேல் ஆகும் என்பதால், தமிழ்ப் படங்களில் நடிப்பதில்லை என அனுஷ்கா முடிவெடுத்திருக்கிறார்.

◗ சமீபத்தில், அரசியல் புள்ளி ஒருவரை திருமணம் செய்து கொண்டதாக பரவிய செய்தியில், ஆடிப்போயிருக்கிறார் அஞ்சலி. அதனால், தொடர்ந்து தன்னைப்பற்றி கிசுகிசுக்கள் வந்தால், தன் தொழிலுக்கே உலை வைத்து விடும் என்று நினைக்கும் அஞ்சலி, இனி, படப்பிடிப்பு சம்பந்த மாக, எந்த வெளிப்புறப் படப்பிடிப்புகளுக்குச் சென்றாலும், அதை, "பேஸ் புக்"இல், இரசிகர்களிடம் சொல்லிவிட்டே செல்வேன் என்கிறார்.

◗ வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்ற படத்தில், ஹீரோவாக நடிக்கிறார் சந்தானம். செய்தி பரவியதும், அவருடன் நடித்த, காதல் சந்தியா உள்ளிட்ட சில நடிகைகள், கதாநாயகி வாய்ப்பு கேட்டனர். "இப்போது நான் மற்ற ஹீரோக்களைப் போன்று, மும்பையிலிருந்து இறக்குமதி செய்த நடிகையுடன் நடித்தால் தான் மரியாதை யாக இருக்கும்..." என்று சொல்லியிருக் கும் சந்தானம், அஸ்னா ஜவேரியா என்ற மும்பை மொடல் அழகியை, தனக்கு ஜோடியாக போட்டுள்ளார்.

◗ "கிரீடம்" படத்தில் அஜித்தை ஹீரோவாக்கினார் இயக்குநர் விஜய், "மதராசப்பட்டினம்" படத்தில் ஆர்யா, "தாண்டவம்" படத்தில் விக்ரம், "தலைவா" படத்தில் விஜய் என கோலிவுட்டின் முன்னணி ஹீரோக்களுக்கே கதை எழுதினார் விஜய். ஆனால் இந்த முறை ஒரு சிறுமியின் வாழ்க்கையை படமாக்குகிறார்."சைவம்"என்ற இப்படத்தில் சிறும-மியாக, "தெய்வத்திருமகள்" படத்தில் விக்ரமின் மகளாக நடித்த சாரா. பட்த்தில் ஹீரோ, ஹீரோயின் இல்லையாம். கதைப்படி கெஸ்ட் ரோல் ஒன்று இடம் பெறுகிறது. இதில் விஜய், விக்ரம், ஆர்யா இந்த மூவரில் ஒருவர் நடிக்கலாம் எனத் தெரிகிறது.


◗ சமீபத்தில் தெலுங்கில் வெளியான "அட்டரின்டிக்கி தரேடி" சூப்பர் ஹிட்டானதில் மகிழ்ச்சியில் திளைத்திருக்கிறார் சமந்தா. இந்நிலையில் தமிழில் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடிக்கும் படம், லிங்குசாமி இயக்கத்தில் சூர்யா நடிக்கும் படம் என இரு பெரிய படங்களில் ஒப்பந்தமாகி இருக்கிறார்.

◗ சமீபகாலமாக நகர்ப்புறக் கதைகளிலேயே நடித்து வந்த அஜீத், சிறுத்தை சிவா இயக்கத்தில் நடிக்கும், வீரம் படம் கிராமத்துக் கதை என்பதால், வேட்டி அணிந்து நடித்து வருகிறார்.


# உலகிலேயே மிக வேகமாக ஓடும் ரோபோ!

இதுவரை உலகில் தயாரிக்கப்பட்ட ரோபோக்களிலேயே தரையில் மிக வேகமாக ஓடும் விதத்தில் உருவாக்கப்பட்ட 4 கால்கள் உடைய WildCat ரோபோட் ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

இந்த ரோபோ பரிசோதிக்கப்பட்ட போது அதிகபட்சமாக 16mph வேகத்தில் ஓடியுள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். WildCat ரோபோ DAR-PA இன் M3 செயற்றிட்டத்தால் நிதி திரட்டப்பட்டு பொஸ்டன் டைனமிக்ஸ் (Boston Dynamics) எனும் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ரோபோ ஆகும்.



# பன்னாட்டுப் பொன்மொழிகள்



1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும். - தமிழ்
2. பறவைக்குப் பயந்து விதைக்காமலிருக்காதே! - ஜப்பான்
3. எல்லாப் புண்களுக்கும் காலம்தான் நல்ல களிம்பு. - வேல்ஸ்
4. வெறும் காகிதமானாலும் இரண்டு பேர் பிடித்தால் இன்னும் இலகுவாகத் தூக்கலாம். - கொரியா
5. வாழ்க்கையில் தோல்வியுற்ற ஒருவனிடம் உனது வெற்றியைப் பற்றிப் பேசுவது, அவனது பகைமையைச் சம்பாதிப்பதாகும். - சீனா
6. திருப்பிக் கொடுக்கப்படாத கடன்கள் - மன்னிக்கப்படாத பாவங்கள். - செக்கோஸ்லோவேகியா
7. இதயம் மட்டும் உறுதியாக இருந்தால் சுண்டெலியால்கூட யானையைத் தூக்க முடியும். - திபெத்
8. கருமியிடம் யாசித்தல், கடலில் அகழி வெட்டுவது போன்றது. - துருக்கி
9. நீ நூறு ஆண்டு வாழ்பவனைப்போல வேலை செய் நாளையே இறந்து விடுபவனைப் போல சிந்தனை செய். - பல்கேரியா
10. தாகத்தால் தவிக்கும் ஒருவனுக்கு, ஒரு சொட்டுத் தண்ணீருக்கு முன்னால், ஓராயிரம் முத்துக்கள்கூட மதிப்புள்ளது ஆகாது. - பாரசீகம்


ஜப்பானைச் சேர்ந்த, பிரபலமான, தலையணை தயாரிப்பு நிறுவனம், தன் வாடிக்கையாளர்களை கவருவதற்காக, புதுசு புதுசாக, யோசித்து வருகிறது. சமீபத்தில், இந்நிறுவனம் பயன்படுத்திய யுக்தியை பார்த்து, அதன் போட்டி நிறுவனங்கள், ஆச்சரியப்படுகின்றன.

பொதுவாக, தலையணை எப்படி இருக்கும் என்பது, அனைவருக்கும் தெரிந்த விஷயம் தான். ஆனால், இந்த ஜப்பான் நிறுவனமோ, பெண்களின் மடி போன்ற வடிவத்தில், தலையணையை தயாரித்து, அசத்தியுள்ளது. "இதில், இளைஞர்கள் தலை வைத்துப் படுத்தால், காதலியின் மடியில் படுப்பது போன்ற உணர்வு ஏற்படும். சிறுவர்கள் படுத்தால், தங்கள் தாயின் மடியில் படுத்தது போன்ற உணர்வு ஏற்படும்..." என, விளம்பரமும் செய்கிறார்கள்.

இந்த தலையணை-யை வாங்குவதற்கு, வாடிக்கையாளர்கள் முன்பதிவுக்காக முட்டி மோதுகின்றனராம். வியா-பாரம் என்று வந்துவிட்டால், எப்படியெல்லாம் யோசிக்கிறார்கள்!








# ஊரெழு எனும் ஓர் ஊர் . . .

தியாகிகளைப் பெற்றெடுத்த பெருமையைப் பாரெங்கும் பறைசாற்றி நிற்கும் பசுமையான ஊராம் ஊரெழு. அழகையும், அற்புதங்களையும், பழமையையும், பெருமையும், வளங்களையும் வனப்புகளையும் அன்பையும் பண்பையும் தன்னகத்தே கொண்ட ஓர் ஊர் ஊரெழுவாகும்.

### பெயர் பெறக் காரணம்:

இத்தகைய சிறப்பிற்குரிய சிற்றூர் வலிகாமம் கிழக்கில் மேற்கோர் மத்தியில் அமைந்துள்ளது. "ஊரெழு" என நாம் உணர்வுடன் உள்ளத்திலிருந்து உச்சரிக்கும் இப்பெயர் அமைந்ததற்கான காரணத்தை வரையறுத்து உறுதியாகக் கூறமுடியாவிட்டாலும், ஊர் மக்களால் வாய்மொழியாக வழங்கி வரும் காரணங்கள் சிலவற்றைக் கூறலாம். வாய்மொழியாக வழங்கி வருவதால், அவற்றை வெறும் கதைகள் என்று ஒதுக்கிவிட முடியாது. ஏனென்றால், அவை ஏற்றுக்கொள்ளக் கூடிய கதைகளாகவும், காரணங்களுமாக உள்ளன.

1. பல பெருமைகளை அணிகளாகக் கொண்ட இவ்வூரானது தனைச்சூழ ஏழு ஊர்களை அரண்களாகக் கொண்டு ஊரெழு எனப்பெயர் பெற்றுள்ளது. (ஊர்+ஏழு ஊரேழு மருவி ஊரெழுவானது என்பர்.) கிழக்கில் நீர்வேலியும் தென்பகுதியில் உரும்பிராயும், மருதனார்மடமும் மேற்கோரமாகச் சுன்னாகம், வடக்கே ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் வட கிழக்கில் அச்செழுவும் ஊரெழுவுடன் உறவாடி நிற்கின்றன.

2. முன்னொரு காலத்தில் ஊர்களில் ஏற்பட்ட இயற்கை அழிவுகளால், வேற்றூர் மக்கள் இடம்பெயர்ந்து வந்து இவ்வூரில் தங்கினராம். ஊர் எழுந்து வந்தமையால் ஊரெழு என அழைக்கப்பட்டது எனவும் கூறுவர்.

3. எப்பொழுதுமே இவ்வூர் எழுச்சியுள்ள ஊராக விளங்கியதால் ஊரெழு என மருவியதாகவும் கூறுவோரும் உளர்.

4. எங்கு என்ன சிக்கல்கள் தோன்றினாலும், அவற்றை இவ்வூரே எழுந்து வந்து முன்னின்று அச்சிக்கல்களை முகங்கொடுத்துத் தீர்த்து வைப்பதனால், ஊரெழு எனப் பெயர் வந்தது எனக் கூறுவோரும் உளர். எவை எப்படியிருப்பினும் மேற்கூறப்பட்ட ஒவ்வொரு காரணங்களும் இன்று ஊரெழு என்ற பெயருடன் பொருந்தி வருவதால், உண்மைகள் போலவே காட்சியளிக்கின்றன.


### ஊர் அமைவிடம்:

யாழ். நகரத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஊரெழுக் கிராமத்தைப் பலாலி வீதி ஊடறுத்துச் செல்கின்றது. இவ்வீதி ஊரெழுவைக் கிழக்கு, மேற்கு என இருபெரும் பிரிவுகளாகப் பிரித்து நிற்கின்றது. வடக்கெல்லையில் சாவகச்சேரி-சங்கானை வீதியையும், மத்தியில் கிழக்கு-மேற்காக இராஜ வீதியையும் சுன்னாகத்தையும் இணைக்கும் ஒரு வீதியும் அமைந்துள்ளன. ஏறத்தாழ 4 சதுரமைல் நிலப்பரப்பைக் கொண்ட இப்பிரதேசத்தில் 3074 மக்கள் அதாவது 824 குடும்பங்கள் தற்பொழுது வசிக்கின்றன பண்பட்ட செந்நிலமும் வற்றாத நீரூற்றும் என்றும் மக்களுக்கு மன அமைதியைத் தரும் பெரும்வளங்களாக இயற்கை வாரி வழங்கியுள்ளது.



### பொக்கணை:

ஊரெழுவில்அதிசயமும், அற்புதமுமாக விளங்குவது பொக்கணை எனும் வற்றா நீரூற்றாகும். இதை "யாமா"என்றும் அழைப்பர். இந்நீரூற்றுக்குப் பல வகையான விளக்கங்களைப் பலரும் வழங்குவர். இவ்விடத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னால், இடி விழுந்திருக்கலாம் என்றும் அதனால் ஏற்பட்ட குன்றே இவ்வடியில்லா வற்றா நீரூற்றாக இருக்கலாம் என அறிவியலாளர் விளக்குகின்றனர். ஊரெழு பழம்பெரும் கிராமம் என்பதற்குச் சான்றாகக் கர்ணபரம்பரைக் கதையோடு தொடர்புபடுத்திப் பொக்கணை ஊற்றுக்கு விளக்கம் கூறுவோரும் உளர். இராமர் சீதையைத் தேடிப படைகளுடன் இலங்கைக்கு வந்திருந்த போது, தண்ணீர்த் தாகம் எடுத்தமையால், இராமர் தனது அம்பைப் பூமிமேல் எய்து நீர் ஊற்றை உருவாக்கித் தமது தண்ணீர்த் தாகத்தினைத் தணித்த இடமே இன்னும் வற்றா ஊற்றாக விளங்கும் "பொக்கணை யாமா" என்பது வாய்மொழியாகக் கூறப்பட்டு வரும் கதையாகும். இந்நீர்




ஊற்றுக்கு அருகில் இருக்கும் கற்பாறை ஒன்றில் முழங்கால் அடையாளம் போன்று குழிகள் இருப்பது மேலும் இக்கதைக்கும் இம்மக்களின் நம்பிக்கைக்கும் வலுச் சேர்ப்பதாய் அமைந்துள்ளது. இது ஆய்வுக்குரிய ஒன்றே. இப்பொக்கணை ஊற்றானது, நீரைத் தேக்கி ஊருக்கு நீர்ப்பஞ்சம் போக்க உதவுவது மட்டுமன்றி மாரிகாலத்தில், காட்டாற்று வெள்ளம்போல் கிராம வீதிகளை நிறைத்துப் பாய்ந்து வரும் வெள்ளப் பெருக்கினை நிலத்துக்குக் கீழ் உள்ள இயற்கைக் கால்வாய்களினால் மேலதிக நீரைக் கடலுக்குக் கொண்டு சேர்க்கவும் வல்லது. மாரிகாலத்தில் இப்பகுதி பெரியதோர் குளம்போன்று காட்சியளிக்கும். ஊரெழுக் கிராமத்திற்கு இயற்கை தந்த உன்னத வடிகால் பொக்கணை ஊற்றாகும். இதே போன்றோர் ஊற்று நவக்கிரியில் உள்ள நிலாவரையிலும் உள்ளது. இவ்விரு குன்றுக்கும் இடையேயான நீரோட்டம் இணைந்திருப்பதாகக் கருதுவர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான கோப்பாய்க் கோமான், அமர் வன்னியசிங்கம் ஆகியோரின் பெரும் முயற்சியால் இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா அவர்களால் பொக்கணைக் குன்றினைப் பார்வையிட்டனர். நீர்ப்பாசன இலாகா பாரிய நீரிறைக்கும் இயந்திரங்களால் வற்ற நீரிறைக்க எடுத்த முயற்சிகள் தோல்வி கண்டன. இதன் பயனாக நீரிறைக்கும் காற்றாடி இயந்திரம் நிறுவியதோடு மேட்டு நிலத்தில் நீர்த்தேக்கம் ஒன்றும் கட்டப்பட்டது. நீரைச் சேகரித்து வாய்க்கால் மூலம் பயிர் செய்நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்யப்பட்டிருந்தது. இன்றும் இந்நீரூற்றிற்கு அருகிலுள்ள வயல் நிலங்களும் பாரிய நீர் சேகரிக்கும் தொட்டியும் அதனூடாக நீர் செல்லும் சீமெந்து வாய்க்காற் கட்டுகளும் ஆதாரம் தருகின்றன. பல ஆண்டுகளாகப் பாழடைந்த நிலையிலுள்ள நீரூற்றினைத் தற்பொழுது அரசாங்கம் புனரமைத்து வருவது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். புனரமைப்பு வேலைகள் முடிந்ததும் குடி நீர் இல்லா இடங்களுக்கு இந்நீரினை விநியோகம் செய்யவும் இடத்தினைப் புனிதமாக வைத்திருக்கவும் நடவடிக்கை மேற்கொண்டு வருவது வரவேற்புக்குரிய செயலாகும்.

### விவசாயம்:

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்."
(குறள்:1033)



என்ற வள்ளுவரின் வாக்குக்கமைய இங்கு வாழும் பெரும் தொகையான மக்கள் உழவுத் தொழிலையே முதற்கண் தொழிலாகக் கொண்டு வருபவர்கள். ஊரெழுக் கிராமத்தில், நீர் வளம் மட்டுமல்ல நிலவளமும் அவ்வூர் மக்களுக்கு இயற்கையாக அமைந்த ஒன்றாகும். ஊரெழுச் செம்மண் அவ்வூர் மக்களுக்குச் செம்மையான வாழ்வைச் செவ்வனச் செய்வதற்கேற்ப அமைந்துள்ளது. இங்கு வாழும் மக்கள் தம் நிலத்தைப் "பொன் விளையும் பூமி" என அடையாகக் கூறுவர். எத்தகைய பயிரைச் செய்தாலும் ஊரெழு மண்ணில் அப்பயிர்கள் செழிப்புடன் விளைவதும், வளர்வதும் அவ்வூர் மண்ணின் சிறப்புத் தன்மையாகும். மிகச் சிறந்த முறையில் நுட்பமாக விவசாயம் செய்வது அவ்வூர் மக்களின் ஆழ்ந்த அனுபவத்தையும் ஆற்றலையும் எடுத்துக் காட்டுகிறது. ஒவ்வொரு பயிரும் விளையும் காலங்களையும் அவற்றின் ஒவ்வொரு பருவங்களையும் அவற்றின் தட்பநுட்பங்களையும் நன்கறிந்து அவற்றிற்கேற்ப பயிர்ச்செய்யும் முறைகள் அவ்வூர் மக்களின் அனுபவக் கல்வியே.

உருளைக்கிழங்கு, புகையிலை, வெங்காயம், வாழை, கோவா, வெற்றிலை, பீற்றூட், மரவள்ளி, கறணை, கத்தரி, முந்திரிகை, லீட்ஸ், மிளகாய், கரட், இராசவள்ளி, பயிற்றை போன்ற பயிர்கள் இம்மண்ணில் செழிப்பாக வளர்வன. இத்தகைய பயிர்கள் பெருமளவில் பயிரிடப்பட்டு, ஏற்றுமதி செய்யப்படுவன. ஊரெழுக்கிராமத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சுன்னாகம், மருதனார்மடம், திருநெல்வேலி ஆகிய அங்காடிகளிலும் சந்தைப் படுத்தப்படும். ஆரம்ப காலங்களில் மிதியுந்துகளிலும் மற்றும் மாட்டுவண்டிகளிலும் தமது விளைபொருட் களை அங்காடிகளுக்கு எடுத்துச் சென்றனர்.

### கைத்தொழில்கள்:

உழவுத் தொழிலையே முதலாகக் கொண்டிருப்பினும் கைத்தொழில்களும் இடம்பெறுகின்றன. அரிசி ஆலை, கல்லுடைக்கும் ஆலை, சுருட்டுக் கொட்டகை என்பன தனியார்வசம் இருக்கின்றன. பீடிப் புகையிலை செப்பனிடும் மையம் வீட்டுத் தளபாட உற்பத்தித் தொழிலகம்என்பவற்றுடன் குடிசைக் கைத்தொழில்களான நெசவு, மனைப்பொருளியல் பணிகள், தையல், கால்நடை வளர்ப்பு என்பனவும் மாதரின் பிரிய விருத்திச் செயற்பாடுகளாக இடம்பெறுகின்றன.

### பனை:

ஊரெழுவில் இயற்கையாக அமைந்த வளங்களில் பனையும் ஒன்று. பனைமரம் ஊரெழு மேற்கில் அடர்த்தியாகக் காணப்படுகின்றன. பனைமரம் அவ்வூர் மக்களுக்குப் பல பயன்களை அளித்து வருகின்றது

### கோவில்கள்:

பலாலி வீதியில் வீரகத்தி விநாயகர் கோவிலும், பர்வதபத்தினி அம்மன் கோவிலும், மேற்குப்பக்கமாகக் கண்ணகி அம்மன் கோவிலும், உரும்பிராய்-ஊரெழு எல்லையுடன் காட்டு வைரவர் கோவிலும் ஊரெழுக் கிழக்கில் கேணியடி வைரவர் கோவிலும் பழமைமிக்க் பெருமைமிக்க தலங்களாகும். இவற்றுள் காட்டு வைரவர் கோவில், கண்ணகி அம்மன் கோவில் மற்றும் பர்வதபத்தினி அம்மன் கோவில் ஆகியன வரலாற்றுச் சிறப்புமிக்க கோவில்களாகும்.காட்டு வைரவர் கோயில் பல ஆண்டுகளுக்குமுன்னர் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு பெருமளவில் வேள்விகள் நடைபெற்ற கோவிலாகும். இவ்வேள்விக்கு வேற்றூர் மக்கள் அணியணியாகத் திரண்டு வந்து கலந்து கொள்ளும் திருவிழாவாக இடம்பெறுவது வழக்கம். கண்ணகி அம்மன் கோவிலும் சிறப்புமிக்க ஆலயமாகும். திருவிழாக்காலத்தில் பெருளமளவில் மக்கள் திரண்டு தீக்குளிக்கும் வைபவம் இடம்பெறும்.தீக்குளித்துத் தமது நேர்த்திக்கடன்களை நிறைவுசெய்யும் காட்சி அம்மக்களின் ஆழமான இறை நம்பிக்கையைக் காட்டும் காட்சியாக இருக்கும்.பர்வதபத்தினி அம்மன் கோவிலில் ஆடிப் பூரத்திலன்று குளுத்தி நடைபெறுவது ஒரு சிறப்பு நிகழ்வாக இருக்கும். இப்பழமைமிக்கக் கோவில்கள் திருவிழாக்காலங்களில் ஊரே தனிக்கலைகட்டிக் காட்சியளிக்கும். இவற்றுடன் ஊரெழு மேற்கில் காளி கோவில் மற்றும் பொக்கணை முருகன் கோவில் குல தெய்வ வழிபாட்டுக் கோவில்களாக விளங்குகின்றன.

# இந்துசமய பேரவையின் புத்தகத் திருவிழா

(மானிப்பாய்)

இந்துசமயப் பேரவையின் ஆதரவுடன் சர்வானந்தபீடம் நடாத்தும் பிரம்மஸ்ரீ சிவானந்த சர்மாவின் (கோப்பாய் சிவம்) புத்தகத் திருவிழா நாளை சனி மற்றும் நாளை மறுதினம் ஞாயிறு ஆகிய தினங்களில் பலாலி வீதி கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்துசமயப் பேரவை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வாழ்நாள் பேராசிரியர் சிற்றம்பலம் தலைமையில் இடம்பெறவுள்ள முதல் நாள் நிகழ்வுகளில் இந்தியத் துணைத்தூதரக துணைத்தூதுவர் வி.மகாலிங்கம் பிரதம விருந்தினராகவும், வடமாகாண கல்விபண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், ஓய்வு நிலை நீதிபதி வசந்தசேனன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள்.

வரவேற்புரையினை இந்துசமயப் பேரவையின் செயலாளர் சிவத்திரு சக்திகிரீவன், ஆசியுரைகளை இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ மகாதேவக் குருக்கள், பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சர்மா ஆகியோர் வழங்குவர்.

அருளுரையினை நல்லை திருஞானசம்பந்த ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்குவார்.

மறுமலர்ச்சி தந்த பஞ்சாங்கம் விவித்த பதாவலி,சுப்பிரமணிய பிரதிஷ்டா விதி ஆகிய நூல்கள் முதல் நாளன்று வெளியிட்டு வைக்கப்படவுள்ளன.

நூல்களின் அறிமுக உரையினை யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் விசாகரூபன், வெளியீட்டுரையினை சின்மயா மிசன் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்ய சுவாமிகள் ஆகியோர் வழங்குவார்கள். நூல்களின் முதற் பிரதிகளை மறுமலர்ச்சி ஆய்வாளர் செல்லத்துரை சுதர்சன் பெற்றுக்கொள்வார்.

தொடர்ந்து நூல்களின் கண்காட்சியினை இந்தியத் துணைத்தூதரக துணைத்தூதுவர் வி.மகாலிங்கம் திறந்து வைக்கவுள்ளார். (48)

# இளைஞர் விருது வழங்கல் வெற்றிபெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட இளைஞர் விருது வழங்கல் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு:

**பேச்சு (தமிழ்)**

திருமதி சா.சாளினி (யாழ்ப்பாணம்), ச.செந்தில் குமரன் (மானிப்பாய்), க.திவியா (புத்தூர்).

**பேச்சு (ஆங்கிலம்)**

ரி.சந்திரகுமார் (மானிப்பாய்), ம.அனுஜா (யாழ்ப்பாணம்), உ.சகானா (மானிப்பாய்)

**அறிவிப்பாளர் (தமிழ்)**

ம.அனுஜா (யாழ்ப்பாணம்), வி.பிரசாத் (சுன்னாகம்), என்.விஜிகாந்தன் (அரியாலை மேற்கு).

**அறிவிப்பாளர் (ஆங்கிலம்)**

ம.அனுஜா (யாழ்ப்பாணம்), உ.சகானா (மானிப்பாய்), திருமதி சா.சாளினி (யாழ்ப்பாணம்)

**நாட்டார் பாடல்**

இ.கீர்த்திகா (புத்தூர்), ரி.சந்திரகு மார் (மானிப்பாய்), அ.அமிர்தசிந்துஜன் (இணுவில்).

**இளம் பாடகர்**

என்.ஜெராட் நிரோஜன் (யாழ்ப்பாணம்), அ.அமிர்தசிந்துஜன், (இணுவில்), இ.கீர்த்திகா புத்தூர்) எஸ். கஜீபன் (மானிப்பாய்).

**பரதநாட்டியம் (பெண்)**

கௌத்துவம்- வி.வானதி (இணுவில்), எஸ்.நிறஞ்சலா (இணுவில்), வி.வித்தியாத ரணி (இணுவில்)

**பரத நாட்டியம் (ஆண்)**

பு.கோபி கீர்த்தனம் நாத் (மானிப்பாய்.), ச.சஜீவன் (கொக்குவில்) சா.ஜீவசங்கர் (உடுப்பிட்டி),

**மௌன நடிப்பு (தனி)**

அ.சுஜீந்திரன் (சுன்னாகம்), இ.நிவேஜா (பருத்தித்துறை), என்.ஜெராட் நிரோஜன் (யாழ்ப்பாணம்) கோ. டிவாஸ்கர் (உரும்பிராய்)

**கிராமிய நடனம்**

துஷிகரன் குழு ஹிமாலயா நடனக்குழு, தர்சனா குழு(இணுவில்), தாயங்கி குழு (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி).

**சித்திரம்**

உதயகுமார் ரம்கீ (யா.அச்சுவேலி மத்திய கல்லூரி), கி.காயத்திரி, க.ரேனூசன் (யா.சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்), ரா.மாதுரியா (யா.இந்து மகளிர் கல்லூரி).

**புத்தாக்கம்**

தேவபாலன் குழு (யாழ்ப்பாணம்), புஸ்பராசாயபர்ணா குழுவினர் (இணுவில்), விஜய மோகன் திசோன் குழு (கல்வியங்காடு). (பா)

வெள்ளி நற்சிந்தனை...



# ஔவைக்கு அருளிய விநாயகர்

ஔவையார் சிறந்த சிவபக்தர், சிவபெருமானை மனங்கலந்து வழிபட்டு வந்ததுடன் அவருடைய மூத்த குமாரரான பிள்ளையாரையும் பூசித்து வந்தார். விநாயகரை வழிபடும் போது, தம்மையும மறந்து தியானத்தில் முற்றாக ஈடுபடுவது இவரது இயல்பாகவே இருந்தது.

ஒருநாள் ஔவையார் விநாயகர் பூசை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது சேரமான்பெருமாளும், சுந்தரரும் கைலாயம் செல்லப் புறப்படும் செய்தி அவருக்குக் கிடைத்தது. ஔவையாருக்கு தாமும் கைலாயம் போக வேண்டும் என்ற விருப்பம் எழுந்தது. பூசையை விரைவாக முடித்து விட்டுத் தாமும் அவர்களுடன் சென்று பயணத்தில் கலந்து கொள்ள எண்ணினார். அந்த எண்ணத்தால், பூசையை விரைவாகச் செய்யத் தொடங்கினார்.

ஔவையாரின் எண்ணத்தை அறிந்து கொண்ட விநாயகப் பெருமான், ஔவையே! அவசரம் ஏதும் வேண்டாம் அவர்களுக்கு முன்னதாக உன்னை கைலாயத்தில் சேர்த்து விடுகிறேன். நீ வழக்கம் போலவே உன்னுடைய பூசையைத் செய்வாயாக" என்றார். ஔவையாரும் விநாயகர் ஆணைப் படியே நடந்து கொண்டார். பூசை முடிவு பெற்றது. விநாயகர் அருளினை நினைந்து தமிழ் மூதாட்டி அகம் மிக மகிழ்ந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் "சீதக்களபம்" என்னும் விநாயகர் அகவலைப் பாடி அப்பெருமானை மனங்கனிந்து துதித்துப் போற்றினார்.

தமிழ் உவக்கும் பிள்ளையார்ப் பெருமானின் உள்ளமும் அதனைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தது. விநாயகர் தன்னுடைய பேருருவை எடுத்து நின்றார். திருமுடி வானம் வரையும் பாதங்கள் பாதாளம் வரையும் சென்றது. உலகெங்கும் வியாபித்தது விநாயகர் திருமேனி, அந்தத் தெய்வக் காட்சியிலே சித்தம் கலந்து மகிழ்ந்தார். வாக்களித்தபடியே, அவரைத் தன் துதிக் கையால் எடுத்து கைலாயத்தில் சேர்த்து விட்டா இறையருள் எதையும் எளிதாக அடையச் செய்யும் என்பதனை இதன்மூலம் அறியலாம்.

இக்காலத்தில் ஆறஅமர இருந்து பூசை செயவதற்கும், கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்வதற்கும் நேரமில்லை, இது ஒருபுறமிருக்க பூசைகளை, மந்திர கிரியைகளை அரைகுறையாகச் செய்ய முற்பட்டுள்ளோம். இதனால் எந்தப் பயனும விளையப்போவதில்லை. இறைவனை முறைப் படி வழிபடுவதற்கு நேரம் ஒதுக்கிக் கொள்ள வேண்டும். எந்த நேரமாக இருந்தாலும் பரவா யில்லை மனதார இறைவனை நினையுங்கள் அதுவே மன அமைதியைத் தந்துவிடும்.

மதுரமொழி நல்லுமையாள்
சிறுவன் மலரடியை
முதிர நினையவல் லார்க்கரி
தோமுகில் போன் முழங்கி
அதிர வருகின்ற யானையும்
தேரும் அதன் பின்வரும்
குதிரையும் காதம்
கிழவியும் காதம் குலமன்னனே!

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

கலை, இலக்கியம் அதிகாரப் படிநிலைகளுடன் நுட்பமான உறவுகளைக் கொண்டது. அரசவை இலக்கியமும், வெகுஜன இலக்கியமும் பல்வேறு காலங்களிலும் வேறுபட்டு இருந்துள்ளன. ராம்லீலா என்ற கூத்து போன்ற நிகழ்ச்சியும் ராமாயணம்தான் பவபூதியின் உத்தரராம சரிதமும் ராமாயணம்தான். இந்தியாவின் அனைத்துவிதமான கலை, இலக்கிய வடிவங்களையும் ஊடுருவி நிற்பது மகாபாரதம். ஆனால் வெளிப்பாட்டு முறைகள் தமக்குள் ஆழமான மாறுபாடுகளைக் கொண்டவை. இங்கு எழும் பெரிய பிரச்சினையே ஆதிவாசிகளின் நடனத்தையும், பரத நாட்டியம் அல்லது கதகளி நடனத்தையும் ஒன்று என்று சொல்ல முடியுமா என்பதுதான். அவை நிச்சயம் வேறு வேறானவை. ஆனால் உயர்வு தாழ்வு வகைப்பாட்டிற்குள் வராதவை.


இதில் ஒரு சுவாரசியமான பிரச்சினை இருக்கிறது. நகரத்து நாகரீக மனிதர்கள் ஆதிவாசிகளின் நடனம், ஓவியம், இசை ஆகியவையும் கலைதான் என்று சமத்துவ உற்சாகமாக பேசும்போது அவர்களின் "பெருந்தன்மை" (patronizing attitude) பல சமயங்களில் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்று அவர்கள் மேட்டிமைப்பார்வையை காட்டிக்கொடுத்துவிடும். உண்மை அளவுகோல்களின்படி எல்லாமே கலைகள்தான். ஆனால் தமக்குள் முக்கியமான வித்தியாசங்களைக் கொண்ட கலை வெளிப்பாட்டு முறைகள் அவை. நாம் வித்தியாசங்களை மறக்கக் கூடாது. ஆனால் வித்தியாசங்களை படிநிலையாக்கும் செய்ய வேண்டிய தேவையும் நமக்கு கிடையாது. வளர்ந்த கலை, வளராத கலை என்றோ முதிர்ந்த கலை, முதிராத கலை என்றோ ஆடு, மாடுகள் அல்லது வெண்டைக் காய் வாங்குவது போன்று அவற்றை வகைப்படுத்தவேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு கலை வெளிப்பாட்டு முறையும் அது தோன்றிய சமூகச்சூழலுக்கு ஏற்ப வடிவம்கொண்டு அதன் உண்மை மதிப்பீடுகளை செயல்படுத்துகின்றது. அந்த அளவில் அவற்றினுள் உயர்வு தாழ்வு தேவையில்லை; எல்லாம் ஒன்று என்ற அத்வைதமும் தேவையில்லை. ஒரு கலை வெளிப்பாட்டுமுறையின் வித்தியாசத்தை அதன் சமூக வெளியின் இயக்கத்தைக்கொண்டு புரிந்து கொள்ளும் முதிர்ச்சி இருந்தால் மட்டும் போதும். அதே சமயம் சமூகங்களும், அவற்றின் கலைவெளிப்பாடுகளும் மாறாமல் நிற்கும் சாராம்சங்கள் அல்ல. நாம் பன்மையை அங்கீகரிப்பது என்பது மட்டுமின்றி தொடர்ந்து மாற்றமடைந்து கலைகள் மேலும் பன்மையடைவதையும் அங்கீகரிக்கவேண்டும். ஆதிவாசிகளின் நடனம் அதன் போக்கில் மாற்றங்களை அடையவும், உருமாறி புதிய கலப்பு வடிவங்கள் கொள்ளவும் தேவையிருப்பதையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும். இப்படி எண்ணற்ற கோட்பாட்டு தெளிவுகளை கோரி நிற்பது கலை இலக்கியங்கள் சார்ந்த உண்மை மதிப்பீடுகளும், கடமை மதிப்பீடுகளும் மோதும் கலாசார வெளி. – ராஜன்குறை

மைய நீரோட்டம் என்ற ஒரு வெளி இருக்கிறது. வாரப்பத்திரிகைகள், அரசியல், வர்த்தக சினிமா, பள்ளிக்கூடம், கோவில், மாமனார், மாமியார், மைத்துனர், பக்கத்து வீட்டுக்காரர், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், கல்லூரி, லயன்ஸ் க்ளப், டாக்டர் இதுகளெல்லாம் மைய நீரோட்டம் சார்ந்தவை. இதற்கு மாற்றாக ஒரு வெளி உள்ளது. அதுதான் இலக்கியம், சீரியஸ் சினிமா, தத்துவம், கோட்பாடு, கலாச்சாரம் போன்ற விஷயங்கள். ஜெயமோகன், ஞாநி, மனுஷ்ய புத்திரன், எஸ். ராமகிருஷ்ணன், அடியேன் போன்றவர்கள் அனைவரும் இந்த மாற்று வெளியைச் சேர்ந்தவர்கள். எங்களுக்குள் ஆயிரம் அடிதடிகள் இருக்கும். வெட்டுக்குத்து இருக்கும். ஆனாலும் நாங்கள் யாவரும் மைய நீரோட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். இந்த மாற்று வெளியைப் பொறுத்தவரை எனக்கும் ஞாநிக்கும் நூற்றுக்கு நூறு விஷயங்களில் கருத்து முரண்பாடு இருக்கும். ஆனால் வர்த்தக சினிமா, வாரப் பத்திரிகை, தொலைக்காட்சி, common man உலகம் போன்ற விஷயங்களில் ஞாநிக்கும் எனக்கும் நூற்றுக்கு நூறு ஒத்துப் போகும். ஆனால் இதுவே மாற்றுக் கலாச்சார வெளி என்றால் நானும் ஞாநியும் எதிரும் புதிரும்தான். இங்கே ஞாநி என்ற இடத்தில் நீங்கள் ஜெ.மோ., மனுஷ்ய புத்திரன் என்று யார் பெயரையும் போட்டுக் கொள்ளலாம். பொருந்தும்.

– சாரு நிவேதிதா

# தரம் 5 புலமைப்பரிசில் தொகையை 2000 ரூபாவாக அதிகரியுங்கள்

## யோசப் ஸ்ராலின் வலியுறுத்து



(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பெற்றவர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்த உதவித் தொகையை ரூபா 500 இலிருந்து 2000 ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென கல்வித்துறை சார்ந்த வாண்மையாளர்கள் கேட்டுள்ளனர். அதிகரித்துச் செல்லும் தற்போதைய வாழ்க்கைச் செலவுகளை கருத்திலெடுத்தால் மாதம் 500 ரூபாவுடன் மாணவன் ஒருவன் தனது கல்விச் செலவை சமாளிக்க முடியாது என்பது வெளிப்படையான உண்மையாகுமென இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் யோசப் ஸ்ராலின் தெரிவித்தார். தரம் 5 புலமைப்பரிசில் உதவித்தொகை வழங்க வருடாந்தம் 490 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

கடந்த சில வருடங்களாக உரிய சமயத்தில் நிதி கிடைக்காமையால் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் உதவிப்பணம் கிடைக்கவில்லை. இதனால் புலமைப்பரிசில் வழங்கும் நோக்கம் மீறப்படுகின்றது என்றும் அவர் கூறினார். 2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் வீதம் அதிகரித்துள்ளதாக கல்வி அமைச்சர் கூறியுள்ளார். இது புள்ளிவிபரங்களின் தவறான பயன்பாடாகுமென அவர் சுட்டிக்காட்டினார்.

ஒரு புலமைப் பரிட்சையில் சித்தி வீதம் பற்றிப் பேசுவது அர்த்தமற்றது .இங்கு வெட்டுப்புள்ளியே கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயமாகும் என்றார். வெட்டுப்புள்ளியே பிரபல பாடசாலைகளில் அனுமதி பெறுவதையும் உதவித்தொகை பெறுவதையும் தீர்மானிக்கும் காரணியாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

உண்மையில் 2012 இல் புலமைப்பரிசில் உதவித் தொகையை பெற்றவர்கள், 10.76 சதவீதமாக குறைந்துள்ளது இதை அமைச்சர் கூறத்தவறியுள்ளார் என்றும் ஸ்ராலின் கூறினார். எனவே, அமைச்சர் வெட்டுப்புள்ளியை குறைத்து கூடிய மாணவர்கள் புலமைப்பரிசில் பெற்று நன்மையடைய வழி செய்ய வேண்டுமெனவும் அவர் கூறினார்.

# விதை உற்பத்தியாளர் சங்கத்தில் வேதாள வெங்காய விதைகள்

யாழ் . மாவட்ட விவசாயிகளுக்கு வேதாள வெங்காய உண்மை விதை நியாய விலையில் திருநெல்வேலி விதை உற்பத்தியாளர் சங்கத்தில் விற்பனை செய்யப்படுகின்றது . ஒரு விவசாயிக்கு தலா ஒரு கிலோ வீதம் கிலோ ஒன்று 7 ஆயிரத்து 750 ரூபா விற்கு விற்பனை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது .கடந்த வருடம் யாழ் . மாவட்டத்தில் தனியார் துறையினரால் ஒரு கிலோ உண்மை வெங்காய விதைகள் 10 ஆயிரம் ரூபாவரை விற்பனை செய்யப்பட்டது . இதனைக் கருத்திற் கொண்டே விதை உற்பத்தியாளர் சங்கம் இந்தியாவில் இருந்து உண்மை வெங்காய விதையை இறக்குமதி செய்து நியாய விலையில் விற்பனை செய்கின்றது .

மேலும் அலுவலக நேரத்தில் விவசாயிகள் வெங்காய விதையை பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது .

# உருளைக்கிழங்கு செய்கையாளர் சமாசத்தை பதிய நடவடிக்கை

யாழ் . மாவட்ட உருளைக் கிழங்கு செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்களை இணைத்து உருளைக்கிழங்கு செய்கையாளர் சமாசம் உருவாக்கப்பட்டுள்ளது . சமாசத்தைப் பதிவு செய்வதற்குரிய ஆவணங்கள் யாழ் . மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. யாழ் . மாவட்டத்தில் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவு , கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு , தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவு ஆகியவற்றில் உருளைக் கிழங்கு செய்கையாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டு செயற்பட்டு வருகின்றன. பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள சங்கங்களை இணைத்து மாவட்ட ரீதியில் தொழிற்படுவதற்கு வசதியாக உருளைக்கிழங்கு செய்கையினை ஊக்குவிக்க இக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நிறுவப்பட்டுள்ளது . சமாசத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் திருநெல்வேலியில் நடைபெற்றது . உருளைக்கிழங்கு செய்கையாளர்களுக்கு மாவட்ட ரீதியில் நன்மை அளிக்கக் கூடிய வேலைத் திட்டங்களை இச்சமாசம் முன்னெடுக்க உள்ளதோடு இந்த வருடம் யாழ் . மாவட்ட விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்குகளையும் மானியவிலையில் விநியோகிக்கவுள்ளது.

# நீதிமன்றம் உத்தரவு 22 சிறுவர்கள் ஒப்படைப்பு

(வவுனியா)

வவுனியாவிலுள்ள சிறுவர் இல்லமொன்றில் இருந்த 22 சிறுவர்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவிற்கமைய, அந்தச் சிறார்களை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பொறுப்பேற்றுள்ளதாக அதிகார சபையின் பொலிஸ் விசாரணைப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அந்தச் சிறுவர் இல்லத்தில் மாணவரொருவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக கடந்த 09 ஆம் திகதி கிடைத்த தகவலொன்றுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

10 தொடக்கம் 18 வயதிற்குட்பட்ட சிறார்களே சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் இவ்வாறு பொறுப்பேற்கப்பட்டுள்ளனர்.

அந்தச் சிறார்களும் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டார்களா என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

# பிள்ளைகளின் நலன்கருதி புலமைப்பரீட்சையை இரத்துச் செய்க

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கோரிக்கை



பிள்ளைகளுக்கு பாதுகாப்பளிக்கும் புதிய கொள்கையின் அடிப்படையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை இரத்துச் செய்ய வேண்டும் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையினால் பிள்ளைகளுக்கு கல்வி கற்க வேண்டும் என்று அளவுக்கதிகமான அழுத்தங்களை ஆசிரியரும், பெற்றோரும் ஏற்படுத்தி, அவர்களை இந்தப் போட்டிப் பரீட்சைக்கு தயாரப்படுத்துவது பிள்ளைகளுக்கு கல்வியில் இருக்கும் ஆர்வத்தை குறைத்து விடுவதுடன் அவர்களுக்கு உள ரீதியிலான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என்று அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதிகார சபை தயாரித்துள்ள இந்தப் புதிய கொள்கையில் ஐந்து வயது முதல் 16 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகள் கட்டாயம் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது இந்த வயது எல்லை 5 முதல் 14 வரையிலேயே இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் புதிய கொள்கையை நாங்கள் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தி நாட்டில் பரந்த அடிப்படையில் இது குறித்து கருத்துப் பரிமாறல்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம் என்று கூறினார்.

பாடசாலைகளில் பிள்ளைகளை நல்வழிப்படுத்துவதற்கு அவர்களை அடித்து துன்புறுத்துவது நிறுத்தப்படவேண்டும் என்றும் இது தொடர்பாக பாடசாலை அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வன்முறையற்ற முறையில் கல்வியைக் கற்பிக்கும் செய்முறை அளிக்கப்படும் என்றும் கூறினார்.

இந்தப் புதிய கொள்கைக்கு சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு அங்கீகாரம் அளித்துள்ளது. இந்தப் புதிய கொள்கை அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

# டெங்கை கட்டுப்படுத்தும்பயிற்சி தாய்லாந்து செல்லும் வைத்தியர்குழு

(வவுனியா)

டெங்கு நோயை கட்டுப்படுத்துவது தொடர்பான பயிற்சிகளுக்காக இலங்கை வைத்தியர்கள் பத்துப் பேரை தாய்லாந்துக்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின்படி இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. பத்து வைத்தியர்களை 10 நாள் பயிற்சித் திட்டத்திற்காக தாயலாந்து அனுப்பவுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதன்படி இவ்வார முடிவில் இவ் வைத்தியர்கள் தாய்லாந்து நோக்கிப் புறப்படவுள்ளனர்.

காலி, கராப்பிட்டிய, கொழும்பு சிறுவர் வைத்திய சாலை, களுபோவில வைத்திய சாலை, பேராதெனிய சிறிமாவோ பண்டாரநாயக்கா சிறுவர் வைத்தியசாலை, ராகம, பேராதனை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளிலிருந்து இந்த வைத்தியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# வளப்பற்றாக்குறையுடன் விசுவமடு பாரதி வித்தியாலயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு விசுவமடுவில் உள்ள பாரதி வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறையும் வளப் பற்றாக்குறையும் காணப் படுவதாக இப் பாடசாலையின் மாணவர்களும் பெற்றோரும் விசனம் தெரிவித்துள்ளனர் .

கடந்த 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இப்பாடசாலையில் சுமார் 900 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர் . இப் பாடசாலையில் தரம் ஒன்று தொடக்கம் உயர் தரம் வரையான மாணவர்கள் கல்வி கற்று வருகின்ற போதிலும் போதிய வகுப் பறைகள் இல்லாத நிலையில் சில வகுப்புக்கள் மரநிழல்களில் இடம்பெற்று வருகின்றன .மேலும் விஞ்ஞான பாடத்திற்கு ஒரு ஆசிரியர் மட்டுமே உள்ளதாகவும் தரம் 1 முதல் தரம் 5 வரையான மாணவர்களுக்கான வகுப்பு ஆசிரியர்களுக்கான ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாகவும் இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர் .எனவே மாணவர்களின் நலன்கருதி போதுமான வகுப்பறைகள் மற்றும் ஆசிரிய ஆளணிப் பற்றாக் குறைகளை நிவர்த்தி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாணவர்களும், பெற்றோரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஹைலண்ட் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

ஹைலன்ட் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 400 கிராம் ஹைலன்ட் பால்மா பைக்கற் ஒன்றின் விலை 15 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மில்கோ கம்பனி தெரிவித்துள்ளது.

இதன்படி 400 கிராம் ஹைலன்ட் பால்மா பைக்கற் ஒன்றின் புதிய விலை 325 ரூபாவாகும்.

# பல்கலை மாணவருக்கு புதிதாக 60 விடுதிகள்

பல்கலைக்கழகங்களில் விடுதி வசதியற்ற 12 ஆயிரம் மாணவர்களுக்கு விடுதி வசதிகளைப் பெற்றுக்கொடுக்க உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது

இதற்கமைய புதிதாக 60 விடுதிகளுக்கான நிர்மாணப் பணிகள் இந்த வருடம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் கலாநிதிசுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.


இந்தத்திட்டம் பூர்த்தியானதும் பல்கலைக்கழக மாணவர்களின் விடுதிப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயர்கல்வி அமைச்சர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய ஒரே தடவையில் 60 விடுதிகளையும் நிர்மாணித்துக் கொடுக்க ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

இந்த விடுதிகளில் தலா 200 மாணவர்கள் வீதம் தங்க வைக்கப்படவுள்ளதாகவும் உயர்கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# க.பொ.த. (சா/த) பரீட்சை - 2013

# கல்வி முரசு O/L



வரலாறு

ஆசிரியர் : ரி.மதிவதன்

1) உள்நாட்டு அலுவலர்களுக்குப் பதிலாக வரியைச் சேகரிப்பதற்கு அவுமில்தார்களை நியமித்தல்
A - கறுவாவிற்காக அறவிட்ட தீர்வையைக் கூட்டல்
B - பணமாக வரியைச் செலுத்தும் முறையை ஆரம்பித்தல்
C - நீதிமன்ற அலுவலர்களில் ஆவணங்களுக்கு அறவிடப்படும் முத்திரைக் கட்டணத்தைக் கூட்டுதல்

மேற்குறித்த விடயங்களிடையே பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி கூடுதலான வருமானத்தைப் பெறுவதற்காக இலங்கையில் பின்பற்றிய இரு நடைமுறைகள்
1) A,C ஆகியன 2) B,C ஆகியன
3) A,D ஆகியன 4) B,C ஆகியன

2) A - அரசுக் கழகத்தை அமைத்தல்
B - நிறைவேற்று குழு முறையை ஆரம்பித்தல்
C - இனவர்க்கப் பிரதிநிதித்துவ முறையை இரத்துச் செய்தல்

மேற்குறித்த யோசனைகள் எவ்வரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டன.
1) கோல்புறுக் - கமரன் 2) குறு - மக்கலம்
3) மனிங் - டெவொன்யர் 4) டொனமூர்

3) இலங்கையின் வடக்குப் பிரதேசத்தில் மிக ஒழுங்கமைந்த மிசனரிக் கல்வி முறை பின்வரும் எம்மிசனரிக் கம்பனியினால் உருவாக்கப்பட்டது?
1) லண்டன் மிசன் 2) வெஸ்லியன் - மெதடிஸ்த மிசன்
3) அமெரிக்கன் மிசன்

4) 1898 ஆம் ஆண்டில் இளைஞர் பௌத்த சங்கத்தை நிறுவுவதற்கு முன்னோடியாக அமைந்தவர்
1) அநாகரிக தர்மபாலா 2) பிரம்மசாரி வலிசிங்க ரிச்சந்திரன்
3) சேர் பு.பீ.ஜயதிலக 4) பியதாச சிறிசேன

5) 1948 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலிலிருந்து இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் அரசியல் கட்சி முறைமையின் வரலாற்றை நோக்கும்போது பின்வருவனவற்றில் எவ்விரண்டு இயல்புகள் அதன் முக்கிய இயல்புகளாகும்?
A - எல்லாக் கட்சிகளும் இன அடிப்படை மீது கட்டியெழுப்பப்பட்ட கட்சிகளாக இருத்தல்.
B - பெரும்பாலான கட்சிகள் அரசாங்க அதிகாரத்தைப் பெற முடியாதிருத்தல்.
C - அரசியல் கட்சிகளில் பெரும்பாலானவை இடதுசாரிக் கட்சிகளாக இருத்தல்.
D - அரசாங்க அதிகாரத்தைப் பெறுவதற்குப் பெரும்பாலும் பல கட்சிகள் ஒன்று சேர்ந்து தேர்தலுக்கு முன் வருதல்.
1) B,D ஆகியன 2) A,B ஆகியன
3) B,C ஆகியன 4) C,D ஆகியன

6) கல்வி அலுவலர்களின் முன்னேற்றத்திற்காகத் திரு.சீ.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கரா முன்வைத்த யோசனையாக அமையாதது.
1) பாலர் பிரிவிலிருந்து பல்கலைக்கழகம் வரைக்கும் இலவசக் கல்வியை வழங்கல்.
2) கல்வி நிர்வாக அலுவலர்களுக்காக பொதுக்கல்வித் திணைக்களத்தை நிறுவுதல்
3) பாடசாலை மாணவர்களுக்காகப் பகலுணவு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
4) பாடசாலைக் கலைத்திட்டத்தில் சமயத்தைக் கட்டாய பாடமாக மாற்றல்.

7) 1948, 1972, 1978 என்றும் இலங்கை அரசியலமைப்புக்களில் இடம்பெறும் சில பிரதான இயல்புகள் கீழே காணப்படுகின்றன. அவற்றிடையே 1948 அரசியலமைப்பில் இடம்பெறும் இரு இயல்புகளைச் சரியாக காட்டுக.
A - தேசிய அரச சபை
B - விகிதாசாரப் பிரதிநிதித்துவம்
C - இருமன்றப் பாராளுமன்றம்
D - பொதுசன வாக்குகளினால் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுத்தல்
E - பெயரளவிலான ஜனாதிபதி
F - ஆளுநர்

1) B,D ஆகியன 2) A,B ஆகியன
3) B,C ஆகியன 4) C,D ஆகியன

8) பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் நடைபெற்ற சில ஆண்டுகள் நிரல் X இலுள்ள அவ்வாண்டுகளில் நடைபெற்ற சில அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகள் நிரல் Y யில் உள்ளன. நிரல் X இலுள்ள அவ்வாண்டுகளில் நடைபெற்ற சில அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகள் நிரல் Y யில் உள்ளன. நிரல் X ஐ நிரல் Y உடன் பொருத்தமாக்கும் போது சரியான விடை யாது?

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1. கி.பி. 1833 | A - வரையறுத்த வாக்கினால் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்தல். |
| 2. கி.பி 1910 | B - சர்வசன வாக்குரிமை |
| 3. கி.பி 1921 | C - சட்டசபையை அமைத்தல் |
| 4. கி.பி 1931 | D - மாகாணத் தேர்தல் தொகுதி முறைமையை அறிமுகஞ் செய்தல் |

1) A,B,C,D 2) B,A,D,C
3) D,A,C,B 4) C,A,D,B

9) இலங்கையில் அரசியல் தலைவர்களும் அவர்கள் தலைமை வகித்த அரசியல் கட்சிகளும் இடம்பெறும் நான்கு சோடி விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் பிழையான விடை யாது?
1) ஏ.ஈ.குணசிங்க - தொழில் கட்சி
2) என்.எம்.பெரேரா - இலங்கை சமசமாஜக் கட்சி
3) பிலிப். குணவர்த்தன - இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி
4) பிலிப். குணவர்த்தன - இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி
5) எஸ்.ஜே.வீ செல்வநாயகம் - தமிழரசுக்கட்சி

10) 19 ஆம் நூற்றாண்டில் நிலவிய இலங்கையின் சமய பண்பாடு விழிப்புத் தொடர்பான நான்கு கருத்துச் சோடிகள் கீழே காணப்படுகின்றன. அவற்றில் ஒரு சோடி பொருந்துவதில்லை அது யாது?
1) அநாகரிய தர்மபாலா - மகாபோதிச்சங்கத்தை ஆரம்பித்தல்
2) கென்றி ஸ்ரீல் ஒல்கொட் - பரமஞான சங்கத்தை ஆரம்பித்தல்
3) ஆறுமுகநாவலர் - சைவப்பிரகாச சபையை ஆரம்பித்தல்
4) கிக்கடுவை ஸ்ரீசுமங்கலதேரர் - பரமஞா சங்கப் பிரிவேனாவை ஆரம்பித்தல்.

11) ஸ்ரீ விக்கிரமராஜசிங்க மன்னன் பிக்குமார்களின் ஆதரவை இழக்க பிரதான காரணம்
1) பிக்குமார்களுக்கு பதவிகளை வழங்காமை
2) பிக்குமார்களைக் கொலை செய்தமை
3) பொதுமக்களின் பக்கம் மன்னன் இருந்தமை
4) பிரதானிகளுக்கு அதிக அதிகாரம் கொடுத்தமை

12) 1815 ஆம் ஆண்டு கண்டிய உடன்படிக்கையின் 10 ஆம் வாசகமாக நாம் கொள்ளக்கூடியது.
1) பிக்குமார்கள் மற்றும் பௌத்தமதம் பாதுகாப்பு பற்றியது
2) ஆள்பாதியின் வருமானம் பற்றியது
3) 3 ஆம் 4 ஆம் கோறளைகள் இணைப்புப் பற்றியது
4) மக்களின் நீதிச் சட்டங்கள் பற்றியது

13) முதலாம் உலக மகாயுத்தம் ஆரம்பிக்கும் தறுவாயில் தீராத பகைகளை கொண்டிருந்த இரு நாடுகள்
1) பிரான்ஸ் - பின்லாந்து 2) பிரான்ஸ் - ஜேர்மனி
3) ரஸ்யா - இங்கிலாந்து 4) அமெரிக்கா - பிரிட்டன்

14) சரஜிவோ கொலைச் சம்பவத்தின் பின் சேர்பியாவிடம் அதற்குத்தக்க பதிலையும், நட்ட ஈட்டையும் எதிர்பார்த்த நாடானது.
1) ஜேர்மனி 2) ஆஸ்திரியா
3) பிரிட்டன் 4) ரஷ்யா

15) 2 ஆம் உலக மகாயுத்தத்தின் பின் பனிப்போரில் மாட்டிக்கொள்ளக் கூடாது என்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு
1) சர்வதேச சங்கம் 2) அணிசேரா இயக்கம்
3) பொதுநலவாய அமைப்பு 4) ஐக்கிய நாடுகள் சபை

16) இலங்கை ஜனாதிபதி தனது பதவியேற்பின் போது யார் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும்.
1) பிரதமர் முன்னிலையில் 2) பிரதம நீதியரசர் முன்னிலையில்
3) சபாநாயகர் முன்னிலையில் 4) எதிர்க்கட்சி முன்னிலையில்

17) இலங்கை சுதந்திரம் அடைந்தபோது பலமாக இருந்த அரசியல் கட்சியானது
1) ஐக்கிய தேசியக் கட்சி 2) மக்கள் விடுதலை முன்னணி
3) ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 4) இலங்கை தொழிலாளர் சங்கம்

18) 1 ஆம் உலக யுத்தத்திற்கான உடனடிக் காரணம்
1) கிட்லரின் ஆக்கிரமிப்பு 2) சரஜிவோ கொலை
3) முசோலியின் அதிரடித் தாக்குதல் 4) பேர்ள் துறைமுகத் தாக்குதல்

19) 2 ஆம் உலக யுத்தத்தின் பின் கெடுபிடி யுத்தத்தில் ஈடுபட்ட இருபெரும் வல்லரசு நாடுகள்
1) ரஷ்யா - ஐக்கிய அமெரிக்கா 2) சீனா - இங்கிலாந்து
3) ரஷ்யா - பிரித்தானியா 4) இந்தியா - சீனா

20) இலங்கையில் முதலாவது குடியரசு யாப்பு கொண்டவரப்பட்ட ஆண்டு.
1) 1948 2) 1972 3) 1978 4) 1985

21) A - ஊவா வெல்லச கலவரம்
B - பிலிமத்தலாவ கொலை
C - நோத் கண்டிய படை எடுப்பில் தோல்வி அடைதல்
D - குடாபொல பிக்குவின் மரணம்
இவற்றுள் 1818, 1848 ஆம் ஆண்டு பிரித்தானியருக்கு எதிராக இலங்கையில் ஏற்படுத்திய கலவர நிகழ்ச்சிகளுடன் மட்டும் தொடர்புபடும் சரியான விடைத் தொகுதி

1) C,D 2) A,C 3) D,B 4) A,D

22) "சிங்கள மக்களே விழித்திடுவீர் புத்தகாயாவை காத்திடுவீர்" என்ற கூற்றினை உடைய இலங்கை சிங்கள கலாசார மறுமலர்ச்சித் தலைவர்
1) மீதெட்டுவத்த குணாநந்த தேரர் 2) கிக்கடுவ சுமங்களதேரர்
3) அநகாரிய தர்மபால 4) ஸ்டில் ஒல்கொட்

23) 1 ஆம் உலக மகாயுத்தத்தில் ஜேர்மனி தோல்வியடைந்தமைக்கு பிரதான காரணம்
1) ஜேர்மனி நேச நாடுகளின் உதவியைப் பெற்றாலும் அச்சு நாடுகளிடம் பின்வாங்கியமை
2) ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகள் முதன்முதலில் நீர்மூழ்கி கப்பலை பயன்படுத்தி ஜேர்மனியைப் பின்வாங்க செய்தமை
3) ஜப்பானும் சேர்பியாவும் இணைந்து ஜேர்மனியிடம் ஆஸ்திரிய இளவரசன் படுகொலைக்கு தீர்வு கேட்டு யுத்தத்தில் இறங்கியமை.
4) 1917 ஆம் ஆண்டு காலத்திற்கு பின் ஜேர்மனி அரசுக்கு எதிரான கிளர்ச்சியில் உள்நாட்டு மக்கள் ஈடுபட்டமையும், படைவீரர்கள் பின்வாங்கியமையும்

24) ஜேர்மனி சர்வதிகாரி கிட்லரால் அறிமுகப்படுத்தப்பட்ட சுவஸ்டிகா இலட்சினையின் பொருள் என்ன என்பதை பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.
1) பாசிசவாதிக் கொள்கையும் நாசிச வாதிக் கொள்கையும் இணைந்த, போராட்டம் என்பதை காட்டல்
2) ஆரிய இனத்தின் வெற்றிகான போராட்டத்தினை காட்டி நிற்றல்.
3) கெஸ்டபோ ரகசியபொலிஸ் போராட்டத்தினை காட்டி நிற்றல்
4) வல்லரசு நாடுகளுடன் சமாதானத்தினை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கினை எடுத்துக்காட்டல்.

25) ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களில் அடங்காதது
1) சார்க் நாடுகளின் விருத்திக்கு மும்முரமான முறையில் தலைமை தாங்கல்
2) சர்வதேச அமைதியை ஏற்படுத்தல்
3) உலகில் அணுவாயுத கட்டுப்பாட்டினை மேற்கொள்ளல்
4) உலக நாடுகளின் பொருளாதார விருத்திக்கு உதவுதல்

26) இலங்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஆரம்பித்தவர்
1) D.S.சேனநாயக்க 2) S.W.R.D பண்டாரநாயக்க
3) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க 4) ஜோண் கொத்தலாவல

27) நீண்டகாலமாக அந்நியர்களின் வசமாகாதிருந்த கண்டிய இராசதானியை குறுகிய காலத்தில் வீழ்ச்சியடையச் செய்து ஆங்கிலேயர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பிரித்தானிய ஆள்பதி.
1) பிரட்றிக்நோத் 2) தோமஸ்மெயிற்லண்ட்
3) றொபேட் பிறவுண்றிக் 4) வில்லியம் கிரகரி

28) இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கரையோரப் பிரதேசங்களில் இரட்டை ஆட்சிமுறை நிலவிய காலப்பகுதி
1) 1798 - 1815 2) 1798 - 1802
3) 1796 - 1833 4) 1798 - 1818

29) ஆஸ்திரிய நாட்டு பட்டத்து இளவரசன் சுற்றுலாவுக்காக தன் மனைவியுடன் சென்றிருந்தபோது கொலையுண்ட இடம்
1) சரஜிவோ 2) லெனின் கிராட்
3) போலந்து 4) பிரான்ஸ்

30) 1949 இல் S.J.V.செல்வநாயகத்தால் இலங்கையில் ஆரம்பித்த அரசியல் கட்சியானது
1) இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்
2) ஜனநாயக சோசலிச கட்சி
3) ஈழமக்கள் விடுதலை இயக்கம்
4) தமிழரசுக்கட்சி

31) 1 ஆம் குடியரசு யாப்பு இலங்யையில் கொண்டுவரப்பட்டது
1) 1978 2) 1971 3) 1972 4) 1981

32) A - கெப்பற்றிப்பொல திசாவை
B - தோமஸ் மெயிற்லண்ட்
C - டொறிங்டன்
D - கேல்குலிஸ் ரொபின்சன்
மேற்கூறப்பட்ட விடயங்களில் இலங்கையருக்கு பாரியளவு பாதிப்புக்கள் ஏற்படாதவாறு நடந்து கொண்டோர்கள்
1) A யும், D யும் 2) C யும், D யும்
3) B யும், D யும் 4) B யும், C யும்

33) A - பிரித்தானிய முடிவுக்குரிய குடியேற்ற நாடாக இலங்கை கரையோரப் பிரதேசம் பிரகடனப்படுத்தப்படல்
B - கோல்புரூக் சீர்திருத்தம் இலங்கையில் அறிமுகப்படுத்தல்
C - இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தாழ்நிலச் சட்டங்களை முன்வைத்தல்.
மேற்கூறப்பட்ட வரலாற்று நிகழ்வுகள் நடைபெற்ற ஆண்டுகளை ஒழுங்குபடுத்தினால் சரியாக அமையும் விடை.
1) 1802, 1815, 1833 2) 1840, 1815, 1818
3) 1802, 1833, 1840 4) 1848, 1833, 1840

34) பிரித்தானியர் இலங்கையை ஆட்சிசெய்த காலத்தில் 1891 இல் இலங்கையில் ஸ்ரீமகாபோதி சங்கத்தை ஆரம்பித்தவர்
1) மீதெட்டுவத்த குணானந்த தேரர் 2) அநகாரிய தர்மபால
3) ஸ்டில் ஒல்கொட் 4) இரத்மலான தம்மாலோக தேரர்

35) இங்கிலாந்தில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் நன்மையான விளைவுகளில் ஒன்று
1) போக்குவரத்து துறை விருத்தி கண்டது
2) மானிடமுறை உற்பத்திகள் அதிகரித்தன.
3) நிலப்பரப்புகளுக்கு அதிக நிலங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படல்
4) நில அமைப்பு முறையானது இங்கிலாந்தில் அதிகரித்து விவசாய மக்கள் தமது பிரச்சினைகளை தீர்த்துக் கொண்டனர்.

36) சர்வதேச சங்கத்தின் தோல்வியால் ஏற்பட்ட உலகளாவிய விளைவுகளில் ஒன்று
1) அணிசேரா இயக்கம் உருவாகியமை
2) 2 ஆம் உலக யுத்தம் ஏற்பட்டமை
3) NATO அமைப்பு தாபிக்கப்பட்டமை
4) மொன்றியல் பிரகடனம் எழுதப்பட்டது

37) 1921 ஆம் ஆண்டு பிரித்தானியர்களால் இலங்கையில் அறிமுகப்படுத் தப்பட்ட யாப்பின்படி உத்தியோக சார்புள்ளோர்களின் எண்ணிக்கை
1) 14 பேர் 2) 16 பேர்
3) 11 பேர் 4) 20 பேர்

38) இலங்கையில் கெபினட் என்ற அமைச்சரவையை அறிமுகப்படுத்திய யாப்பு பின்வருவனவற்றுள் எது?
1) சோல்பரி
2) மனிங்
3) டொனமூர்
4) 1972 ஆம் ஆண்டு 1 ஆம் குடியரசு யாப்பு

39) A - கிவுலேகெதர மொகட்டால
B - பிலிமத்தலாவ
C - கெப்பற்றிபொல திசாவை
D - கொங்கால கொட பண்டா
E - வீரபுறன் அப்பு
பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் 1818 ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கு தலைமை வகித்த தலைவர்களை மட்டும் காட்டும் விடைப்பகுதி
1) AD 2) AC
3) AE 4) FC

40) 1972, 1978 என்னும் 1 ஆவது, 2 ஆவது அரசியல் குடியரசு யாப்பின் பிரதான இயல்புகள் கீழே காணப்படுகின்றன. அவற்றில் 1978 ஆம் ஆண்டு யாப்புக்கு பொருத்தமான விடயங்களைக் கொண்ட விடை எது?
A - தேசிய அரசுப்பேரவை
B - நாடாளுமன்றம்
C - பெயரளவிலான ஜனாதிபதி முறை
D - விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை
E - நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி

1. A,B,C,D,E சரியானவை 2. B மட்டும் சரியானது
3. B,D,E சரியானவை 4. A, C சரியானவை

41) தேசங்களின் செல்வம் எனும் நூலை எழுதியவர்
1. அடம்ஸ்மித் 2. தாந்தே
3. ஜோன்கோ 4. தோமஸ்மூர்

42) மனித உரிமைகளை வென்றெடுக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட புரட்சி
1. ஆங்கிலப்புரட்சி 2. ரஷ்யப்புரட்சி
3. பிரான்ஸ்புரட்சி 4. சீனப்புரட்சி

43) 1833 இல் இடம்பெற்ற வரலாற்று நிகழ்வு
1. டொனமூர் யாப்பு 2. 2 ஆவது சுதந்திரப்புரட்சி
3. கோல்புறூக் யாப்பு 4. சோல்பரியாப்பு

44) அனைவருக்கும் நிலம் அனைவருக்கும் சமாதானம் என்ற சுலோகத்தை முன் வைத்து மக்கள் போராட்டம் வெடித்த நாடு
1. ரஷ்யா 2. ஜேர்மன்
3. பிரான்ஸ் 4. இத்தாலி

45) யாப்பகுவா, கோவிந்தலை, தம்பதெனியா, மிளிப்பே போன்வற்றை ஆட்சி செய்தவர்கள் முறையே காட்டும் விடைத்தொகுதி
1. சுபசேனாதிபதி, சங்கசேனாதிபதி, புவனேகபாகு, விஜயபாகு
2. சுபசேனாதிபதி, புவனேகபாகு, விஜயபாகு, சங்கசேனாதிபதி
3. புவனேகபாகு, சுபசேனாதிபதி, விஜயபாகு, சங்கசேனாதிபதி
4. சுபசேனாதிபதி, சங்கசேனாதிபதி, விஜயபாகு, புவனேகபாகு

# சூழல் மாசடைவதற்கு ஏதுவாக மாறிவரும் வவுனியாக்குளம்

## கவனம் செலுத்துமாறு கோரிக்கை

சூழல் மாசடைதல் தொடர்பாக பல்வேறு விழிப்புணர்வுகள் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டாலும் அது தொடர்பான தெளிவின்மை தொடர்ந்தும் காணப்பட்டே வருகின்றது. அந்த வகையில் சூழல் மாசடைவதில் முக்கிய பங்கு வகிப்பது பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையாக உள்ளது .

இவ்வாறு பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையால் இன்று ரம்மியமான பல இடங்களும் அசுத்தமாகிப் போகும் துர்ப்பாக்கிய நிலை உள்ளது. இவ்வாறான ஓர் நிலையிலேயே வவுனியா மாவட்டத்தின் நகர்ப்பகுதியில் அமைந்துள்ள சுமார் 120 ஏக்கர் வயல் காணிகளை தன்னகத்தே கொண்டமைந்த நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான வவுனியா குளம் காணப்படுகின்றது.

வவுனியாவில் உள்ள பாரிய நீர்ப்பாசன குளங்களில் ஒன்றான இக் குளத்தின் நீரேந்து பிரதேசங்கள் 'உட்பட குளத்தின் நீர்ப் பகுதியிலும் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் போன்ற பொருட்கள் அதிகளவில் காணப்படுவதனால் இப்பகுதி அழகற்றுக் காணப்படுவதுடன் இக் குளத்தினை நம்பி ஜீவனோபாயத்தை நடத்தும் பலரும் பெரும் அசௌகரியத்தை எதிர்கொள்கின்றனர் .

வவுனியா நகரசபை மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் என்பன நகர்ப்பகுதியில் இருந்து வரும் கழிவான நீரை சுத்திகரித்து குளத்தில் விடுவிக்கும் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைந்துள்ள பகுதியை சூழ அழகுபடுத்தும் செயற்றிட்டத்தை உள்வாங்கி எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் இன்று இக் குளம் நகர்ப்பகுதியில் சூழல் மாசடைவதற்கு எடுத்துக்காட்டான பிரதேசமாக மாறியிருக்கின்றது. இங்கு அமைககப்பட்டுள்ள சுத்திகரிப்பு நீர்த் தொட்டிகளினுள் நீண்ட காலமாக சுத்திகரிக்கப்படாது தேங்கிக்கிடக்கும் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பொருட்களால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் இதனுள் காணப்படும் பொருட்கள் நீர்ப்பாசன குளத்திற்கு செல்வதனால் நன்னீர் மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்களும் தமது விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யும் விவசாயிகளும் பெரும சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் .

இத்துடன் இப்பகுதியில் உள்ள கால்நடைகள், பொலித்தீனகளை உண்பதனால் இறக்கும் சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர் .

குறிப்பாக பிளாஸ்டிக் பொருடகளினால் மீன்கள் இறப்பு வீதம் அதிகரித்துள்ளமையும் நீர்ப்பாசனம் செய்யும் போது வயல் நிலங்களுக்குள் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் என்பன நீருடன் வருவதனாலும் விவசாய நிலங்கள் பயிர்ச்செய்கைக்கு 'ஒவ்வாத நிலங்களாக மாறி வருவதாகவும் விவசாயிகளும் மீனவர்களும் கவலை தெரிவிக்கின்றனர் .

இதேவேளை இக் குளத்தின் அயலில் உள்ளவர்களால் இக் குளத்தினுள் கொட்டப்படும் குப்பைகளினால் அதிகளவில் இக்குளம் மாசடைந்து வருவதாக தெரிவிக்கும் விவசாயிகள் இப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கின்றனர் .

இது தொடர்பில் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை கவனம் செலுத்தாத காரணத்தால் மழை காலங்களில் டெங்கு நுளம்பு பெருகும் வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுவதுடன் சுகாதார வைத்திய அதிகாரி இவ் விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டும் என்பதுடன் வவுனியா நீர்ப்பாசன திணைக்களமும் வவுனியா நகர சபையும் தம் பராமரிப்பிலுள்ள இக்குளத்தை அழகுபடுத்தும் செயற்றிட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் சுட்டிக்காட்டுகின்றனர் .

# முல்லை வைத்தியசாலையில் சட்டவைத்திய அதிகாரி இல்லை

## மக்கள் பெரும் அசௌகரியம்

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் சட்டவைத்திய அதிகாரி இல்லாமையினால் இப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் .


கடந்தகால யுத்தம் நிறைவடைந்து 2009 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் இயங்கிவருகின்ற இவ் வைத்தியசாலையில் கடந்த செப்ரெம்பர் மாதத்திற்குப் பின்னர் சட்ட வைத்திய அதிகாரி இல்லாத நிலை காணப்படுகின்றது .

மரணச்சான்றிதழ் , விபத்து சார்ந்த அறிக்கைகள் , வழக்குகள் சார்ந்த அனைத்து செயற்பாடுகளுக்கும் சட்டவைத்தியரின் தேவை காணப்படுகின்றது. இந்த அதிகாரி இல்லாமையினால் இவ் வைத்தியசாலைக்குச் செல்கின்ற மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர் .

மேலும் சட்ட வைத்திய அதிகாரி இல்லாமையினால் அனுராதபுரம்,வவுனியா வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டி உள்ளதாகவும் அத்துடன் விபத்துக்கள் மற்றும் குற்றங்களுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள்,வழக்குகள் ஆகியவற்றின் அறிக்கைகளைப் பெற முடியாத நிலையும் காணப்படுகின்றது என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்

எனவே,முல்லைத்தீவு மாவட்ட பொது 'வைத்தியசாலைக்கு விரைவில் சட்ட வைத்தியரை நியமிக்குமாறு இப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் .

# 40 வருட புனரமைப்பின்றி துணுக்காய் பிரதேச வீதிகள்



முல்லைத்தீவு , துணுக்காய், நட்டாங்கண்டல்,இரணை இலுப்பைக்குளம் ஆகிய பகுதிகளுக்கான பிரதான வீதிகள் கடந்த 40 வருடங்களாக புனரமைக்கப்படாமையால் இப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் சந்தியில் இருந்து ஒட்டன்குளம் 30 வீட்டுச்சந்தி , பொன்னகர், நட்டாங்கண்டல், பனங்காமம், மூன்று முறிப்பு ஆகிய பகுதிகளுக்கான பிரதான வீதி மற்றும் துணுக்காய் சந்தியிலிருந்து வவுனியா - மன்னார் வீதியை இணைக்கும் பூவரசன் குளம் சந்திவரைக்குமான சுமார் 28 மைல் வரையான வீதி என்பன மிக மோசமான நிலையில் காணப்படுகின்றது .

இதனைவிட இவ்வீதியிலுள்ள பறங்கியாற்றுக்கான பாலம் மற்றும் பாலியாற்றுக்கான பாலம் தவிர ஏனைய சிறிய பாலங்களும் பெரிய பாலங்களும் சேதமடைந்து காணப்படுகின்றன .

குறிப்பாக துணுக்காய் சந்தியில் இருந்து பொன்னகர், விநாயகபுரம் வரைக்குமான பகுதியினை தினமும் 375 வரையான குடும்பங்கள் பயன்படுத்துகின்றன . இதேபோன்று ஏனைய பகுதி மக்களும் இவ்வீதியைப் பயன்படுத்துகின்றனர் .

எனவே நாற்பது வருடங்களாகப் புனரமைக்கப்படாமல் காணப்படுகின்ற இந்த 28 மைல் நீளமான வீதியினைப் புனரமைத்துத்தருமாறு இப்பகுதி மக்களும் இவ் வீதியால் பயணிப்போரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (140)

# தென்னங்கன்றுகளைப் பெற சிரமப்படும் சின்னடம்பன் மக்கள்

தெங்கு உற்பத்திகளின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட தென்னைகளைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக சின்னடம்பன் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர் .

தென்னை அபிவிருத்தி நிலையத்தினால் நெடுங்கேணிப் பிரதேச செயலகத்தினூடாக அப்பகுதியிலுள்ள கிராமசேவகர் பிரிவுகளுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.இதனை ஒவ்வொரு கிராமசேவகரும் அப் பகுதியிலுள்ள மாதர் சங்கங்களுடன் இணைந்து வழங்குவதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டது .

இத் தென்னங்கன்றுகள் கிராமசேவையாளர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டு ஒரு வாரத்திற்கு மேலாகியும் இதுவரைக்கும் தமக்குக் கிடைக்காமையினால் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர் .

இதனை விட பல தடவைகள் அப்பகுதி கிராமசேவகரினால் தென்னங்கன்றுகள் வழங்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்ட போதிலும் ஒவ்வொரு தடவையும் கிராமசேவகர் அலுவலகத்திற்குச் சென்று ஏமாற்றத்துடனேயே திரும்பி வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர் .

தென்னங்கன்று உரிய காலத்தில் பெற்று நீர் ஊற்றினாலே அதனை ஒழுங்காகப் பராமரிக்க முடியும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். ஒவ்வொரு குடும்பத்தினரும் 220 ரூபா செலுத்தி 5 தென்னங்கன்றுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது .

# வடக்கில் முதல்முறையாக பயிர்முகாமைத்துவ முகாம்



வடமாகாணத்தில் முதல் தடவையாக பயிர் மருத்துவ முகாம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த முதலாவது பயிர் மருத்துவ முகாம் புத்தூர், நிலாவரையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் மேற்கொள்ளும் பயிர்ச் செய்கையில் ஏற்படும் நோய்களை அடையாளம் கண்டு அவற்றைக்குணபபடுத்துவதற்கும் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதற்காகவும் இந்தப் பயிர் மருத்துவ முகாம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் நாள் நிகழ்வில் விவசாயிகள் நோய்வாய்ப்பட்ட பயிர்களின் மாதிரிகள் மற்றும் மண் மாதிரிகளைக் கொண்டு வந்து காண்பித்து நோய்க்கான காரணிகளை அடையாளம் கண்டுகொண்டுள்ளதுடன், அவற்றைக் குணப்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் பெற்றுச் சென்றுள்ளனர். இதற்கான நகழ்வில் வட மாகாண விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், யாழ். மாவட்ட விவசாய பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ்வாறான பயிர் மருத்துவ முகாம் வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் சீரான கால இடைவெளிகளில் நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்யவுள்ளதாக வடமாகாண விவசாய பணிப்பாளர் சி.சிவகுமார் தெரிவித்தார். (48)

# லங்காசித்த ஆயுர்வேத கல்லூரிக்கு வடமாகாண சபை உதவவேண்டும்

## சுதேச வைத்தியசபைச் செயலர் கோரிக்கை

இலங்கையில் அரசின் அனுமதியுடன் நீண்ட காலமாகச் செயற்பட்டு வருகின்ற ஒரே ஒரு தனியார் ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி யாழ் . லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியே ஆகும் என்று வட இலங்கை சுதேச வைத்திய சபையின் செயலாளர் டாக்டர் ஜெ. ஜெயலன் தெரிவித்தார் .

சுன்னாகத்தில் உள்ள இக் கல்லூரியின் நூலக மண்டபத்தில் இடம்பெற்ற கல்லூரியின் மாணவர் மன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார் .

மாணவர் மன்றத் தலைவர் மதீசன் தலைமையில் இடம பெற்ற இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக டாக்டர் க . திரு லோகமூர்த்தி கலந்து கொண்டார்.

இந் நிகழ்வில் டாக்டர் ஜெ. ஜெயலன் தொடர்ந்து உரையாற்றுகையில் ,

இலங்கையில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட இவ் வைத்தியக் கல்லூரியின் நலனிலும் அபிவிருத்தியிலும் அரசும் சுகாதார சுதேச வைத்திய அமைச்சும் ஆயுர்வேத திணைக்களமும் வடமாகாண சபையும் அக்கறையுடன் ஆக்கபூர்வமான உதவிகளை வழங்கி வருகின்றன .

இக்கல்லூரிக்கான டீ.ஏ. எம். பட்டப் பரீட்சைகளை அரசே நடத்தி வருகின்றது . வடமா காண சபை கல்லூரியை நிர்வகிக்க நிதியை வழங்கி வருகின்றது . இந்நிதி ஒதுக்கீடு கல்லூரியை நிர்வகிக்கப் போதுமானதாக இல்லை.புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட வடமாகாண சபை எமக்கு வழங்கிவரும் நிதியை அதிகரிக்க முன்வர வேண்டும். அப்போதுதான் விரிவுரையாளர்கள் , அதிபர் , உப அதிபர் ,உத்தியோகத்தர் ஆகியோரது சம்பளத்தையும் அதிகரிக்க முடியும் .

அத்துடன் ஐந்து ஆண்டுகள் டீ.ஏ.எம் . கற்கை நெறியைப் பூர்த்தி செய்து வைத்தியர்களாக கால்பதிக்கும் எமது பட்டதாரிகளுக்கு புதிய வடமாகாண சபை நிர்வாகம் வேலை வாய்ப்புக்களை வழங்க முன்வர வேண்டும். ஏற்கனவே எமது பட்டதாரி வைத்தியர்கள் கைதடி சித்த போதனா வைத்தியசபை உட்பட உள்ளூராட்சி மன்ற வைத்திய சபைகளிலும் சிறப்பான முறையில் கடமையாற்றியதையும் கவனத்தில் கொள்ளுமாறும் வேண்டுகின்றேன் மாணவர்கள் ஒன்றுபட்டு கல்லூரியின் மேம்பாட்டிற்காக பாடுபட முன்வர வேண்டும் என்றார்.

# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டது அமெரிக்கா



அமெரிக்காவின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில்,கடன் உச்சவரம்பை உயர்த்தும் மசோதாவிற்கு பிரதிநிதிகள் சபை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதன் மூலம் அமெரிக்காவுக்கு ஏற்படவிருந்த பொருளாதார நெருக்கடி தற்காலிகமாக முடிவுக்கு வந்துள்ளது.

கடன் உச்சவரம்பை உயர்த்துவதற்கு நேற்று கடைசி நாள் என்ற நிலையில், ஆளும் கட்சியான ஜனநாயக கட்சிக்கும், எதிர்க் கட்சியான குடியரசுக் கட்சிக்கும் இடையே நடைபெற்ற பலகட்ட பேச்சுவார்த்தைக்குப் பின்னர் நேற்றுமுன்தினமிரவு உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த தகவலை இரு கட்சிகளின் மூத்த தலைவர்கள் வெள்ளை மாளிகையில் அதிகாரபூர்வமாக அறிவித்தனர்.

மேலும், அடுத்த ஆண்டுக்கான நிதி மசோதாவை நிறைவேற்றவும் எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சி உடன்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தப்படி கடனுக்கான உச்சவரம்பு 16 இலடசத்து 70 ஆயிரம் கோடி டொலர்களாக உயர்த்தப்படும்.

மேலும், ஜனவரி 2015 வரையிலான நிதி ஒதுக்கீடுக்கும் நாடாளுமன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்படும்.

இதுதொடர்பாக ஒபாமாவின் ஜனநாயகக் கட்சியினர் பெரும்பான்மையாக உள்ள செனட் சபையில் இந்த மசோதா நிறைவேறியது.

பின்னர் எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதிநிதிகள் சபையிலும் மசோதாவுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

இதற்கு அமெரிக்க அதிபர் ஒபாமா வரவேற்புத் தெரிவித்துள்ளார். இதனால், இரண்டு வாரங்களாக மூடப்பட்டிருக்கும் பெரும்பாலான அரசுத் துறைகள் மீண்டும் திறக்கப்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

சம்பளம் இல்லா விடுப்பில் சென்றுள்ள எட்டு இலட்சம் அரசு ஊழியர்கள், வரும் ஓரிரு நாட்களில் பணிக்குத் திரும்ப அழைக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


இதேவேளை, கடன் உச்சவரம்பு அதிகரிப்பு மசோதாவிற்கு அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்ததற்கு உலக வங்கி வரவேற்பு தெரிவித்துள்ளது.

ஆனால் இந்த மசோதா குறித்து மேலும் வெளிப்படைத் தன்மை தேவை எனவும் உலக வங்கி வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க பொருளாதார பின்னடைவுக்கு தீர்வு காணும் வகையில் இந்த முடிவு உள்ளதாக உலக வங்கியின் இயக்குநர் கிறிஸ்டின் லாகர்டே தெரிவித்துள்ளார்.

அடுத்த சில மாதங்களில் பொருளாதாரத் தேக்கநிலையை சரிசெய்யத் தேவையான நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# அமெரிக்க ஆயுதக் கப்பலில் "றோ" அதிகாரிகள் விசாரணை



தூத்துக்குடி கடற்பகுதியில் சிறைப்பிடிக்கப்பட்ட அமெரிக்க ஆயுதக் கப்பலில், றோ பிரிவு அதிகாரிகள் ஆய்வு நடத்த உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கப்பல் குறித்து, கியூ பிரிவு காவல்துறை கண்காணிப்பாளர் பவானீஸ வரி தலைமையிலான குழுவினர் 10 மாலுமிகள் உட்பட கப்பல் ஊழியர்கள் 35 பேரிடம் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணையின் முடிவில், அமெரிக்கக் கப்பல் பயணம் செய்த விபரம், யாரிடம் டீசல் வாங்கினார்கள்? அனுமதியின்றி ஆயுதங்கள் வைத்திருந்ததற்கான காரணங்கள் என்ன? இந்திய கடற்பகுதிக்குள் நுழைந்ததற்கான காரணம் என்ன? என்பது குறித்து தகவல் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், றோ உளவுப் பிரிவு அதிகாரிகளும் விசாரணை நடத்த தூத்துக்குடி வர இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. ஆயுதங்களுடன் வந்த அமெரிக்கக் கப்பல் கடந்த 11 ஆம் திகதி தூத்துக்குடி கடற்பகுதியில் சிறைப்பிடிக்கப்பட்டது.

# சீனாவுடனான உறவில் சிக்கல் என்கிறார் மேனன்

(புதுடில்லி)



சீனாவுடனான இந்தியாவின் உறவு மிகவும் சிக்கலானது என இந்திய, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ சங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வளர்ச்சியடைந்துவரும் இந்தியாவிற்கும், பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டுள்ள சீனாவிற்கும் இடையே பல்வேறு வேறுபாடுகள் உள்ளதாகவும், இதன் காரணமாக இருநாடுகளின் உறவில் சிக்கல் நீடித்து வருவதாகவும் தெரிவித்தார்.

இருப்பினும், அமைதி, நிலைத்தன்மை மற்றும் முன்கூட்டியே கணிக்கும் திறன் ஆகியவற்றில் இரு நாடுகளும் சமநிலையை கடைப்பிடித்து வருவதாக கூறினார்.

எல்லைப் பிரச்சினை பற்றிப் பேசிய மேனன், 1962-ஆம் ஆண்டு நடைபெற்ற போருக்குப் பின்னர், இந்திய - சீன எல்லையில் தற்போது அமைதியான சூழல் நிலவி வருவதாகத் தெரிவித்தார்.

1998 ஆம் ஆண்டு நடைபெற்ற பொக்ரான் அணுகுண்டு சோதனைக்குப் பிறகு, இந்தியாவிற்கு எந்தவிதமான அணுஆயுத அச்சுறுத்தல்களும் இல்லை என்றும் சிவசங்கர் மேனன் தெரிவித்தார்.

அதேநேரத்தில், 1970 மற்றும் 1990 காலகட்டத்தில், நேரடியாகவும், மறைமுகமாகவும் பல்வேறு சூழ்நிலைகளில் இந்தியாவிற்கு அணுஆயுத அச்சுறுத்தல்கள் இருந்ததாகவும் மேனன் தெரிவித்தார்.

# மலாலாவிற்கு கௌரவ குடியுரிமை வழங்க முன்வந்தது கனடா

(லண்டன்)



பாகிஸ்தான் சிறுமியான மலாலாவுக்கு கனடாவின் கௌரவ குடியுரிமை வழங்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. பாகிஸ்தானில் பெண் கல்விக்காகக் குரல் கொடுத்த மலாலா யூசப்சாய் என்ற சிறுமி தலிபான்களால் சுடப்பட்டார். இதில் பலத்த காயம் அடைந்து உயிருக்கு போராடிய அவருக்கு இங்கிலாந்து அரசு இலவச சிகிச்சை அளித்தது. தற்போது பூரண குணமடைந்துள்ள அவர் பர்மிங்காமில் உள்ள எட்க்பாஸ்டன் என்ற பள்ளியில் சேர்ந்து படித்து வருகிறார். ஆனாலும், மலாலா கொல்லப்பட வேண்டியவர் என தலிபான்கள் தொடர்ந்து மிரட்டி வருகின்றனர். இந்நிலையில், மலாலாவுக்கு கௌரவ குடியுரிமை வழங்க கனடா முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரை செய்யப்பட்டவர்களின் பெயர்களில் மலாலாவின் பெயரும் இருந்தது. சமீபத்தில் ஐரோப்பிய யூனியனின் உயரிய சகாரோவ் மனித உரிமை பரிசு மலாலாவுக்கு வழங்கப்பட்டது.

இதுதவிர பல்வேறு சர்வதேச கௌரவ விருதுகளையும் பெற்றுள்ள மலாலா சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவையும், அவரது மனைவியையும் வெள்ளை மாளிகையில் சந்தித்து உரையாற்றினார்

இந்நிலையில், மலாலாவுக்கு கௌரவ குடியுரிமை வழங்கி சிறப்பிக்க கனடா அரசு முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதுதொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு அந்நாட்டு நாடாளுமன்ற கூட்டத்தொடரின் போது வெளியிடப்படும் என தெரிகிறது.

உலகச் செய்திகள்

## மீட்பரிடம்....

அவர்களும் கர்வத்தில் (hubris). தாங்கள் தங்கள் மூளையை முற்றிலுமாக இழந்து வருகிறோம் என்பதை உணர்வதில்லை. ஆலோசகர்கள் பழைய ஜனாதிபதியைத் தேடிச் செல்கிறார்கள், வேறென்ன செய்ய முடியும் அவர்களால். ஊடகங்களும் அயர்வதில்லை. அவர்களுக்கு எந்த செய்தியும் நல்ல செய்தி தான் (அவர்கள் வியாபாரத்தைப் பொறுத்த வரை), எனவே அவர்கள் கத்துவது இப்படி மாறுகிறது

"HOW WAS NATION SO EASILY DUPED"

"WHY DID NATION IGNORE REPEATED WARNINGS BY MEDIA"

"MAJOR MEDIA FIGURES BRAVELY FOLLOW STRANGE EXODUS FROM BORDER DETERMINED TO SEE WHAT IS UP WITH THAT"

இந்தக் குறுநாவலை அமெரிக்காவின் வல்லாதிக்கப் போக்கை விமர்சிக்கும் நாவலாகப் பார்ப்பது எளிது, அதைத் தொடர்ந்து சென்றால் நாம் இந்த குறுநாவல் சொல்ல வரும் முக்கியமான விஷயங்களைத் தவற விடுவோம் அவை நாம் அனைவரும் நினைவில் கொள்ளவேண்டியவை. ஒன்று, நம்மிடையே பரவலாக உள்ள, ஒரு மீட்பரை எதிர்நோக்கி இருக்கும் மனப்பான்மை. குறிப்பாகச் சில அசாதாரணச் சூழல்களில், யாராவது பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன்வந்தால், அவரையே நாம் மீட்பராக உருவகப்படுத்தி ஆட்டு மந்தை போல் அவர் பின் செல்வது. அனைத்து சர்வாதிகாரிகளின் ஏற்றத்திற்கு, மக்கள் கேள்வி கேட்காமல் இருக்கும் தன்மையே அடிப்படைக் காரணி.

நாம் முக்கியமாக நினைவில் கொள்ள வேண்டிய இன்னொன்று என்னவென்றால், மானுட விரோதப் போக்கு என்பது எப்போதும் முழுமையாக அழிவதில்லை. அது வேறு, வேறு ரூபங்களில், பல வண்ண முகமூடிகள் அணிந்து, புதிய கொள்கைகளை மேலங்கியாகக் கொண்டு வரலாம், அல்லது ஒரு நீண்ட உறக்கத்தில் (hibernation) கூட இருந்து, எப்போது வேண்டுமானாலும் உயிர்த்து எழலாம். அதனால் தான் வரலாற்றின் அனைத்து காலகட்டங்களிலும் பல .:.பில்கள் தோன்றி வந்திருக்கின்றனர்.

எனவே ஒரு யுடோபியாவைக் கற்பிதம் செய்வதை விட, நாம் இத்தகைய மானுட விரோத செயல்பாடுகள் குறித்து விழிப்பாக இருப்பதே அவசியம். ஏனென்றால் யுடோபியா என்பது சாத்தியமற்றது, ஆனால் விழிப்புடன் இருப்பது நம் கையில் உள்ளது. இது அவநம்பிக்கை (pessimism) அல்ல, யதார்த்தம்.

# மோடி பிரதமரானால் மகிழ்ச்சி அடையும் அத்வானி

(அகமதாபாத்)



நரேந்திர மோடி பிரதமரானால், நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன், என பா.ஜ., மூத்த தலைவர் அத்வானி கூறினார்.

குஜராத் முதல்வர் நரேந்திர மோடி, பா.ஜ., பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதற்கு, அக்கட்சியின் மூத்த தலைவர் அத்வானி, கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். நரேந்திர மோடியை சந்திப்பதையும், அத்வானி தவிர்த்து வந்தார்.

இந்நிலையில், குஜராத் மாநிலம், அகமதாபாத்தில், நடந்த கூட்டத்தில் அத்வானி பேசியதாவது

நரேந்திர மோடி, வழக்கமான அரசியல் தலைவர் அல்ல. அவரிடம் சில சிறப்பம்சங்கள் உள்ளன. எந்த விஷயத்தையும், எப்போதுமே புதிதாக சிந்திப்பார். நரேந்திர மோடி தலைமையிலான குஜராத் மாநில பா.ஜ., அரசை, இந்தியாவில் உள்ளவர்கள் மட்டுமல்லாமல் வெளிநாடுகளில் உள்ளவர்களும் பாராட்டுகின்றனர். இது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. அடுத்த லோக்சபா தேர்தலில் பா.ஜ. தலைமையிலான தே.ஜ., கூட்டணி வெற்றி பெற்று நரேந்திர மோடி பிரதமரானால் நான் மகிழ்ச்சி அடைவேன். எனத் தெரிவித்தார்.

# தீயில் எரிந்தது தென்னந்தோப்பு



(அச்சுவேலி)

ஆவரங்கால் பகுதியில் உள்ள தென்னந்தோட்டம் ஒன்று தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று மதியம் 1.00 மணியளவில் ஆவரங்கால் நவோதயா வீதியில் இடம்பெற்றுள்ளது. இத் தீ பரவல் சம்பவத்தால் அப்பகுதி புகை மண்டலமாகக் காணப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக கூறப்படுவதாவது. அருகில் உள்ள காணிக்காரர் தனது காணியினை துப்புரவு செய்து தீ முட்டியுள்ளதாக கூறப்படுகிறது. தீ மூட்டியவர் மதியச் சாப்பாட்டிக்கு வீடு சென்றதாகவும். காய்ந்திருந்த புல்லில் பட்டு தீ அருகில் உள்ள தென்னங் காணிக்குள் பரவியுள்ளது.

இதனை கண்ட அயலவர்கள் உடனடியாக தீயினை அணைக்க முற்பட்டும் பாரிய தீயுடன் கூடிய புகை மண்டலம் அதிகமாக காணப்பட்டதால் கண் எரிச்சலுடன் கூடிய தீயின் வெக்கை காரணமாக பரவிய தீயினை கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதன் போது வீதி அபிவிருத்தி வேலையில் ஈடுபட்ட தனியார் தண்ணீர் பவுஷர் மூலம் நீர் கொண்டுவரப்பட்டும், சதுப்பு நிலம் காரணமாக வாகனம் உட்செல்லமுடியாமல் போனதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச் சம்பவத்தில் அதே பகுதியினை சேர்ந்த கந்தன் கணபதி என்பவருடைய 15 பரப்புக் காணிக்குள் காணப்பட்ட பயன்தரு நிலையில் இருந்த 85 தென்னம்பிள்ளைகள் முற்று முழுதாக எரிந்து நாசமாகியுள்ளது.

யாழ். குடாநாட்டில் இப்படியான சம்பவம் ஒன்று இடம்பெற்றது இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது. இச் சம்பவம் தொடர்பாக காணி உரிமையாளரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (15)

# வீதிகளுக்கு பெயர்ப்பலகை; தென்மராட்சியில் துரிதம்




(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகளுக்கான பெயர்ப்பலகைகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

எஸ்லோன் நிறுவனத்தின் அனுசரணையுடன் இப்பெயர்ப் பலகைகள் கடந்த சில நாட்களாக மேற்படி நகர சபையின் எல்லைக்குட்பட்ட சிறு வீதிகளுக்குப் பொருத்தப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் வீதிகளை மிக இலகுவாக அடையாளம் கண்டு கொண்டு தமது தேவைகளை மக்கள் பூர்த்தி செய்துகொள்ள இலகுவாக இருக்கும் எனப் பல்வேறு தரப்பினரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (இ)

# தங்க நகை மோசடி; சந்தேக நபர் மீது வழக்கு

(மன்னார்)

மன்னார் விடத்தல் தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிநேகிதர் வீட்டில் தங்கியிருந்து இரண்டரைப் பவுண் நகையைக் கொள்ளையடித்துச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய பெண்ணுக்கு மன்னார் நீதிமன்றம் 14 நாட்கள் வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

குறித்த பகுதியில் சிநேகிதர் வீட்டில் வாழ்ந்த குறித்த பெண் இரண்டரைப் பவுண் நகைகளைத் திருடிச் சென்றுள்ளார். இச்சம்பவம் 5 மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற நிலையில் குறித்த பெண்ணை பொலிஸார் நேற்று மன்னார் நகரப் பகுதியில் வைத்துக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரணை செய்த மன்னார் நீதிபதி குறித்த பெண்ணை 14 நாட்கள் வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (113)

# மருத்துவர்கள் உள்நாட்டில் இனி கட்டாய சேவை

மருத்துவ மாணவர்கள் டாக்டர் பட்டம் பெற்றதன் பின்னர், நாட்டில் 5 வருடங்களேனும் சேவையாற்ற வேண்டும் என்று, அவர்கள் மருத்துவ பிரிவுக்கு இணையும் போதே ஒப்பந்தம் செய்துக் கொள்ள வேண்டும் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மருத்துவ கல்வியை பயின்றவர்களுக்கு எம்.பி.பி.எஸ் போன்ற பட்டங்களை வழங்க நாங்கள் முயற்சிக்கும் போது, அவர்களை காணமுடிவதில்லை. 50 இற்கும் மேற்பட்டவர்கள் எங்களுக்கு அறிவிக்காமலேயே வெளிநாடுகளுக்கு சென்று விடுகின்றனர்.

எங்களிடம் எந்தவொரு ஒப்பந்தங்களும் இல்லை. இந்த நிலையில் சரியாக செயற்பட வேண்டுமாயின் மருத்துவ மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் நுழைவைப் பெறும் போதே 5 வருட கல்வியின் பின்னர் மேலும் 5 வருடங்கள் உள்நாட்டிலேயே பணிபுரிய வேண்டும் என்று ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்படி நடைமுறை எதிர்காலத்தில் கண்டிப்பாக அமுல் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## முல்லையில்...

மேலதிகமாக 80 வீடுகள் அமைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதேவேளை, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பெண்களை தலைமையாகக் கொண்ட குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் 5 அங்கத்தவர்கள் கொண்ட குடும்பங்கள் என்ற அடிப்படையில் 350 மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இதுவரையிலும் 168 மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பணவீக்கம் வீழ்ச்சி

நாட்டில் பண வீக்கம் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த 56 மாதங்களில் பணவீக்கச் சுட்டெண்ணை ஒற்றை இலக்கத்தில் பேணுவதற்கு அரசாங்கத்தினால் முடிந்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் நிதிக் கொள்கை வெற்றி பெற்றுள்ளதால் பண வீக்க சுட்டெண்ணை ஒற்றை இலக்கத்தில் பேண முடிந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. கடந்த செப்ரெம்பர் மாதம் இலங்கையின் பண வீக்கம் 6.2 வீதமாக காணப்பட்டது. பண வீக்கம் தொடர்பான எதிர்கால இலக்குகளும், தொடர்ந்தும் சாதகமான போக்கில் இருப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு பொருட்களின் விலையேற்றம் தடுக்கப்பட்டமை தேசிய விநியோக துறையில் தடைகள் வீழ்ச்சியடைந்தமை உள்ளிட்ட பல்வேறு காரணங்கள் பண வீக்கம் வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்ததாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அடுத்த வருடம் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக நிதிக் கொள்கையில் தளர்வு போக்கை கடைப்பிடிக்கும் சூழல் காணப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## எதிர்க்கட்சி...

யின் ஏழு உறுப்பினர்களும் முஸ்லிம் காங்கிரஸின் ஒரு உறுப்பினரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு அலரிமாளிகையில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றது.

ஐ.ம.சு.மு.வின் பட்டியலில் போட்டியிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன், ஈ.பி.டி.பி. சார்பில் தெரிவுசெய்யப்பட்டுள்ள கந்தசாமி கமலேந்திரன், வவுனியா மாவட்டத்தில் வெற்றிபெற்ற ஏ.வி.தர்மபால செனவிரட்ன, மற்றும் ஏ.ஜயதிலக்க, மன்னார் மாவட்டத்தில் தெரிவான ரிப்கான் பதியுதீன், கிளிநொச்சி மாவட்டத்தில் வெற்றிபெற்ற ஈ.பி.டி.பி. உறுப்பினர் வை.தவநாதன், முல்லைத்தீவில் வெற்றி பெற்ற அஹமட் லெப்பை முஹமட் ஜனுபர், ஆகிய ஏழு பேரும் மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் வெற்றிபெற்ற ஹபிபூ முஹமட் ராசிக் ஆகிய எட்டுப்பேரே நேற்று ஜனாதிபதி முன்னியில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

# சித்தியடைந்த மாணவர்களுக்கு காத்திருக்கின்றன வெகுமதிகள்

## ஊழியர் நம்பிக்கை நிதியம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகளான சுமார் 7 ஆயிரம் பேருக்கு வெகுமதிகள் வழங்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை தீர்மானித்துள்ளது.

இதன்படி இவ்வாறு தகுதியான பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் 15 ஆயிரம் ரூபா வெகுமதி வழங்க நிதி திட்டமிடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 21 ஆம் திகதியில் இருந்து நவம்பர் மாதம் 22 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களை இலக்கம் 70, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு வருவதன் மூலமும், www.etfb.lk என்ற இணையத் தள முகவரிக்கும் சேர்த்துக் கொள்ள முடியும்.

மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை நவம்பர் 29 ஆம் திகதிக்கு முன்னர் புலமைப்பரிசில் அலுவலர், புலமைப்பரிசில் பிரிவு, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச்சபை, இல.92 கிருளை வீதி, நாரஹென்பிட்டி, கொழும்பு 5 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமும், நேரடியாகவும் கையளிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## மாகாண....

கிழமை நடைபெறும். இந்த அமைச்சரவைக்கூட்டத்தில் மாகாண முதலமைச்சர்கள் சகலரும் பங்கேற்பர் என்றும் அந்த தகவல்கள் தெரிவித்தன.

வடமாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரனும் இந்த அமைச்சரவைக்கூட்டத்தில் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## நாடு முழுவதும்...

மாலை வேளைகளில் நாடு முழுவதும் மழை பெய்யலாம் எனவும் அவர் கூறினார்.

இதற்கிடையில் இன்றையதினம் கொழும்பு, அநுராதபுரம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், காலி, கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி, திருகோணமலை மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் மாலை அல்லது இரவில் கடுமையான மழை பெய்யக்கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## மின்னல் தாக்கி...

மரணமடைந்துள்ளார். கடும்மழை பெய்துகொண்டிருந்த போது குறித்த பெண் மண்வெட்டியைக் கையில் வைத்துக்கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நெல்லியடி விபத்தில் முதியவர் காயம்

(நெல்லியடி)

நெல்லியடி எரிபெருள் நிரப்பு நிலையம் பகுதியில் நேற்று மாலை 6.35 மணிக்கு இடம்பெற்ற வீதிவிபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அல்வாயைச் சேர்ந்த எஸ்.கிட்டிணபிள்ளை (வயது -70) என்ற சலவைத் தொழிலாளி தனது துவிச்சக்கர வண்டியில் தொழில் முடிவடைந்து வீடு சென்றுகொண்டிருந்தபோது யாழ். - பருத்தித்துறை வீதியிலிருந்து குறுக்கு வீதிக்கு திருப்ப முற்பட்டவேளை மோட்டார சைக்கிளில் மோதுண்டு இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

துவிச்சக்கர வண்டி கடும் சேதமடைந்துள்ளதுடன், மோட்டார் சைக்கிளை செலுத்திவந்தவருக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளது. காயமடைந்த முதியவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (18)

# தபால் ஊழியர்கள் அசமந்தம்; கல்வியற் கல்லூரி மாணவர்கள் பாதிப்பு

(வவுனியா)

வவுனியா கல்வியற் கல்லூரி பிரிவு ஒன்றிற்கான நேர்முகத்தேர்வு நாளை நடைபெறவிருப்பதாகவும் அதற்கான நேர்முக கடிதங்கள் இன்னும் விநியோகிக்கப்படாமல் வவுனியா தபாலகத்தில் தேங்கி கிடப்பதாகவும் மாணவர்கள் விசனம் தெரிவித்தனர்.

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியின் கட்டடத்தில் இயங்கும் இளமாணி கற்கைப்பீடத்திற்கு புது மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்காக வடமாகாணத்திலிருந்து 96 பேர் நேர்முகத் தேர்வுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நேர்முகத்தேர்வு நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருகின்றது.

இந்த நேர்முகத் தேர்வுக்கான கடிதங்கள் மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அந்த பிரிவு தெரிவித்துள்ள போதிலும் அந்தக் கடிதங்களே தங்களுக்கு கிடைக்கவில்லை என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட மாணவர்கள் வவுனியா தபால் நிலையத்திற்கு சென்று வினவியபோது நேர்முகத்தேர்விற்கான கடிதங்கள் தபாலகத்தில் கிடப்பில் இருந்தமை தெரியவந்தது.

இது தொடர்பாக வவுனியா தபால் நிலையத்தினரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, இது எங்கள் ஊழியர்களினால் விடப்பட்ட தவறு என்றும், வ்வுனியா மாவட்ட மாணவர்களுக்கான கடிதங்கள் உடனடியாக ஒப்படைக்கப்பட்டதுடன், வடமாகாணத்தின் பிறமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கடிதங்கள் அந்தந்த தபால் நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெயர் குறிப்பிடவிரும்பாத அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# மக்களின் ஆணையை மதித்து எமது சேவையை தொடர்வோம்

(கொழும்பு)

தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையை மதித்து எமது மக்களுக்கான சேவையை தொடர்ந்தும் தயக்கமின்றி முன்னெடுத்துச்செல்வோம் எனறு வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கந்தசாமி கமலேந்திரன் தெரிவித்தார்.

நேற்று மாலை அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்டு வெற்றியீட்டிய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் ஏழு உறுப்பினர்கள் உட்பட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த ஒருவருமாக மொத்தம் எட்டு பேருமே ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றனர்.

பதவியேற்ற பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் வடமாகாணசபை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள கந்தசாமி கமலேந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,


தாம் மக்களின் ஆணையினை மதித்து ஏற்று நடக்கவுள்ளதாகவும் தமது மக்கள் சேவை என்றும் தொடரும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் பொறுப்புக்களை உணர்ந்தும், நடைமுறை அரசியல் யதார்த்தத்தையும் புரிந்து கொண்டும் வடக்கு மாகாண சபையை செயலூக்கமுள்ளதோர் சபையாக நடத்திச் செல்ல எமது அனுபவப் பகிர்வுகளையும் தேவையான பொழுதில் ஆளுங்கட்சிக்கு நாம் வழங்குவோம்.

கடந்த காலத்தில் வடக்கு மாகாண சபை ஒன்று இல்லாத சூழலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் எமது செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் வழிநடத்துதலில் மத்திய அரசுடன் இணக்கப்பாட்டுடனும், புரிந்துணர்வுடனும் செயற்பட்டு எமது மக்களுக்கும், எமது மாகாணத்துக்கும் அளப்பரிய சேவைகளைச் செய்து வந்துள்ளோம். அன்று எமது கட்சி கூறிய யதார்த்தத்தை இன்று முதலமைச்சர் கூறுவதை நாம் பெரிதும் வரவேற்கின்றோம்.

இதையே நாம் இணக்க அரசியல் என்று கூறினோம். இதனூடாகவே எமது மக்களின் வாழ்வை தூக்கி நிறுத்த முடியும். அழிந்துபோன எமது வாழ்விடங்களையும் புதுப்பொலிவுடன் மீளக்கட்டி எழுப்ப முடியும். இந்த யதார்த்தையே நாம் கூட்டமைப்பினருக்கும் கூறி வந்துள்ளோம். தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு தீர்வொன்றைக்காணும் முயற்சியிலும் இதே வழிமுறையே வெற்றியளிக்கும். இதை தற்போது உணர்ந்திருக்கும் வடமாகாண முதலமைச்சரின் முயற்சிகளுக்கு எமது ஆதரவு எப்போதும் இருக்கும்.

எமது அரசியல் உரிமைக் கோரிக்கையின் நியாயத்தை பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்கும், மத்திய அரசுடன் பகை தவிர்த்து எமது மக்களுக்கான தேவைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கும் அரசுடன் புரிந்துணர்வுடனான செயற்பாடு ஒன்று அவசியம். முதலமைச்சரும் கூட்டமைப்பின் தலைமையும் அதை உணர்ந்திருப்பது போல் கூறியிருக்கின்றனர். மன உறுதியோடு இவ்வழி முறையில் அவர்கள் பயணிக்கும் போது நாமும் அதை முழு மனதுடன் வரவேற்று எமது ஆதரவினை வெளிப்படுத்துவோம்.



இந்த வேளையில் கட்சி பேதங்களுக்கு அப்பால் ஒவ்வொருவரும் புரிந்துணர்வுடன் ஒத்துழைப்பதனூடாகவே வெற்றிகரமான பயணத்தை செய்யமுடியும். நடைமுறைச் சாத்தியமான முயற்சிகளுக்கும், மக்களுக்கான சேவைக்கு முன்னுரிமையளிக்கும் பயனுள்ள வேலைத்திட்டங்களுக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய எமது ஒத்துழைப்பு என்றும் இருக்கும் என்று பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு வடமாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் கந்தசாமி கமலேந்திரன் ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றதன் பின்னர் கருத்துரைக்கையில் தெரிவித்தார்.

நேற்றைய நிகழ்வில் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, சுசில் பிரேம ஜெயந்த, ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன், மைத்திரிபால சிறிசேன, நிமால் சிறிபால டி சில்வா, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க உள்ளிட்ட பலரும் பங்கு கொண்டனர்.

# மீன் மழை

மொனராகல சுதுவதுராவ பிரதேசத்தில் நேற்று மீன் மழை பெய்துள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர். [illegible] நிமிடங்கள் மழை பெய்துள்ளது. அங்காங்கே மழையுடன் மீன்கள் வந்து விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இலக்கு நோக்கிய அபிவிருத்தி தென்கொரியா பாராட்டு

(கொழும்பு)

அண்மைக்காலங்களில் இலங்கையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் பாராட்டத்தக்கவை என்று தென்கொரிய வெளிவிவகார அமைச்சர் யுன் பயுன்க் சீ தெரிவித்துள்ளார்.

இணையத்தளம் தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ளும் நோக்கில் தென்கொரியா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸை சியோலில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு பாராட்டியுள்ளார்.

இலங்கையுடனான உறவை மேம்படுத்துவதுடன் வழங்கி வரும் உதவிகளை விரிவுபடுத்த அந்நாட்டு அரசு விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடிய வெளிவிவகார அமைச்சர்கள் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கான உதவிகளை அதிகரிப்பது தொடர்பாக கூடிய கவனம் செலுத்தினர்.

இச்சந்திப்பின் போது கொரிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனமான கொய்க்கா (koica) இலங்கையின் அடிப்படை கட்டுமான வசதிகள்- நகர அபிவிருத்தி குப்பைகளை அகற்றுதல் போன்றவற்றுக்கு நிதியுதவி வழங்கி வருகின்றமையை இலங்கை வெளிவிவகார அமைச்சர் நன்றியுடன் நினைவு கூர்ந்தார். அத்துடன் இலங்கையர்களுக்கு கொரியாவில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்பது தொடர்பாகவும் அவர் நன்றி தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் 14 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் அந்நாட்டு ஜனாதிபதி பாக் கெவுன் ஹய்யையும் சந்தித்து கலந்துரையாடினர்.

# ஒரே சூலில் மூன்று குழந்தைகள்

மட்டக்களப்பு மாவட்டம், சித்தாண்டி, மாவடிவேம்பு பகுதியில் பெண்ணொருவருக்கு ஒரே சூலில் மூன்று குழந்தைகள் பிறந்துள்ளன.

சித்தாண்டி மாவடிவேம்பு கிறிஸ்தவ தேவாலய வீதியில் வசிக்கும் ஜெயக்குமார் றேணுகா என்வருக்கே இவ்வாறு ஒரே சூலில் மூன்று குழந்தைகள் பிறந்துள்ளன. இவருக்கு பிறக்கப்பட்ட மூன்று குழந்தைகளும் பெண் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது.


உ
சிவமயம்

வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன்
கல்யாண மண்டபத் திறப்பு விழாவும்
கலை நிகழ்ச்சிகளும்

காலம்: விஜய வருடம் ஐப்பசி மாதம் முதலாம் நாள் (18.10.2013) காலை 6.02 தொடக்கம் 7.32 வரையுள்ள சுபவேளை.

தலைமை: கா.தர்மகுலசிங்கம்
(தர்மகர்த்தா சபைத் தலைவர், வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)

இடம்: புதிதாக அமைக்கப்பட்ட வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கல்யாண மண்டபம், வல்வெட்டித்துறை. திறப்பு விழாவைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

வல்வைப் பொது மக்கள் மற்றும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
தர்மகர்த்தா சபை
பதிவு இல: HA/5/JA/639
வல்வெட்டித்துறை. (தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை) (C/3105)


# அமைச்சர் திஸ்ஸ பிலிப்பைன்ஸ் பயணம்

(கொழும்பு)

பெண்கள் விவகார மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சர் திஸ்ஸ கரல்லியத்த நேற்று முன்தினம் பிலிப்பைன்ஸ் நோக்கி பயணமானார்.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மனிலாவில் மாநாடு ஒன்றில் கலந்துகொள்ளவே அவர் சென்றுள்ளார்.

ஆட்கடத்தலில் இருந்து பெண்களையும் சிறுமியரையும் பாதுகாக்கும் நோக்கில் நடத்தப்படும் இந்த மாநாடு ஆசிய பாராளுமன்றங்களில் பெண்களுக்கெதிரான வன்முறையை தடுப்பதற்காக ஆண் பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலையான அமைப்பின் தலைவர் என்ற வகையிலேயே திஸ்ஸ கரல்லியத்த இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார்.

சனத்தொகை, அபிவிருத்திக்கான நாடாளுமன்ற அமைப்பு இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது. இந்த மாநாட்டில் ஆட்கடத்தல், பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பாகவும் சனத்தொகை பெருக்கத்திற்கும் இவ்வன்முறைகளுக்குமான தொடர்பு பற்றியும் அறிந்து கொள்வதே இம்மாநாட்டின் நோக்கமாகும்.

மேலும், மாநாட்டில் கலந்து கொள்ளும் நாடுகிடையிலான உறவை மேம்படுத்துவதுடன் அனுபவங்களை பகிர்ந்துகொள்ளல், பெண்களுக்கெதிரான வன்முறையை கடுமையாக எதிர்ப்பதுடன் அதனை தடுப்பதற்கான சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்துதல், ஆட்கடத்தலையும் பெண்களுக்கெதிரான வன்முறைகளையும் தடுப்பதற்காக அமைச்சர்கள் எவ்வாறு கூடிய பங்களிப்பைச் செலுத்துவது போன்ற விடயங்கள் குறித்தும் இம்மாநாட்டில் கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

பெண்கள், பெண் பிள்ளைகளுக்கெதிரான வன்முறைகள் தடுப்பதற்கு ஏனைய நாடுகள் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளினால் கிடைத்துள்ள சார்பான பெறுபேறுகளை ஆராய்ந்து அவற்றை எமது நாட்டிலும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் அமைச்சர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஒக்ரோபர் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.